# மத்தியதீபம்

## ஆண்டு மலர்

2638

2



1959

MADHYA DEEPAM — ANNUAL




*Choose*

*Always*

THE BEST —

BUY

**'STAG-HEAD' Brand**

**Tiles**

**The Best**

in

Tiles.

**PHONE:**
423

# R. SIVAKUMARAN

76, Hospital Road, ... JAFFNA.



**Buy the best** **Buy at MUNEER'S**

*For*

- Cotton & Silk Dacca Sarees
- Manipuri & Tissue Sarees and
- Quality Textiles

At

*Competitive Prices*

*Visit*

# MUNEER'S

79, 81, K.K.S. Road, — JAFFNA.

*Branch:*
36/1, Grand Bazaar,
JAFFNA.

*Tele* { *Phone:* 404
*Grams:* 'INSAF'

35382


# YARL METAL INDUSTRIES

252, K. K. S. Road. :: JAFFNA.

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும்

"யாழ் மார்க்"

உத்தரவாதமுள்ள

அலுமினியப் பாத்திரங்களையே

வாங்குங்கள்.

சகலவிதமான "எலெக்ரோ பிளேட்டிங்" வேலைகளும்

குறித்த நேரத்தில் உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.

போன்: 260 தந்தி: 'METAL' யாழ்ப்பாணம்

## யாழ் மெட்டல் இன்டஸ்றீஸ் தொழிற்சாலை

252, கே. கே. எஸ். வீதி, :: யாழ்ப்பாணம்.



போன்: 519

உங்கள் அன்பிற்கும்

அபிமானத்திற்கும் உரிய

நகை வியாபாரிகள்.

# ஏ. கே. எஸ். அன் சன்ஸ்

## "நகை மாளிகை"

63, 65, கன்னாதிட்டி, ... யாழ்ப்பாணம்.

நவநாகரிகத்துக்கேற்ற

* புடவைத்தினிசுகள்
* அன்பளிப்புப் பொருட்கள்
* சாய்ப்புச் சாமான்கள்
* அலங்காரப் பொருட்கள்
* சப்பாத்து வகைகள்
* றங்பெட்டி, சூட்கேஸ்
* முடிமயிர்வகைகள்

இன்னும் உங்கள் தேவை எதுவானுலும் யாழ்ப்பாணத்தில் நம்பிக்கையுடன்
சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய இடம்

# கணேசன் ஸ்ரோர்ஸ்

[ *Prop:* க. செ. கனகசபை ]

78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

*For all your Requisites in:*

Clean Curry Stuffs & Coffee Powder, Shop Goods, Best Ghee, Gram Flour, Atta Flour, Oilman Stores and Kankesan Brand Cement.

*Specialist in:*

Exercise Books, Drawing Books & All Kinds of Stationery and School Requisites.

*Stockists of:*

All NESTLE'S Products-

* MILK MAID
* NESTOMALT
* PELARGON
* MILO
* LACTOGEN
* NESCAFE
* NESPRAY
* CHOCOLATES.

# MOHAMEDALLY ABDULALLY

**5 & 7, Grand Bazaar,**
**JAFFNA.**
*Phone:* 515.

**81, Old Moor Street,**
**COLOMBO.**
*Phone:* 6569

DIAL: 286

## மார்க்கட்டில் சாமான் வாங்கவேண்டுமா?

சங்கடமான பிரச்ஷின!

யார் போவது? நேரம் ஏது?

## இதோ!

உங்கள் தேவைகட்கு நாம் உதவுகிறோம்!

## வீட்டுக்குவீடு விநியோக சேவை

விபரங்களுக்கு: விசாரியுங்கள்.

# விநோதன்ஸ் அன் கோ.,

மொத்த சில்லறை வியாபாரிகள்

106, 108, ஆஸ்பத்திரி றோட், — யாழ்ப்பாணம்.

---

Ero



மலிந்த விலையில் உயர்ந்த ரக பேனு!

## * 'ஈறோ' ஜெர்மன் பவுன்டன் பேனு *

○ சிக்கனமானது பாவனைக்குச் சிறந்தது.

○ மாணவர்க்கும் எழுத்தாளர்களுக்கும் மன நிறைவை அளிப்பது.

○ பிஸ்டன் அல்லது வாயினுல் மை நிறைக்கலாம்.

○ நாளடைவில் எழுத்தைத் திருத்தும் சக்தியுள்ள கூர் அடங்கியது.

○ பேனுவின் சகல பாகங்களும் எப்பொழுதும் எங்களிடம் கிடைக்கும்.

இப்பொழுதே ஓர் 'ஈறோ' பேனுவை வாங்கிப் பாவித்துப் பயன் பெறுங்கள்.

— எல்லா இடங்களிலும் கிடைக்கும். —

வட - இலங்கை
விநியோகஸ்தர்கள்:

# கொம்மேஷல் பிறெஸ் அன் ஸ்ரோர்ஸ்

30, பெரிய தெரு, .... யாழ்ப்பாணம்.

## சிறந்த போட்டோக்களுக்கு

தொலைபேசி:
**252**

தந்தி:
'பாரத்போட்டோ'

# பாரத் ஸ்ரூடியோ

**கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்**

MANUFACTURING JEWELLER &
DIAMOND MERCHANT.



*

*WORKMANSHIP
GUARANTEED.*

**Before Going -
Elsewhere**
*Visit*

*Our Moto is
Honesty
&
Promptness.*

# A. NALLATHAMBY

75, Kannathiddy, ... JAFFNA.

T-phone: 664

T-grams: 'KAMALAM'

**தங்கப்
பவுன் - வெள்ளி
நகைகள்
வைரக் கற்கள்
இரத்தினக் கற்கள்**
எம்மிடம் கிடைக்கும்

நவநாகரீகமான
நகைகள் கிடைக்குமிடம்

தந்தி: 'கமலம்' போன்: 664



## ஆ. நல்லதம்பி

**75, கன்னுதிட்டி, :: யாழ்ப்பாணம்.**

# மத்திய தீபம்



ஆண்டு மலர் 1959.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து" — குறள்

ஆசிரியர் :
சி. க. செல்வரத்தினம்

| தீபம்—2 | யாழ்ப்பாணம் - ஆடி, 1959 | சுடர்—1 |
|---|---|---|


## பொருளடக்கம்


எமது சாதனை! (தலையங்கம்) 7

வருக! —முருகையன் (கவிதை) 9

வாழ்த்து —அழ. வள்ளியப்பா 9

மதிப்புடன் விளங்குவாயே! (கவிதை) —ஷண்முக. குமரேசன் 10

ஈழத்துப் பத்திரிகைகள் வாழ்த்துகின்றன! 11

ஓராண்டு நிறைந்தது! 12

'கதை கதையாம் கற்பனையாம்......' —வ. அ. இராசரத்தினம் 17

இரக்கம் —வல்லிக்கண்ணன் 19

பாசம் —த. ஸ்ரீஸ்கந்தராஜா 21

உலகியலில் தமிழன் —அ. நரேந்திரன் 24

உன்னை நீ காதலிக்கிருயா? —கா. பொ. இரத்தினம் M.A. B.O.L. 26

கலைப்புலவர் க. நவரத்தினம் —கா. மாணிக்கவாசகர் 28

ஓயாத ஊடல்! (கவிதை) —'தான்தோன்றிக்கவிராயர்' 30

கற்பு —'வரதர்' 31

'சுடுகுது மடியைப்பிடி' —தேவன் - யாழ்ப்பாணம் 34

எழுத்தாளனும் இன்றைய தமிழ்ச் சமுதாயமும் (பரிசுக்கட்டுரை) —வை. இரங்கன் 35

அறி(ந்த)முகம் —'வானம்பாடி' 38

எனது அபிமான தமிழ்ச் சஞ்சிகை (சிறுவர் பரிசுக்கட்டுரை) 41

பணப்போர்வை (சிறுவர் பரிசுக்கதை) 42

அறிவு விருந்து 43

மாயப்பங்களா மந்திரவாதி (சிறுவர் தொடர்கதை) —ச. சிவகுமாரன் 44

கலைத் தெய்வம் (கவிதை) —வித்துவான் க. வேந்தனார் 46

நரியனூரின் செய்கை நமக்கு வேண்டாம் தம்பி —கனக-செந்திநாதன் 47

என்னைப்பற்றி நான்! —'தேனீ' 48

சுரைக்காயோ ஏட்டில்... (கவிதை) —'யாழ்ப்பாணக் கவிராயர்' 49

தம்பிக்கு... (2) (கடிதம்) —யோகேஸ்வரி வைத்திலிங்கம் 50

உங்களுடன் ஒரு வார்த்தை! 52

Six Records Broken! (Special Feature) 53

Results of the Meet 55



அட்டைப்படம்:
திரு. செ. பரமநாதன்


இம்மலரில் வெளியாகும் கட்டுரைகளின் கருத்துக்கு அவற்றை எழுதியவர்களேபொறுப் புடையவர்கள். கதைகளில் வரும் சம்பவங்களும், பெயர்களும் கற்பனையே.


புகைப்படங்கள்:
கே. வி. சாமி,
ஏ. பாலசிங்கம்

# ஸ்ரீலங்கா புத்தகசாலையாரின்

## சிறந்த புதிய வெளியீடுகள்

**தாவரவியல்:** ஆசிரியர் -
நா. இராமநாதன்.
கிளேஸ் பதிப்பு விலை: ரூபா 15.00
சாதாரணம் ,, ,, 10.00

**இரசாயனம்:** ஆசிரியர் -
அ. க. சர்மா (B. Sc. Lond.)
கிளேஸ் கலிக்கோ பயின்ட் ரூ. 10-00
சாதாரணம் ரூ. 8.00

**இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்:** ஆசிரியர் -
மு. இளையதம்பி B. A.
1-ஆம் பாகம் கி. பி. 1500 வரை - ரூ. 1-75
2-ஆம் ,, 1505—1796 ரூ. 1-75
3-ஆம் ,, 1796—1948 ரூ. 2 00
உலக சரித்திரம் G. C. E. வகுப்பு ரூ. 4.50
இலங்கைச் சரித்திரம் G. C. E. ,, ரூ. 4.00

**குடி இயல்:** ஆசிரியர் -
அ. விஸ்வநாதன் B. A.
7-ஆம் 8-ஆம் வகுப்புக்கு ரூ. 1-50
G. C. E. வகுப்புக்குரியது ரூ. 2.00

**சுகாதாரதீபம்:** ஆசிரியை -
திருமதி யோ. அ. சொர்ணம்
விலை: ரூ. 2-50

**மனேன்மணி வசனம்:** ஆசிரியர் -
வித்துவான் க. சொக்கலிங்கம்
விலை: ரூ. 1-25

**பரீட்சித்தலும் புள்ளியிடுதலும்:**
விலை: ரூ. 3.00

**இந்துசமயபாடம்:** ஆசிரியர் -
க. வேந்தனர்
விலை: ரூ. 3-25



உலகப் பிரக்கியாதி பெற்ற

*** ஸ்ரீமர் * வைலர் * லூசின * டமாஸ்**

*** நொறெக்ஸா * இன்விக்ரு * சில்வான * ஸ்ரேய்ஸ்**

போன்ற எல்லாவித கைக் கடிகாரங்களும்

* மேசை மணிக்கூடுகள் * பேனுக்கள்
* அன்பளிப்புப் பொருள்கள் * ரேடியோக்கள்
* அலங்காரப் பொருட்கள் * கமெருக்கள்
* சைக்கிள் அதன் உறுப்புக்கள் * டோர்ச்லைட்டுகள்

ஆகிய எல்லாவகைப் பொருட்களும்

உத்தரவாதத்துடனும் மனத்திருப்தியுடனும் பெறக்கூடிய நம்பிக்கையான இடம்

# முருகன் ஸ்ரோர்ஸ்

[உரிமையாளர்: T. பாலசிங்கம்]

140, கே. கே. எஸ். றேட், — யாழ்ப்பாணம்.

ஆசிரியர் கூறுவது:

# எமது சாதனை!



'மத்திய தீப'த்துக்கு ஓராண்டு பூர்த்தியாகி, அதன் ஓராண்டு நிறைவுமலர் வெளியாகின்றது. இப்பத்திரிகை இயங்குவதில் பங்கு கொண்ட அனைவருடன் நாமும் அளவற்ற பூரிப்பை அடைகிறோம். இந்த ஓராண்டு காலமாக, நாம் இப்பத்திரிகையின் வாயிலாக சாதித்துள்ளவற்றை எண்ணிப் பார்ப்பது எமக்கும் மனநிறைவை அளிக்கும் என நம்புகிறேன்.

இது ஓர் இலட்சியப் பத்திரிகை. இதன் முதலிதழிலேயே, ஆசிரியர் 'இலட்சியமற்ற வாழ்க்கை, குறிக்கோளற்ற பிரயாணமாகிவிடும்' எனக் கூறி இளம் உள்ளங்களில் எழுந்த இலட்சியமே இப்பத்திரிகையெனக் குறிப்பிட்டிருந்தார். இலட்சியங்கள் கைகூடுவதற்குப் பல தடைகள் ஏற்படுவது இயல்பு. எமது இலட்சியத்துக்கும் இவ்வித தடைகள் ஏற்படவே செய்தன. இவற்றை எல்லாம் வென்று, சோர்வடையாது பத்திரிகையை இயங்கச்செய்து வந்துள்ளோம். இன்று, பல விமர்சகர்கள் இதன் அம்சங்களைப் பாராட்டும் அளவுக்கு, பத்திரிகையின் தரத்தையும் அமைப்பையும் உயர்த்தி விட்டோம். இந்த அளவுக்கு எமது சாதனை பெருமை தருவதாகவே உள்ளது.

பத்திரிகைகள் மலிந்துள்ள இன்றைய தமிழ் நாட்டில் 'இன்னுமொரு பத்திரிகையாக' இதைத் தோற்றுவித்து, இன்றுள்ள பத்திரிகைத் தேக்கத்தை மேலும் பெருக்குவது எமது நோக்கமாக இருக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் உள்ள இளம் எழுத்தாளர்களையும், எழுத்தார்வம் கொண்டவர்களையும் ஊக்கி வளர்ப்பதே எமது நோக்கமாக இருந்தது. 'பெரிய' எழுத்தாளர்களே தமது சிருஷ்டி வேகத்துக்கியைய, அவர்களின் படைப்புகளுக்கெல்லாம் பத்திரிகைகள் இடமளிக்காமை கண்டு சலிப்படையும் இந்நாளில், இளம் எழுத்தாளர்களுக்கென ஒரு பத்திரிகை அவசியம் என உணர்ந்தோம். இந்த ஓராண்டு காலம், மிகக்குறுகிய காலமாக இருந்தும், இக்காலத்தில் ஓரளவுக்காயினும் மத்திய தீபப் 'பண்ணை'யில் இளம் எழுத்தாளர்கள் ஊக்கம் பெற்று வளர்ந்துள்ளார்கள். இந்த நினைவு எமக்கு மேலும் பெருமையை - இலட்சியம் கைகூடிவருகின்றது என்ற நம்பிக்கையை- அளிக்கிறது.

ஆர்வத்தைக் கொண்டு மட்டும் ஒரு பத்திரிகையை நடாத்திவிட முடியாதென்பது, பத்திரிகை உலகத்தில் பலர் கற்றுத்தந்த பாடம் பத்திரிகையை நடத்துவது வெறும் கலை மட்டுமல்ல; அது ஒரு தொழிலுங்கூட. இத்தொழில் நுட்பத்தை அறியாதவர்கள், வெறும் ஆர்வத்தை மட்டும் மூலதனமாகக் கொண்டு ஒரு பத்திரிகையை ஆரம்பித்தால், ஒரு சில ஆண்டுகளுடன் - ஏன் சில மாதங்களுடன் கூட - அது நின்று விடவே செய்யும். இதை உணர்ந்தோ என்னவோ, எமது பத்திரிகை சில மாதங்கள் மட்டுமே இயங்கும் என ஜோஸ்யம் (சாபம்?) கூறிய அன்பர்களையும் நாம் அறிவோம். இன்று அவர்களைப் பிரமிக்க வைக்கும் வகையில், இந்த ஆண்டுமலரை வெளியிடுகிறோம். இன்னும் ஒரு சில ஆண்டுமலர்களாவது வெளியிடுவோம் என்ற நம்பிக்கையும் எமக்கு இருக்கிறது. இத்தனைக்கும் நிர்ப்பந்தத்தாலோ, அல்லது வெறும் தயவாலோ எமது பத்திரிகை இயங்கவில்லை. பத்திரிகைத்துறைக்கும், அதற்கு மேலாகத் தொழில் முறைக்கும் புதியவர்களாக இருந்தும், இதழுக்கு இதழ் பெற்ற அனுபவத்தைக் கொண்டு பத்திரிகையை வளர்த்து வருகிறோம். இந்தவகையில், எமது பத்திரிகையின் இயக்கத்துக்கு உதவியாக உள்ள அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். அவர்களது சலியாத உழைப்பே எமது வெற்றியின் இரகசியம் என எண்ணுகின்றேன். இவர்கள் அனைவரும், பத்திரிகையை நடத்துவதில் பெற்ற அனுபவம், வாழ்க்கையில் சில பதவிகளை அடைவதற்கு மட்டும் உதவாது, வாழ்க்கையில் சாதாரணமாக வெற்றியடைவதற்கு வேண்டிய சகிப்புத்தன்மை முதலிய பண்புகளை நிறைய இவர்களுக்கு அளித்துள்ளது.

எமது பத்திரிகைக்கும், ஆரம்பத்தில் பிற பத்திரிகைகட்கு ஏற்படுவது போன்ற 'சோதனைகள்' ஏற்படத்தான் செய்தன. ஆனால் இவற்றிலெல்லாம் கலையரசி எமக்கு வெற்றிகிட்டச் செய்துள்ளாள். எனவேதான், **கலையரசிக்கே எமது ஆண்டுமலரைச் சமர்ப்பித்து, இப்பத்திரிகை மேலும் பன்னெடுங்காலம் இயங்க அவள் கருணை எமக்கு இருக்கும் எனப் பிரார்த்திக்கிறோம்.**

*Whatever your requirements are*

- BUILDING MATERIALS
- DOMESTIC APPLIANCES
- AGRICULTURAL TOOLS AND MACHINERY
- PUMPS (DOMESTIC AND AGRICULTURAL)
- RICE HULLERS AND POLISHERS
- GRINDING MILLS
- NATIONAL ENGINES
- OUTBOARD MOTORS ...

Etc.

**ASK**

**Walkers**

*at*

**No. 420, Hospital Road,**

**JAFFNA.**

# வாழ்த்துக்கள்

## வருக!

— முருகையன் —

இளமை மனநினைவின் எழிலின் அருமைகளை
இனிய தமிழ் நடையில் வெளியிட,
இதய நெகிழ்வுகளின் நெளிவு சுளிவுகளின்
இயல்புகளை மொழியில் எழுதிட,
வளமிகுந்து பெரும் ஒளி சிறந்த கதை
மலருகின்ற நல வழி செய,
ம(த்)திய தீபமென வளருமாத இதழ்
வருக! மாணவர்கள் மகிழவே.

சிறுவர் பாடுகிற, தெளிவொ டோடுகிற
திறமையார்கவிதை பூண்பதாய்,
சிறுகதாமணிகள் அணிவதால், அருமை
திகழவே புகழ்கள் காண்பதாய்,
மறுஇலாதபுது நடையிலே, மகிமை
மலிவியாச நல மாண்பொடே
ம(த்)திய தீபமென வளருமாத இதழ்
வருக! மாணவர்கள் மகிழவே.

அணுவில் நுழை திறமை, அகல விரி வலிமை,
அமையும் அறிவியலை அனைவரும்
அறிய வகை புரியும் எளிய மொழிபயிலும்
அரிய தரமுடைய கட்டுரை,
மணியில் ஒளியைநிகர் உணர்வு பெருகுகிற
வழியில் அழகுபல பொலிவதாய்,
ம(த்)திய தீபமென வளரு மாதஇதழ்
வருக! மாணவர்கள் மகிழவே.

பழைய பழவழியில் விழுவதென அசையும்
பசிய தமிழ் உயிர்கொண் டுயர்வுறும்
பணிகள் பலபுரியும் இணையில் விழைவுகளின்
பலித கதை இதென ஒளிர்வதாய்,
வளைவு நிமிர்வுபெற இளமை உயிர்பொலிய
வருக சிறுவர் இதழ்; வருகவே!
ம(த்)திய தீபமென வளரு மாத இதழ்
வருக! மாணவர்கள் மகிழவே.

கலைகள் பல நுகரும் உணர்வு—மறுமலர்வு
கவிதை சுவைஅறியும் உயிர் அவா,
கவினில் இதயமது பதியும் ஒரு புதுமை,
கடமை மறதியறி யாநிலை,
மலையை நிகருகிற உறுதி, அறநெறிகள்
மதியில் உறவிரியும் உணர்வொடே
ம(த்)திய தீபமென வளருமாத இதழ்
வருக! மாணவர்கள் மகிழவே.

## அழ. வள்ளியப்பா

அவர்களின்

### வாழ்த்து

'மத்திய தீப'த்தின் சுடர் கண்டேன். ஒளிமிக்க, சுவைமிக்க பல விஷயங்களைக் கண்டு இன்புற்றேன். பள்ளிக்கூட மாணவர்கள் நடத்துவது இப் பத்திரிகை என்பதைக் கேட்டு வியப்புற்றேன். அவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளது. இதன் ஆசிரியருக்கும், அவருக்குத் துணையாக நின்று உதவுவோருக்கும் என் வாழ்த்துக்கள்!

யாழ்ப்பாணம்,
8—7—'59

அழ. வள்ளியப்பா

❋

# மதிப்புடன் விளங்கு வாயே!

— ஷண்முக. குமரேசன் —

●

எழுந்திடும் எண்ணந் தன்னை எழுத்தினில் இனிது மாற்றிப்
பழுதிலா இளைஞர் தொண்டு புரிந்திடப் பாதை காட்டும்
மத்திய தீபம் என்றும் வளர்ந்தொளி காட்டி நிற்க
நித்திய நிமலன் ஆசி வேண்டுவன் நெஞ்சி னாலே.

மத்திய நற்கல்லூரி மாண்புடன் திகழுங் காலை
சத்தியம் போற்றும் அன்பர் தயவுகூர்ந் தறிவுப் பாலை
நித்தியம் ஊட்டி உன்னை நினைவினாற் பேண நீயும்
மத்திய தீப மாக மதிப்புடன் விளங்கு வாயே!

அறிவியல் உண்மை சாற்றி அறிஞரின் கருத்தை யெல்லாம்
நறையென நல்கி நீயும் நந்தமிழ் இளைஞர் போற்ற
நிறையென ஆண்டும் ஒன்று நேர்த்தியாய்ப் பூர்த்தி செய்து
குறையிலா திலங்கு கின்றாய்; கோதிலா நன்மை செய்வாய்!

இலக்கிய ஆர்வங் கொள்ள இனியநன் னூல்கள் ஆய்ந்து
சொலற்கருங் கேள்விச் செல்வம் தொல்பெரு மொழியிற் பெற்று
நிலைத்திடும் எண்ணந் தன்னை மாணவர் நினைவு கூர்ந்து
பலப்பல வழியிற் றொண்டு பண்புடன் ஆற்றச் செய்வாய்!

நாமகள் அருளுஞ் செந்தேன் நாவலர் பொழிந்த சொற்றேன்
பூமகள் விருந்தென் றுண்ணப் புதுமையாய் உதவும் எங்கள்
தோமறு நூல்கள் தோன்றும் கலைபயில் கழகந் தன்னிற்
பாமலர் மணமும் வீசிப் பாங்குடன் பொலிந்து நிற்பாய்!

# ஈழத்துப் பத்திரிகைகள் வாழ்த்துகின்றன!

'மத்திய தீப'த்தின் ஓராண்டு நிறைவை யொட்டி வெளிவரும் இம்மலருக்கென சில பிரபல ஈழத்துப் பத்திரிகைகள் அனுப்பியுள்ள செய்திகளைக் கீழே தருகிறோம் :

## 'வீரகேசரி' வாழ்த்துகிறது!

"......யாழ்ப்பாண மத்திய கல்லூரி இளம் எழுத்தாளர் சங்கத்தினர் வெளியிட்டு வரும் மாத இதழ் ஓராண்டு இலக்கியச் சேவையைத் திறமையுடன் செய்து முடித்து ஆண்டுமலர் வெளியிட இருப்பதைக் கேட்க மகிழ்ச்சி, தெய்வத்தமிழ் மொழி வளம் பெற்று வாழவேண்டுமானால் இளம் எழுத்தாளர்களை இலக்கியப் பணியில் ஊக்குவிப்பது அவசியமென்பதை உறுதியாக நம்புகிறவன் நான். இளம் எழுத்தாளர் நாட்டின் அரும் பெரும் செல்வங்கள். இன்றைய உலகில் ஏற்பட்டுவரும் சூறுவளி மாற்றங்களுக்கு அமைய எழுத்து, கருத்து, நடை ஆகியவற்றையெல்லாம் மாற்றியமைத்து வளைந்து கொடுத்து வளம் பெறும் பிறநாட்டு மொழிகளைப் போல நம் தமிழ் மொழியும் சிரஞ்சீவித்துவம் பெறவழி வகுப்பவர்கள். தங்கள் நன் முயற்சியும் நம் இலக்கியப் பொதுப் பணியும் தமிழ் மொழியை நசுக்கி ஒடுக்க முயற்சிக்கும் சக்திகளுக்கு நல்லதொரு பாடத்தைப் படிப்பித்து வைக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை."

(ஒப்பம்) கே. வி. எஸ். வாஸ்.

## 'கலைச் செல்வி' வாழ்த்துகிறது!

"......யாழ் - மத்திய கல்லூரி மாணவர்களின் இலக்கிய ஆர்வம், கலைப்பற்று, எழுத்துத் திறன் ஆகியவற்றை ஒவ்வொரு மாதமும் எடுத்தியம்பித் தமிழ்வாசகர்களை மகிழ்வித்து வரும் "மத்திய தீபம்' விரைவில் ஆண்டுமலராக மலரப் போகின்ற செய்தி பெருமையையும் பூரிப்பையும் கொடுக்கின்றது.

வருங்கால எழுத்துலகை வளம்படுத்த இப்போதிருந்தே எண்ணற்ற எழுத்தாளர்களைத் தயாராக்கி வரும் "மத்திய தீபம்" நீண்ட நெடுங்காலம் நிலைத்து நின்று தமிழ்ப் பணிபுரிவதாக."

(ஒப்பம்) சி. சரவணபவன்

## 'ஈழநாடு' வாழ்த்துகிறது!

"வாழ்த்துக்கள். மாணவர்களின் அறிவுச் சுடராக விளங்கும் 'மத்திய தீபம்' ஓராண்டு நிறைவுறுவதை அறிந்து பெரு மகிழ்ச்சியடைகின்றேன். சிந்தைக் கினிய கட்டுரைகள், சிறந்த கதைகள், இலக்கியச் சுடர்கள், கவிதைகள் என்பன மாணவர் தீபத்தில் வெளியாகி வருவது அனைவருக்கும் அரிய விருந்தாகும்.

மத்திய தீபம் தமிழ்ப் பேசும் மாணவர்களின் கலங்கரை விளக்கமாக ஒளிரவேண்டுமென ஆசைப்படுகின்றேன். தங்கள் முயற்சி வெல்க!"

(ஒப்பம்) இராஜ. அரியரத்தினம்.

## 'சுதந்திரன்' வாழ்த்துகிறது!

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இளம் எழுத்தாளர் சங்கத்தின் வெளியீடாக மலரும் "மத்திய தீபம்" என்ற மாணவர் பத்திரிகையின் சில இதழ்களைப் பார்த்து நான் பெரு மகிழ் வெய்தினேன்.

இலங்கையில் பத்திரிகைக் கலைக்கும் தொழிலுக்கும் நல்ல எதிர் காலம் உண்டு என்ற எண்ணத்தையும், வருங்காலம் சிறந்த பத்திரிகையாளர் பலர் நம்மத்தியில் தோன்றப் போகிறார்கள் என்ற நம்பிக்கையையும் மேற்படி இதழ்கள் எனக்கு ஊட்டின.

மாணவர்களான இளம் எழுத்தாளர்களே இவ்வளவு அருமையாக எழுதியும், அமைப்பாகப் பத்திரிகையில் அவற்றைப் பொறித்தும் காட்டுவார்களேயானால், அவர்கள் பெரியவர்களாகும்போது பத்திரிகைக் கலையும், பத்திரிகைத் தொழிலும் நிச்சயம் மேன்மையடையாமல் வேறு என்னதான் செய்ய முடியும்?

"மத்திய தீபம்" மேலும் மேலும் வளர்ந்து மலையிடைத் தீபமாக, கலை நிறை மதியமாக மாணவர் உலகமெங்கும் பொன் ஒளி பரப்ப வேண்டும் என்று மனமார வாழ்த்துகின்றேன்"

(ஒப்பம்) எஸ். டி. சிவநாயகம்,

# ஓராண்டு நிறைந்தது!

மத்திய தீபத்துக்கு ஓராண்டு நிறைந்ததுபற்றி ஓர் ஆண்டு விழா வைப்பதும், அதோடு தொடர்பு கொண்டவர்கள் குதூகலம் அடைவதும் பலருக்கு வேடிக்கையாக இருக்கலாம். ஒரு மாத சஞ்சிகை தன் வெள்ளிவிழாவை மிகுந்த பெருமிதத்துடன் சமீபத்தில் கொண்டாடியது வாசகர்களுக்கு நினைவில் இருக்கலாம். பொன்விழா, மணிவிழா – ஏன் நூற்றுண்டு விழாவைக் கூடக் கொண்டாட விருக்கும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இருக்கத்தான் செய்கின்றன. இருந்தும், எமது பத்திரிகை தனது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்கும் தகுந்த காரணம் இல்லாமல் இல்லை. 'மத்தியதீபம்', பிற பத்திரிகைகளைப் போலன்றி, மாணவர்களாலேயே மாணவர்களின் நிர்வாகத்திலேயே நடைபெறும் பத்திரிகை. இத்தகைய பத்திரிகை எதுவும் எமது நாட்டில் ஓராண்டு காலம் இயங்கியதை நான் அறியவில்லை. ஆர்வமிக்க சிலர் ஒரு பத்திரிகையைத் தொடங்கி, சில மாதங்களுள் சலிப்படைந்து, அம் முயற்சியைக் கைவிடுவது சாதாரணமான நியதி. இந்த நியதியைத் தாண்டி, ஓரளவு நிரந்தரத் தன்மை பெற்றுவிட்டது மத்தியதீபம். இந்த அளவில்தான், எமது பத்திரிகையின் ஓராண்டு நிறைவு, அளவற்ற குதூகலத்தையும், பெருமையையும் எமக்கு அளிக்கிறது.



வே. க. நடராசா
மேற்பார்வையாளர்,
'மத்திய தீபம்'

'தமிழுக்குச் சேவை செய்யும்' நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையல்ல இப்பத்திரிகை. எம்மத்தியில் உள்ள எழுத்தார்வமுள்ளவர்களை அத்துறையில் ஈடுபடச் செய்து, இளம் எழுத்தாளர்களை வளர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாக உள்ளது. இளம் எழுத்தாளர்கள் வளர்வதால், தமிழ் வளம்பெறுமானல், அந்த அளவுக்கே தமிழுக்கும் இது சேவை செய்ததாகும். சாதாரணமாக எம்மத்தியில் உள்ள இளைஞர்கள் ஆண்டுக்கொருமுறை வெளிவரும் எமது கல்லூரிச் சஞ்சிகையில் எப்பொழுதோ இரண்டொரு கட்டுரைகளை எழுதிவிட்டு வெளியேற வேண்டியவர்களாக விருந்தார்கள். பத்திரிகைகளுக்கும் இரண்டொருவர் எழுதித் தம் படைப்புக்களை அவற்றில் வெளியிட்டிருக்கலாம். இவற்றுல், உண்மையில் எழுதும் திறன் படைத்த அனைவரும் சந்தர்ப்பம் பெற்றதாகவோ, அவர்கள் திறமை அபிவிருத்தியடைந்ததாகவோ, கூறிவிட முடியாது. இந்தச்சூழ்நிலையில்தான், மத்திய தீபம் தோன்றி எழுதும் திறன் உள்ள அனைவர்க்கும் முடிந்த அளவு சந்தர்ப்பம் அளித்து, அவர்களின் ஆர்வத்தை நெறிப்படுத்தி வந்துள்ளது. இன்னும் ஒரு சிலருக்கு பத்திரிகையின் நிர்வாகத்தில் பங்கெடுத்து, அதில் ஆசிரியராகவோ, உதவி ஆசிரியராகவோ கடமையாற்றி விசேட அனுபவத்தையும் பெற உதவி வருகிறது எமது பத்திரிகை. இவ்வித அனுபவம், பிற்கால வாழ்க்கையில் — முக்கியமாகப் பத்திரிகையில் புகும்போது— அவர்களுக்கு எவ்வளவு உதவியாக விருக்கும் என்பதை நான் வலியுறுத்தத் தேவையில்லை. இந்த ஓராண்டு காலத்தில் எமது பத்திரிகை அதிகமாக எதையும் சாதிக்காவிட்டாலும், சாதித்தது அவ்வளவும் மன நிறைவையே தருகின்றது. முக்கியமாக, இன்று 'மத்திய தீபம்' வளர்த்த எழுத்தாளர்களாக ஹமீம், சி. க. செல்வரத்தினம், கா. கணபதிப்பிள்ளை, தனபாலசிங்கம், 'அகரன்' (அரியராஜா), சந்திரராஜா, நரேந்திரன், சிவகுமாரன் போன்ருர்க்கு நிச்சயம் பத்திரிகைத் துறையிலும் பொது வாழ்விலும் நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது. இன்னும் பலர் வளர்ந்து கொண்டே வருகிருர்கள் என்பது என் நம்பிக்கை.

இன்னும் ஒரு வகையில் இப்பத்திரிகை 'சேவைசெய்ய' முயன்று வந்திருக்கிறது. தமிழ் நாட்டில் பொதுவாகவும், மாணவ வாசகர்களிடையே குறிப்பாகவும் வாசனைத்தரம் குறைந்து வருவதை அவதானித்து, இயன்ற அளவு அதை உயர்த்த முயன்று வந்துள்ளது. தன் தலையங்கங்களில் இக்குறையைச் சுட்டிக்காட்டி, இக்குறை நீங்கவேண்டும் என வற்புறுத்தி வந்துள்ளது. தான் வெளியிடும் விஷயங்கள் இலக்கியத் தரமுடையனவாக விருக்க வேண்டும் என்பதில் அளவு கடந்த அக்கறை காட்டி வந்திருக்கிறது. கடந்த சில மாத இதழ்கள் பற்றி எழுத்தாள நண்பர்கள், வெறும் முகஸ்துதியாக இல்லாது உண்மையாகவே உயர்ந்த தரமுடையன வென எனக்கு எடுத்துக் கூறியுள்ளார்கள். பத்திரிகைகளும் அவ்வப்போது பாராட்டியிருக்கின்றன. வாசகர்களிடையே உயர்ந்த இலக்கியரசனையை ஏற்படுத்துவதிலும், சிறந்த இலக்கிய மேதைகளான பாரதி, தாகூர், புதுமைப்பித்தன் ஆகியோரின் நினைவைக் கொண்டாடுவதிலும் மத்திய தீபம் தன்னுலான சேவையை செய்யத்

தவறில்லை. இவ்விதமாக, இனிமேலும் 'மத்திய தீபம்' தொடர்ந்து இச்சேவைகளைச் செய்துவருமாயின், வாசகர்களிடையே நிச்சயமான ஒரு விழிப்பும், ஆழ்ந்த இலக்கியப் பற்றுதலும் ஏற்படும் என நம்ப இடமுண்டு.

ஓராண்டு நிறைவைக் கொண்டாடும் இக் குதூகலவேளையில் இப்பத்திரிகையின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் கண்ணோட்டம் விடுவது அவசியமாகிறது. கனிஷ்ட மாணவ இலக்கியக் கழகத்தின் புரவலன் என்ற வகையில், அக் கழக நடவடிக்கைகளைக் கவனித்து வரும்பொழுது நிறைய வாசிப்பதில் ஆர்வமும் கற்பனைமிக எழுதும் திறனும் உள்ள ஒரு சிலர் என் கண்ணுக்குத் தென்பட்டனர். கா. நடராசா, ச. சிவகுமாரன், வ. பாலசிங்கம், V. கணேஷ், க. நித்தியானந்தராஜா போன்றோரின் ஆர்வத்தை வளர்க்கவும், இன்னும் பலரின் திறமையை வெளிக் கொணர்வதற்கும் ஒரு பத்திரிகை—அக்கழக வெளியீடாக—வெளியிடுவது நல்லது என எண்ணமிட்டேன். இந்த எண்ணத்துக்கு கழக அங்கத்தவரிடையேயும் பலத்த வரவேற்பு இருந்தது. நா. சா. இரத்தினசிங்கம் அவர்களிடமும் இக்கருத்தை வெளியிட்ட பொழுது, அவரும் அதை வரவேற்றதுமன்றி 'மத்திய தீபம்' என்ற பெயரையும் பத்திரிகைக்குச் சூட்டிவிட்டார். கல்லச்சில் எழுதி வெளியிடுவதென முதலில் யோசித்திருந்தாலும், பின்னர் அச்சடிப்பதென முடிவாயிற்று 'அவசர நிலைமை'க் காலம் அது. எனவே மாகாண அதிகாரியின் அனுமதியும் வேண்டியிருந்தது. அதுவும் கிடைத்தது, சிறிது சிரமத்தின்பின். முதலிதழுக்கே, திரு. ராம். குமாரசாமி அவர்கள் மூலமாக விளம்பரமும் கிடைத்தது. கல்லூரியும் முற்பணமாக ஒரு தொகையை உதவியது. முதலிதழும் (8 பக்கங்கள் கொண்டதாக) வெளிவந்தது, சென்ற ஆண்டு ஜூலை 27 ஆந் திகதியன்று. ஒரு புது முயற்சி என்ற வகையில் வரவேற்பிருந்ததே தவிர, விஷயங்கள் ஏமாற்றமாக அநேகருக்கு இருந்திருக்க வேண்டும். புது அம்சங்கள் கொண்டு, 12 பக்கங்களுடன் அடுத்த மாதத்திலிருந்து வெளிவர ஆரம்பித்தது.

கல்லூரியின் உதவியை அதிகம் எதிர்பார்க்காது, கூடிய அளவு சுயேச்சையாகப் பத்திரிகை இயங்க வேண்டும் என்பதால், பல சிரமங்கள் ஏற்படவே செய்தன. அநேகமாக இப்படியான முயற்சிகள், அவற்றை நடத்துவோரின் ஆர்வம் குன்றி விடுவதால் சில மாதங்களில் நின்றுவிடுவது ஒரு நியதியெனப் பலர் எண்ணுவது, அனுபவரீதியானதும் இயல்பானதும்கூட. இக்கதி, எமது பத்திரிகைக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என சங்கல்பம் செய்து கொண்டேன். ஒருவருட காலமாவது நடத்திவிடுவது என உறுதி செய்தேன். ஆனால், நடைமுறையில் ஏற்பட்ட கஷ்டங்கள் பல இது கைகூடுமோ என ஐயுறும்படி செய்தன. மாணவர்களிடையே ஆர்வம் குறைந்து வந்ததும், விளம்பரங்கள் சேகரிப்பதில் ஏற்பட்ட சிரமங்களும் இவ்வாறு என்னை யோசிக்கும்படி செய்தன. ஆனால் வெளியே, முக்கியமாகச் சில பிரபல எழுத்தாளர்கள் காட்டி வந்த அக்கறையும் அளித்து வந்த உற்சாகமும் தொடர்ந்து பத்திரிகையை நடத்துமாறு தூண்டிவந்தன. இந்த ஆண்டு ஆரம்பத்தில் நிறுவப்பட்ட **'இளம் எழுத்தாளர் சங்கம்'** மத்திய தீபத்தைத் தொடர்ந்து நடத்த முன்வந்தது, பத்திரிகையைப் பலவித நெருக்கடிகளிலிருந்து காப்பாற்ற உதவியது. பலவகைகளில் ஆர்வமும் திறமையும் மிக்கவர்களைக் கொண்டதாலும், உண்மையிலேயே எழுத்துத் துறையில் நாட்டமுள்ளவர்களைக் கொண்டிருந்ததாலும் பத்திரிகையின் தரமும் வளர்ந்து, நெருக்கடிகள் அநேகம் ஏற்படாத வண்ணமும் மத்திய தீபம் இயங்கி வருகிறது. இன்று பத்திரிகையின் தரம் மிக உயர்ந்துள்ளது என்பதை எல்லோரும் அறிவார்கள். இத்தரத்தை யுடையதாகப் பத்திரிகை தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதே என் அவா.

இந்த ஓராண்டு காலமாக இந்தப் பத்திரிகையின் வளர்ச்சியில் எனக்கு உதவியாக விருந்த பலருள் ஒரு சிலரையாவது இங்கு குறிப்பிடுவது பொருத்தம் என நினைக்கிறேன். ஆரம்பத்திலிருந்தே எமது கல்லூரி அதிபர் டாக்டர் D. T. நைல்ஸ் அவர்கள், மாணவரின் திறமைகளை அபிவிருத்தியடையச் செய்யும் முயற்சியென்பதைஉணர்ந்து, இப்பத்திரிகைக்கு மிகுந்த



மத்திய தீப ஸ்தாபகர்கள்

ஆதரவை அளித்துவந்துள்ளார். உப அதிபர் A. E. தம்பர் அவர்கள், 'இது ஒரு வரவேற்கத்தக்க முயற்சி; இதற்கு என் ஆதரவு எப்பொழுதுமே இருக்கும்' என எனக்குத் தனியாகக் கூறியதுமன்றி, முதலிதழுக்குத் தம் ஆசியையும் தந்துதவினார். இன்றுவரையும், அவரது ஆர்வம் குன்றாது இருந்து வருகிறது. திரு. இரத்தினசிங்கம் அவர்கள், முதலிதழுக்கு அளித்த வாழ்த்துப்பாவோடு, ஒவ்வொரு இதழ் பற்றியும் தமது கருத்துக்களையும் கூறி உற்சாகப்படுத்திவந்திருக்கிறார். எனது உடனாசிரியர்களும் நண்பர்களுமான திருவாளர்கள் சி. நடராசா, ஷண்முக. குமரேசன், மனோகரன், T. I. ஆபிரகாம், கா. மாணிக்கவாசகர் ஆகியோர் விஷயதானங்கள் செய்துதவியதோடு, இன்னும் பல் வகைகளில் எமக்கு உதவியுள்ளனர். ஆங்கிலப் பகுதி பற்றி திருவாளர்கள். W. B. அழகக்கோன், V. S. கிருபைராஜா, V. D. ஜெயரட்னசிங்கம் S. பேரின்பநாயகம் ஆகியோர் அரிய ஆலோசனைகளை அளித்து வந்துள்ளனர். இவர்களைக் குறிப்பிடுவதால், மற்றைய ஆசிரியர்களை மறந்துவிடுவதென்பதில்லை. வேண்டும் போதெல்லாம், வேண்டிய உதவிகளை வழங்கி வரும் என் ஆசிரிய நண்பர்களை மறக்க முடியுமா? மாணவ முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கோடு இவர்கள் அளித்து வரும் உதவிகள் இவர்களின் விரிந்த உள்ளத்தை நன்கு புலப்படுத்தும்.

ஆனந்தா அச்சக நிர்வாகியும், பிரபல எழுத்தாளருமான 'வரதர்' அவர்கள் இப்பத்திரிகை நீடித்து வாழ்வதற்குப் பெரிதும் உதவியாகத் தோன்றுகிறது. பத்திரிகைத்துறையில் தாம் கண்ட அனுபவ உண்மைகளை எனக்குக் கூறி, நான் சலிப்படைந்த வேளைகளிலெல்லாம், உற்சாகப் படுத்திவந்தார். பல பிரபல எழுத்தாளர்களை இப்பத்திரிகையுடன் தொடர்பு கொள்ளச் செய்துதவியவரும் இவரே. அவரின் பெரிய மனசும், எழுத்தாளர்களை ஊக்குவித்து வளர்க்க வேண்டும் என்ற அவர் அவாவும் அவரோடு பழகப்பழக எனக்குப் புலனாயின. இவரைத் தவிர, எமது பத்திரிகையின் வளர்ச்சியில் ஆரம்பத்திலிருந்தே சில பிரபல எழுத்தாளர்களும் அறிஞர்களும் ஆர்வம் காட்டி வந்துள்ளனர். கவிஞர் முருகையன், கனக-செந்திநாதன், 'சிற்பி' மஹாகவி, டானியல், ஜீவா, தேவன் ஆகிய எழுத்தாளர்களும், இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர்களான திரு. வி. செல்வநாயகம், கலாநிதி சு. வித்தியானந்தன் ஆகியோரும், என் நண்பர்களான திருவாளர்கள் க. கைலாசபதி (ஆசிரியர், 'தினகரன்'), கா. சிவத்தம்பி, வீ. சுந்தரலிங்கம் ஆகியோரும் பல் வகைகளில் இப்பத்திரிகைக்கு உதவி அதன் தரத்தை உயர்த்த உதவினர். இவர்கள் தொடர்பாலேயே, இன்று இப்பத்திரிகை இத்தகைய பெருமதிப்பைப் பெற்றுள்ளது என்பது உண்மை.

பத்திரிகைக்குரிய விஷயங்களைத் தரம் பிரித்தறிவதிலும், பத்திரிகையின் ஆசிரியக் கடமைகளிலும் ஏற்படக்கூடிய சிரமங்களைவிட, அதைப் பதிப்பிப்பதிலும், விற்பனை செய்வதிலும் விளம்பரங்கள் சேகரிப்பதிலும் ஏற்படக் கூடிய சிரமங்களே அதிகம் என்பது பத்திரிகைத் தொடர்பு கொண்ட எவருக்குமே தெரியும். இவ்விதமான மிகச் சிரமமான வேலையை—முக்கியமாக விளம்பரங்கள் சேகரிப்பதை—மிகவும் திறமையாக, பத்திரிகையின் ஆரம்பகாலத்தில் R. குணராஜாவும், A. S. இராசரத்தினமும் இப்பொழுது மு. தர்மரத்தினமும, S. K. இராஜேந்திராவும் திறம்படச் செய்துவந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் எந்தப் பத்திரிகைக்குமே, விளம்பரங்கள் தாமாகவே வந்து குவிவது கிடையாது. எத்தனையோ வர்த்தக ஸ்தாபனங்களின் படிகளை மிதித்தே அவற்றைப் பெறவேண்டியிருக்கும். இப்படி நிலைமையிருக்க, நான் குறிப்பிட்ட நால்வரும் எவ்வளவோ சிரமத்துடனும் பொறுமையுடனும் சேகரித்த விளம்பரங்களே பத்திரிகையின் வளர்ச்சிக்கும், சில அருமையான மலர்களை வெளியிடக் கூடியதாக விருந்தமைக்கும் முக்கிய காரணமாயிருந்தன என்பது குறிப்பிடத் தக்கது. உதவி ஆசிரியர்களுள் ஒருவராக விளங்கி, இப்பொழுது இந்தியா சென்றுள்ள சீ. அரியராஜாவும் ஆரம்பத்திலிருந்து இப்பத்திரிகைக்கு ஒப்பற்ற சேவை செய்து வந்திருக்கிறார். மத்திய தீபத்தில் வெளியான பெரும்பாலான புகைப் படங்களையுதவியும், அதன் வளர்ச்சிக்குச் சலியாது உழைத்து வந்துள்ளவருமான திரு. வீரசாமியும் குறிப்பிடத்தக்கவர்.

முடிவாக, இரண்டு குறைகளை நான் குறிப்பிட்டு உங்களை அவற்றை நீக்குவதற்கு முயலும்படி வேண்டுகிறேன். ஒன்று: எழுதும் திறனிருந்தும் எழுத முயற்சிக்காது இருப்பவர்கள் சிலர் இருக்கிறார்கள். நம்பிக்கைக் குறைவாலோ, ஊக்கக் குறைவாலோ இவர்கள் இப்படிச் செய்கிறார்கள். நேர்மையாகவும், ஓரளவு திறமையுடனும் எழுதி வருபவர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்து அவர்களை வளர்க்கவே 'மத்திய தீபம்' இருக்கிறது. இவ்வித சந்தர்ப்பம் அவர்கள் வாழ்க்கையில் பின்னர் கிட்டாது என்பதை அவர்கள் உணரவேண்டும். இரண்டு: விற்பனையில் ஏற்பட்டு வரும் சோர்வு. விளம்பரங்கள் மூலம் சேகரிக்கும் பணமும், ஆசிரியர்களும் கல்லூரியும் அளித்துவரும் பணவுதவியும் இதுகால வரை பத்திரிகை இயங்குவதற்குப் பெரிதும் காரணமாக இருந்தன. இந் நிலைமை, நீடிக்க மாட்டாது என்பதை அனைவரும் உணர வேண்டும். விற்பனையொன்றையே நம்பி இயங்கவேண்டிய நிலைமை பத்திரிகைக்கு ஏற்பட்டு வருகிறது. உங்களில் பலர் எழுத்தாளர்களாகவும், பத்திரிகை அனுபவம் உடையவர்களாகவும் வளர வேண்டுமானால், நீங்கள் அனைவருமே பத்திரிகையின் பிரதிகளைத் தவறாது வாங்க வேண்டும். இதை நீங்கள் நன்றாக உணர்ந்து, பத்திரிகையை ஆதரித்து வருவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

'மத்திய தீப'த்தின் எண்ணற்ற நண்பர்களுக்கும் அபிமானிகளுக்கும் என் அன்பு வணக்கம் உரித்தாகுக. உங்கள் அன்பு இனியும் தொடர்ந்து இருந்து வரும் என நம்புகிறேன்.

ooo

# இளம் எழுத்தாளர் சங்க நிர்வாகிகள்



மு. தர்மரத்தினம்
(நிர்வாகி)



சி. க. இராஜேந்திரன்
(செயலாளர்)



பொ. சி. தவலிங்கம்
(தலைவர்)



கா. கணபதிப்பிள்ளை
(பொருளாளர்)



கு. ஜெகராஜசிங்கம்
(ஆசிரியர், ஆங்கிலப் பகுதி)

## படப்பிடிப்பாளர்கள்



K. V. சாமி



A. பாலசிங்கம்

### — உதவி நிர்வாகிகள் —



ச. சிவகுமாரன்
(சிறுவர் பகுதி)



ஆ. ஜெகதீசன்
(நிர்வாகம்)



V. கணேஷ்
(ஆங்கிலப் பகுதி)



M. S. ஜமால்
(விளையாட்டுப்பகுதி)

இன்றைய தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களுள் பிரபலமடைந்துள்ள இவர், ஈழத்து மண் வாசனையுடன் கதைகள் எழுதிவருபவர். 'தோணி' என்ற இவரது சிறுகதை 'ஈழத்துச் சிறுகதைகள்' என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

# 'கதைகதையாம் காரணமாம்...'

வ. அ. இராசரத்தினம்

"உங்கள் கதையொன்று கந்தோரில் இருக்கிறது. ஆனால் அதைப்பற்றி..."

கலாதேவி வார இதழ் ஆசிரியர் கைலாயநாதன் மேலே சொல்ல முடியாமற் தயங்கினார்.

ஆசிரியர் கைலாயநாதனுக்கு, எழுத்தாளர் நவரத்தினத்தின் சிருட்டிகளில் அபாரமான பற்றுதல். உண்மையுங்கூடத்தான்; வளர்ந்துவரும் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்திற்கு இந்த நாடும் தன் சிறந்த பங்கைச் செலுத்தியிருந்தால், அதில் ஒரு சிறிய பின்னமாவது, நவரத்தினத்தின் பங்காக இருக்கும் என்பது அசைக்கமுடியாத உண்மையுங் கூடத்தான்.

சொல்ல வந்ததை இடையிலே நிறுத்திவிட்டுத் தயங்கிய கைலாயநாதனை, நவரத்தினம் தன் தீட்சண்யமான கண்களால் விழுங்கிவிடுபவரைப்போல் பார்த்துக்கொண்டிருந்தார். மேலே என்ன சொல்லப்போகிருரோ என்று பார்த்துக் கொண்டேதான் இருந்தார்.

தயக்கத்தில் ஐந்தாறு நிமிடங்களைக் கடத்திவிட்ட கைலாயநாதன், மேலே சொன்னார். "நீங்கள் எத்தனையோ சிறந்த கதைகளை எழுதி இருக்கிறீர்கள். மூன்று மாதங்கட்கு முன்னர், 'கலாதேவி'யில் வெளியாகிய தங்கள் கதை ஒரு சிறந்த சிருஷ்டி. அது வரிவரியாக எனக்கு மனப்பாடமாகக்கூட ஆகிவிட்டது. கதைக் கருவும் கட்டுக் கோப்பும்......"

"தங்கள் பாராட்டுதலுக்கு என் நன்றி" என்றார் கதாசிரியர்.

"மீண்டும் தங்கள் கதை காரியாலயத்திற்கு வந்தபோது, உற்சாகத்துடன் படித்தேன். ஆனால்......"கைலாயநாதன் மீண்டும் தயங்கினார்.

"பயப்படாமற் சொல்லுங்கள்" என்று தூண்டினார் நவரத்தினம்.

ஆசிரியர் தயக்கத்துடன் தான் மேலும் பேசினார். "அந்தக் கதையைப்பற்றி தங்கட்கு ஒரு நீண்டகடிதம் எழுதவேண்டும் என்று எண்ணியிருந்தேன். அவகாசங் கிடைக்கவில்லை, தற்போது நேரிலேயே சந்தித்திருக்கிறோம்."

ஆசிரியரின் பேச்சு, கதாசிரியருக்குத் திருப்தியளிக்கவில்லை. கைலாயநாதனைப் பற்றி, நவரத்தினத்திற்கும் பெரிய எண்ணம். தமிழ்நாட்டிலேயே சிறந்த விமர்சகர்களில் அவரும் ஒருவர் என்பது உண்மையுங் கூடத்தான். அத்தகைய ஆசிரியரிடமிருந்து வெட்டொன்று துண்டு இரண்டான விமர்சனத்தைத்தான் நவரத்தினம் எதிர்பார்த்தார். "நன்ருக எழுதப்பட்டது அல்லது மோசமாக எழுதப்பட்டது" என்று ஒஸ்கார் வைல்ட் முடிவுகட்டியிருப்பதை நவரத்தினம் நம்புவார்.

"கதையை நீங்கள் திருப்பி அனுப்பியிருக்கலாம்" என்ருர் நவரத்தினம்.

"அதுதானே சொன்னேன். திருப்பியனுப்புவதாக இருந்தாற்கூடத் தங்கட்கு ஒரு நீண்ட கடிதம் எழுதவேண்டியிருந்திருக்கும். எழுதத்தான் நினைத்தேன். அவகாசங்கிடைக்கவில்லை. அதற்குள் இருவரும் நினையாப்பிரகாரமாகச் சந்தித்து விட்டோம்' என்ருர் கைலாயநாதன்.

"நீங்கள் என்ன எழுத நினைத்தீர்கள்?" என்ருர் நவரத்தினம்.

கைலாயநாதன், சிகரட்டை நீட்டினார். தானும் ஒரு சிகரட்டை எடுத்துப் பெட்டியிற் தட்டிக்கொண்டே "இருந்து பேசுவோமே," என்ருர்.

மண்டபத்திற் கிடந்த சாய்வு நாற்காலிகளில் இருவரும் அமர்ந்து கொண்டார்கள். கைலாயநாதன் தீக்குச்சியைத்தட்டி நீட்டினார், இரண்டு சிகரெட்டுக்களிலும் நெருப்புப் பற்றிக்கொண்டது.

புகையை விட்டுக்கொண்டே கைலாயநாதன் கேட்டார் "நீங்கள் அந்தக் கதையை எப்படி எழுதினீர்கள். கதைக்கருவை எப்படிக்கண்டு பிடித்தீர்கள்?"

"இதுவும் ஒரு கேள்வியா.? எப்போதும் போலப் பேனையால்தான் எழுதினேன். கதைக்கருவும் எப்போதைக்கும் போலக் கண்டோ கேட்டோ உணர்ந்ததாகத்தான் இருக்கும்." என்றுதான் சொல்லவேண்டும் என்று தோன்றிற்று நவரத்தினத்திற்கு. ஆனல், நவரத்தினம் எப்போதைக்குமே உணர்ச்சி வயப்படக்கூடிய ஒரு மனிதர். அதுவும் இலக்கிய சர்ச்சை என்ருல் மிகவும் விரைவாக உணர்ச்சிகள் அவரை ஆட்கொண்டு விடும். அப்படியான நேரங்

களில் அவர் அதிகமாகப் பேசமாட்டார். இலக்கணமாகப் பேசவும் வராது. எனவே சற்றுக்கோபமடைந்தவராக "என்னமோ எழுதவேணும் என்று நினைச்சேன், எழுதினேன்" என்றார்.

"அவசரத்தில் எழுதியிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். கதைக்கருவிற்கும் தங்கட்கும் நேரடியானசம்பந்தம் உண்டா?" என்றார் கைலாயம்.

இதென்ன, நதிமூலம் ரிஷிமூலம் காண முயல்பவரைப்போல இந்த மனிதன் கதை மூலத்தைக் கேட்கிறாரே என்று மனதுள் எண்ணிக்கொண்டே "என்னுடைய எல்லாக் கதைகளிலும் நான் மறைமுகமாகவோ, நேரடியாகவோ சம்பந்தப்பட்டிருக்கிறேன். நேரடியான சம்பந்தம் இல்லாத கதைகளை, என்மனதில் உணர்ந்து அநுபவித்து இருக்கிறேன். ஆனால் இந்தக் கதைக்கும் எனக்கும் நேரடியான சம்பந்தம் இருக்கிறது." என்றார் நவரத்தினம்.

"ஆனால் தங்களுடைய எல்லாக் கதைகட்குமே ஒரு அழுத்தமான மூலக்கருத்து இருப்பது எனக்குத் தெரியும். ஆனால் இந்தக் கதையில் அப்படி எதையும் காணவில்லை. அதைத்தான் நான் சொல்ல வந்தேன். தாங்களா இந்தக்கதையை எழுதினீர்கள் என்று எனக்கு ஏமாற்றமாக இருந்தது. எத்தனையோ சிறந்த சிருட்டிகளைப் படைத்து விட்ட தங்கள் பெயரில் இந்தக்கதை வெளிவருவதை நான் விரும்பவே இல்லை. ஆனால் திருப்பியனுப்பவும் முடியவில்லை. தாங்கள் இந்தக்கதையை எழுதியதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கத்தான் வேண்டுமென்று எண்ணியதால், தங்கட்கு ஒருகடிதம் எழுதவேண்டுமென்று எண்ணியிருந்தேன். இப்போது கேட்டுவிட்டேன்" என்றார்.

இதற்குள் ஒருவர் பின் ஒருவராக எழுத்தாளர்கள் வந்து கூடிவிட்டார்கள். தலைவரும் வந்து விட்டார். தமிழ் எழுத்தாளர்கள் கூட்டம் ஆரம்பமாயிற்று. காரசாரமான இலக்கிய சர்ச்சைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

* * *

சபையிலே நீட்டி முழக்கிப் பேசிக்கொண்டிருந்த எழுத்தாளர்களின் வாதங்கள் எதுவுமே ஒரு மூலையில் இருந்த நவரத்தினத்தின் காதுகளில் விழவில்லை. சிகரட்டை ஊதியபடியே, பிரசுரிக்கப் படாத தன் கதையின் பிறப்பதற்கான காரணங்களை ஆராய்வதில் அவர் மனம் ஈடுபட்டிருந்தது.

அந்தக் கதையை நான் ஏன் எழுதினேன்? எல்லாக் கதைகளையும் அவர் எழுதியதற்குப் பொதுப்படையான ஒரு காரணம் இருக்கத்தான் இருந்தது. அமெரிக்கனும், அவுஸ்திரேலியனும், ஆங்கிலத்தையே தாய்ப் பாஷையாகக் கொண்டு, அம்மொழியிலேயே இலக்கியத்தைச் சிருட்டித்தாலும் அவை பொதுப்படையாக 'ஆங்கில இலக்கியமாக' இல்லை. அமெரிக்க இலக்கியமாக, அவுஸ்திரேலிய இலக்கியமாக, இங்கிலாந்து இலக்கியமாகத்தான் இருக்கின்றன. அது மாதிரித்தான், நவரத்தினத்தின் தாய்ப் பாஷை தமிழாக இருந்தாலும், அவர் தமிழிலேயே எழுதினாலும் 'ஈழத்து இலக்கியத்தை'ச் சிருட்டிக்க அவர் முனைந்தார். அந்த முனைப்பு அவருக்கு ஒரு வெறியாகவே இருந்தது. அந்த வெறியில் முழுக்க முழுக்க ஈழத்துக் கதாபாத்திரங்களைக் கொண்டே அவர் கதைகளை எழுதினார். ஆனாலும், அவருடைய ஒவ்வொரு கதைக்கும், ஒரு சிறப்பான காரணம், ஓர் அழுத்தமான மூலக் கருத்து இருக்கவே செய்தது.

அந்தச்சிறப்பான காரணம், பிரசுரிக்கப் படாத தன் கதைக்கு இல்லையா?

நவரத்தினம் தன் கதையை நினைவுக்குக் கொண்டு வந்து பார்த்தார், அந்தக்கதையிலும் ஒரு மூலக்கருத்து இருப்பதாகவே அவருக்குப்பட்டது. அவர் என்ன விமர்சகனா? காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சல்லவா?

எனினும் திரு. நவரத்தினத்தின் சிந்தனை அதற்கப்பாலும் சென்றது.

அந்த மூலக்கதை வெளியிட மட்டுந்தானா நான் அந்தக் கதையை எழுதினேன்? இன்னும் வேறு காரணம்......?

எவர் பதிப்பித்தால் என்ன? பதிப்பிக்காவிட்டால் என்ன? ஈழத்துப் பின்னணியில் தான் நான் எழுதுவேன் என்று விரதமெடுத்துக் கொண்டிருக்கும் நவரத்தினத்தின் சிருட்டிகளை ஈழத்துப் பத்திரிகைகள் வரவேற்கத்தான் செய்தன. ஆனால் 'சும்மா' தான்! ஆனால் அதைப்பற்றி நவரத்தினம் கவலைப்படவில்லை. எழுத்து அவருக்குத் தொழிலில்லையே. எழுத்தை மட்டும் நம்பி இந்நாட்டில் வாழ முடியாது என்று அவர் நன்கு தெரிந்து கொண்டுதான், ஏதோ ஒரு லட்சியத்தோடு 'விஷயதானஞ்' செய்து கொண்டிருந்தார்

புத்தகங்கள் வாங்க, கடதாசி வாங்க—தபாற் செலவிற்காக...... அப்பாடா! அதை ஏன் கேட்கிறீர்கள்? அவர் லட்சியவாதி; மனைவி 'வீண் செலவும் நித்திரை விழிப்பும்' என்று முணு முணுத்தாலும், தாயார் வெளிப்படையாகவே பைத்தியக்காரன் என்று சொன்னாலும் கைலாயநாதனைப் போன்றவர்கள் அப்படித்தான் எண்ணுகிறார்கள்!

இந்த நிலையிற் தான் சமீபத்தில் 'கலாதேவி' இதழில் வெளியாகிய அவருடைய கதைக்காகப் 'பதினைந்து ரூபாய் செக்' ஒன்று வந்தது.

அன்று செக்கைக் கொடுத்துப் பதினைந்து ரூபாவிற்கும் புத்தகங்கள் வாங்கினார்.

[தொடர்ச்சி 26-ம் பக்கம்]

# இரக்கம்

— வல்லிக்கண்ணன் —

○ தமிழ் நாட்டின் தலைசிறந்த சிறு கதை எழுத்தாளர்களில் ஒருவராக மதிக்கப்படும் இவர், பல நாவல்களையும் தமிழாக்கம் செய்துள்ளார். இடையிடையே, அருமையான கவிதைகளையும் புனைந்து வருகிறார். இவர் கதைகளை எழுதுவதற்குக் கையாளும் நடை, அவற்றுக்கு ஒரு தனிக் கவர்சியை அளிக்கிறது.

**நா**கரிக நகரின் முக்கிய வீதி ஜன சமுதாயத்தை இழுத்துச் செல்லும் பெரிய நதி மாதிரி விளங்கிக்கொண்டிருந்தது.

வேகம், அவசரம், அர்த்தமற்ற பரபரப்பு நெருக்கடி எல்லாம் நிறைந்த காட்சி அது. ஸர்வீஸ் பஸ், பிளஷர் கார், ரிக்ஷா, மோட்டார் ரிக்ஷா, ஜட்கா, தள்ளு வண்டி, இழுக்கும் வண்டி, மோட்டார் பைக், ஸைக்கிள் வேக உருப்பெற்ற நாகரிக சமுதாயம் பலரக வாகனத் தோற்றங்களாக இயங்கிக் கொண்டிருந்தது.

அவற்றுக்கிடையே—அவற்றின் அருகே அப்பாவிகளான நடந்து செல்லும் இனத்தவரும் போய் வந்துகொண்டு தானிருந்தார்கள்.

லாரிகள் யானைகள் போல ஊர்ந்து சென்ற ரஸ்தாவிலே, பார வண்டிகளை இழுத்துச் செல்லும் 'மனித மிருக'ங்களும் அசைந்து அசைந்து முன்னேறிக்கொண்டிருந்தன. சுமக்க முடியாத சுமைகளைத் தலைமீது ஏற்றி, எப்படியோ தாங்கியபடி நடக்கும்—உடலை நெளித்து நெளித்து ஓடும் மனிதப்பிராணிகளும் போய்க்கொண்டிருந்தனர்.

நாகரிகமும் அநாகரிகமும், கலாசாரமும் காட்டுமிராண்டித்தனமும், பகட்டும் வறட்சியும், மேனுமினுக்கித்தனமும் கண்களை அறுக்கும் கோரமும், செல்வ போகமும் தரித்திரக் கொடுமையும் இவ்வாறுன முரண்பாடுகள் பலவும்—குறிப்பிட்ட ஏதோ ஒரு நியதிக்கு உட்பட்டது போலவும் உட்படாதது போலவும், குழம்பித் தவித்தும், குழப்பமுறுமல் நெளிந்து சுழித்தும் புரண்டுகொண்டிருந்தன. எல்லாம் கூடி 'இது நகரம்...... நாகரிகப் பெருநகரம்' என்கிற உண்மையை நித்தியமாய், நிரந்தரமாய், புலப்படுத்திக் கொண்டிருந்தன.

நாகரிகம் மனிதரை இயந்திரங்களாகவும், மிருகங்களாகவும் மாற்றிவிட்டது; அலங்கார பொம்மைகளாக வளர்த்துவருகிறது. மனிதரை மனிதராக வாழ வகை செய்யவில்லை அது என்பது மட்டுமல்ல; மனிதவர்க்கத்திடையே காணப்பட்ட சிறிதளவு ஈவு – இரக்கம் - தயை - நல்லதனம் முதலிய பண்புகளை வறளடித்து வருகிறது என்பதை மறப்பதற்கில்லை.

இந்த உண்மைக்கு 'மற்றுமோர் சான்று' என்று கூறலாம் அன்றொரு நாள் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை—

முற்பகல். பத்துமணி ஆகிவிட்டது. நாகரிக நகரத்தின் வீதிகள் எல்லாம், வீதிகளில் போகும் வாகனங்கள் எல்லாம், வாகனங்களில் இடம் அகப்படாமல் வேக நடை நடந்து செல்வோர் எல்லாம் நகரின் ஜனமிகுதியை, அவசர இயக்கத்தை, அலுவல் பரபரப்பை விளம்பரப்படுத்துகிற நேரம் அது. மனித இனத்தில் நிலைபெற்று வளரும் சுயநலத்தின் தன்மையைப் படம் பிடித்துக் காட்டும் நேரம் அது.

அவ் வேளையில் வீதிவழியே போய்க் கொண்டிருந்தவர்களில் ஒருவன்— தலையில் சிறு மூட்டையும், மனசில் பெருங் கவலையும் சுமந்து நடந்த மனிதன் — சூழ்நிலை மறந்த காரணத்தால் பெரிய விபத்து ஒன்றில் சிக்கியிருக்க வேண்டியவன், சுயமுயற்சியினலோ புண்ணிய வசத்தாலோ தப்பிச் சிறுவிபத்தில் விழநேர்ந்தது. எங்கோ பார்வையும் எதிலோ நினைவுமாக நடந்த அவன் ஒரு காரில் அகப்பட வேண்டியவன், கடைசிக் கட்டத்தில் திடுக்கிட்டுச் சமாளித்துக் கொண்டு, துள்ளித் தாவி விட்டான். ஆயினும் தப்பி ஒதுங்கினன் என்று சொல்வதற்கில்லை. கால் சறுக்கித் தள்ளாடித் தரையிலே விழுந்துவிட்டான். 'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று' என்ற மாதிரி!

டிரைவர் தனது ஆத்திரத்தைக் கடுமையான சொற்களில் பொதிந்து வீசிவிட்டு, காரை ஓட்டிச் சென்றுன். காரில் இருந்தவர்கள் இஷ்டம்போல பேச ஒரு வாய்ப்பு கிட்டியது.

கீழே விழுந்தவன் விழுந்தே கிடந்தான். அவனல் வாகனதிகளுக்கோ, வாகனங்களால் அவனுக்கோ எவ்விதமான பாதகமும் ஏற்பட முடியாத இடத்தில்தான் அவன் கிடந்தான்.

எங்கிருந்தோ ஆட்கள் ஒன்றிரண்டு பேராக வந்து கூடிப் பலராக மொய்த்து நின்றனர். வேடிக்கை பார்க்கத்தான்......

நகரம் நாகரிக அந்தஸ்திலே உயர்ந்து நின்றுலும் கூட, 'வேடிக்கை பார்க்க' என்று குழுமுகிற நபர்களின் பண்பாட்டில் மாறுதல் ஏற்படுவதில்லை.

'குடிபோதையோ?' 'மயங்கி விழுந்துவிட்டானே?' 'காயம் ஏற்பட்டுவிட்டதா?' 'காக்கா வலிப்பாக இருக்கும்' 'ரத்தம் வந்திருப்பதுபோல் தெரியுதே!' 'எந்த ஊரு ஆளு?' — இப்படிப் பலரும் பலவாறு கவலைப்படலாயினர்,

புதிதாக வந்தவர்கள் அங்குமிங்கும் சுற்றியும், கழுத்தை நீட்டி எட்டிப் பார்க்க முயன்றும், 'என்னது? என்னவாம்? யார் அது?' என்று கேட்டும் விஷயம் அறியத் தவித்தனர்.

சிலர் நின்று கவனித்தனர். பலர் சும்மா பார்வை எறிந்துவிட்டுப் போனார்கள். சிலர் 'ஏனோ தானோ—என்னவோ ஏதோ' என்ற படி அவர்கள் போக்கிலே முன்னே சென்றார்கள். வாகனங்களில் அமர்ந்து வேக யாத்திரை போனவர்களின் பார்வையைக் கவரத் தவறவுமில்லை இச்சிறு கூட்டம்.

'நமக்கென்ன! நம்ம வேலையே நிறையக் கிடக்குது' என்ற எண்ணத்தில், பிற விஷயங்களில் தலையிடும் நினைப்போ ஆர்வமோ இல்லாதவர்களாய் நடந்தவர்களின் தொகை அதிகமானதே.

விழுந்தவனைச் சுற்றி நின்று வேடிக்கை பார்த்து விமரிசனம் செய்துகொண்டிருந்தவர்களில் ஒருவருக்கேனும் தோன்றாத ஒரு உணர்ச்சி, வழியே போன வேறொரு ஆசாமிக்கு ஏற்பட்டது.

அவன் தலைமீது ஒரு கூடையை சுமந்து நடந்துகொண்டிருந்தான். என்றாலும், அவன் உள்ளத்தில் 'இரக்கமற்ற தன்மை' பாறையாய் படிந்திருக்கவில்லை என்பது புரிந்தது.

விழுந்து கிடந்தவன்மீது அவன் பார்வை பட்டதும் அவன் நின்றான். கவனித்தான். 'ஏனய்யா எல்லாரும் சும்மா நிக்கிறீங்க? அந்த ஆளுக்கு என்ன—ஏது என்று கவனிக்கப்படாது? எங்கே அடிபட்டிருக்குதோ'? என்று தன் எண்ணத்தைச் சொன்னான் அவன்.

'வந்துவிட்டாரய்யா பரோபகாரி!' 'ஏம்பா, நீயே கவனியேன்' 'இவருக்குத் தான் பெரிய கவலை'—குரல்கள் வெடித்தன, யார் குரல்—எவர் பேச்சு எனப் பிரித்துப் பேச முடியாத விதத்திலே. இணைந்து கலந்தது ஏகச் சிரிப்பு.

அவன் கோபிக்கவில்லை. முகம் சுளிக்கவில்லை. தலைக் கூடையை நடைமேடையின் ஒரு ஓரத்தில் இறக்கி வைத்துவிட்டு, கூட்டத்தில் வழி செய்துகொண்டு விழுந்து கிடந்தவனின் சமீபம் சென்றான். அன்புடன் அவனைக் கவனித்தான். ஆதரவாகச் சில வார்த்தைகள் பேசி, அவனை மெதுவாகத் தாங்கி எடுத்து உட்கார வைத்தான். அவன் உடம்பைத் தடவித் துடைத்தான். அவனுக்குத் தாங்கலாக எழுந்து நின்று அவனைக் கைபிடித்து மெதுமெதுவாக நடக்கச் செய்தான். 'குடிக்க ஏதாவது வேண்டுமா?' என்று கேட்டான். அவனை மேடை மீது உட்கார வைத்து விட்டு, கீழே கிடந்த மூட்டையை எடுத்து அவனிடம் சேர்ப்பித்தான்.

'நாட்டுப் புறத்தான் எவனோ' செய்து நின்ற செயல்களில் அக்கறை காட்ட விரும்பாத நகர மகா ஜனங்கள்—கீழே விழுந்தவன் பலத்த காயம் படாமல் பிழைத்து எழுந்ததில் ஏமாற்றம் கொண்டவர்களாய் முணங்கிக்கொண்டே கலைந்தார்கள்.

விழுந்து எழுந்தவன், முகத்தில் நன்றி காட்டி, அதே இடத்தில் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தான்.

அவனுக்கு உதவி செய்தவன், கீழே வைத்த தனது சுமையைத் தலைக்கு இறக்கி ஏற்றிக் கொள்வதற்குப் பிறர் தயவை நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 'ஐயா, இதை ஒரு கை பிடியுங்களேன்! இதைக் கொஞ்சம் தூக்கி..........' என்று கெஞ்சி நின்றான் அவன்.

'அட போய்யா!' 'நீ ஒண்ணு!' என்றெல்லாம் சொல்லெறிந்து சென்றார்கள் சில கனவான்கள். அவன் தங்களை அப்படி வேலை ஏவியதன் மூலம் தங்களையே அவமதித்து விட்டான் என்று நம்பியவர்கள் போல், 'மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டு' நடந்தார்கள் பலபேர்.

ஆள் நடமாட்டம் அதிகமிருந்த அந்த வீதியின் ஓரத்திலே, மற்றுமொரு உண்மையான மனிதன் வரமாட்டானா என்று ஏங்கி நிற்பவன் போல, அவன் நின்றான். போகிறவர் வருகிறவர்களைப் பார்த்துக்கொண்டே நின்றான்.

நாகரிக நதியின் பெருங்கிளை போன்ற அந்த ரஸ்தாவில் அவசரமும் வேகமும் நெருக்கமும் போக்குவரத்தாக முட்டி மோதிக் கொண்டு அலைபுரண்டதில் குறைவு இல்லை தான். அவரவர் கவலை அவர் அவர்களுக்கு! இதுதானே இந்த யுகதர்மமாக விளங்குகிறது?

❋

ஒரு படமாளிகை நிர்வாகி, தமது தியேட்டரில் புதிதாக வேலைக்கு வந்த சிப்பந்தியிடம், "ஏய் முனுசாமி, தியேட்டர் ஒரு சமயம் தீப்பிடித்துக் கொண்டால், நீ என்ன செல்வாய்?" என்று கேட்டார், "அந்தக்கவலை தங்களுக்கு வேண்டாம், ஐயா. எந்தவிதமான விபத்திலிருந்து தப்பிக் கொள்ளவும் எனக்குத் தெரியும்" என்றான் முனுசாமி.

* சிறுகதைப் போட்டியில் முதற்பரிசைப் பெற்ற கதை இது

# பாசம்

த. ஸ்ரீஸ்கந்தராஜா.

மழை தூறிக்கொண்டிருந்தது! ஓலைக் குடிசைக்குள்ளிருந்த கிழவி சின்னாச்சி, ஓலைகளின் மேல்விழுந்து 'பட் பட்' டென்று தெறித்துச் சிதறும் மழைத் துளிகளின் சத்தம் கேட்டு வெளியே வந்தாள். கூன் விழுந்த தன் முதுகைச் சற்றுச் சிரமப்பட்டு நிமிர்த்தி ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தாள். நல்ல மழை வரும்போல் இருந்தது! பசிக் களையில் மயங்கிப்போய் தன் குழந்தையுடன் ஒரு மூலையில் படுத்திருந்தாள் கிழவியின் மருமகள் முத்தம்மா.

“எடி பிள்ளை.......... எடியே முத்தம்மா....... குழந்தை தூங்கிக்கொண்டிருக்கு. எழும்பினால் கவனமாய்ப் பார்த்துக்கொள். நான் வயல்வெளிக்குப் போய் தம்பியைக் கூட்டிக்கொண்டு வாறன்........”

பக்கத்தில் கிடந்த சாக்கை எடுத்து தலையில் போட்டுக்கொண்டு வயல் வெளியை நோக்கி நடந்தாள் கிழவி சின்னாச்சி.

* * *

சின்னாச்சி முன்பு வாழ்ந்தது இந்தக் கிராமத்திலல்ல! 'சிறுகுளம்' என்ற கிராமத்தில் பிறந்து அங்கேதான் வாழ்ந்தாள். அவள் கணவன் கட்டுமஸ்தான தேகமும், அழகான தடி மீசையும் கொண்டவன். வேலையில் கள்ளமில்லாமல், உணவுக்குக் கஷ்டப்படாமல் உழைத்துத் தன் மனைவியுடன் சேர்ந்து அன்றாடம் வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருந்தான்.

இவர்களுக்குப் பிறந்த குழந்தைதான் முத்து. முத்துவும் ஒரு வருடம் ஆனந்தமாகவே வாழ்ந்து வந்தான். ஆனால் திடீரென்று அந்தக் கிராமத்தில் பரவிய தொற்று நோயின் காரணமாகச் சின்னாச்சி விதவையானாள். குழந்தைகளும், ஆண்களும், பெண்களுமாகப் பலர் அந் நோய்க்கு இரையாகிக்கொண்டே வந்தார்கள்.

கணவன் இறந்த பின்பு தான் ஏன் வாழவேண்டும் என்று எண்ணினாள் சின்னாச்சி. ஆனால் பால் மணம் மாறாத பச்சிளம் குழந்தை முத்துவின் முகத்தைப் பார்க்கும்போது, துக்கமெல்லாம் மறந்து குழந்தைக்காகவே வாழத்துணிந்தாள்.

இவளுடைய குழந்தைப் பாசம் உற்றாரைத் துறந்து, உறவினரை மறந்து ஊரைவிட்டே புறப்படச் செய்தது. குழந்தையுடன் புறப்பட்டு வேலை தேடிச் சென்ற அவளுக்கு ஒரு வீட்டில் வேலை கிடைத்தது. அந்த வீட்டுக்காரர் இட்ட வேலைகளைச் செய்து தன் வயிற்றையும் குழந்தையையும் வளர்த்து வந்தாள்.

குழந்தை வளர்ந்தான்! பத்து வயதிலேயே பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு தாய்க்கு ஒத்தாசை செய்து தாயின் கஷ்டத்தில் சிறிதைக் குறைத்தான்.

பெரியவன் ஆனான்........

அந்த வீட்டின் சொந்தக்காரனுக்கு ஒரு பெரிய நிலம் இருந்தது. புல், முள், நாகதாளி முதலியன அதில் நன்கு வளர்ந்தன. வீட்டில் வேலையில்லாமல் இருந்த முத்துவை அந்த நிலத்தின் சொந்தக்காரர், நிலத்தைக் கொத்திச் சீர்ப்படுத்தும்படி செய்தார். தினமும் சம்பளமும் தவறாமல் கொடுத்தார். வேலை செய்யாத நாட்களில் சம்பளம் இல்லை; எட்டு மணிநேர வேலை என்ற நியதியும் இல்லை. சூரிய பகவானின் உதயத்தையும், மறைவையும் பொறுத்ததே அவனுடைய வேலை நேரம்.

முத்து கஷ்டப்பட்டு வேலை செய்ததால் அவன் தாய் கஷ்டப்படவேண்டிய அவசியமின்றி சிறிது நிம்மதியாக வீட்டில் இருந்தாள். மகனை வளர்த்துப் பெரியவனாக்கிவிட்ட பெருமையில், அவன் இனித் தன் சாப்பாட்டிற்கு வழிபண்ணுவான் என்ற நம்பிக்கையில் கூன் விழுந்த முதுகு இன்னும் கூனாமல் இருப்பதற்காகத் தன் வீட்டிலேயே இருந்துகொண்டு வீட்டு வேலைகளைச் செய்து காலத்தைத் தள்ளிக்கொண்டிருந்தாள் அவன் தாய் சின்னாச்சி.

முத்துவுக்கு அப்பொழுது வயது இருபத்தைந்து இருக்கும். புல்லும் முள்

ளும் விளைந்த நிலத்தைச் சீர்படுத்திப் 'பொன் விளையும் பூமி' யாக்கித் தன் எஜமானரின் அபிமானத்தைப் பெற வேண்டும் என்று விரும்பினான். தன்னைத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த தாய் இனிமேலாவது கஷ்டப்படாமல் காலத்தைக் கழிக்கட்டும் என்றும் விரும்பினான். இந்த இரு நினைவுகளும் அவனை வேலையில் அதிக கவனம் செலுத்தத் தூண்டின.

இந்த நிலையிலேதான் அந்தக் கிராமத்தில் வசித்த முத்தம்மா என்ற ஏழைப்பெண் அவனுக்கு வாழ்க்கைத் துணைவியானாள். 'உலகத்தில் இதை விட வேறு இன்பம் என்ன இருக்கிறது' என்பது அவனின் நினைப்பு. ஆனால் நாட்கள் செல்ல மழலைச் செல்வம் இல்லாதது அவனுக்கு ஒரு பெருங்குறையாகப்பட்டது.

கஷ்டப்பட்டு வேலைசெய்தபின் வீடு திரும்பிவரும்பொழுது கொஞ்சிப் பேச ஒரு குழந்தையில்லையே என்ற கவலை அவனை வாட்டி வதைக்கும். பிள்ளைக்கலி தீர்ப்பதற்காக முத்துவும் அவன் மனைவியும் படையெடுக்காத கோவில்கள் இல்லை; வேண்டாத தெய்வங்கள் கிடையாது. இந்த நிலையிலும் அவனுக்கு ஒரு குழந்தையில்லாததால் 'இது என்ன வாழ்வு?' என்ற எண்ணம் எழுந்து வாழ்வே அவனுக்கு வெறுக்கும் அந்த நேரத்தில் அவன் அன்புத் தாயும் ஆசை மனைவியும் மனக் கண்ணில் தோன்றி அந்த நினைவை அகற்றுவார்கள்.

வருடங்கள் சில கழிந்தன.........

ஒரு நாள் வேலை முடிந்து வீடு திரும்பினான் முத்து. அன்று அவன் மனைவி என்றுமில்லாத மகிழ்ச்சியுடனும், நாணத்துடனும் இருப்பதைக் கண்டான். கடவுளின் கடைக்கண் பார்வையினாலோ என்னவோ, மனைவி கர்ப்பம் தரித்திருக்கிறாள் என்பதை அறிந்ததும் அவனுக்கு மனைவியின் உருவமே கண்களுக்குச் சரிவரத் தெரியவில்லை. ஆனந்தக் கண்ணீர் கண்களை மறைத்தது............

குழந்தை பிறந்த ஆனந்தமோ என்னவோ, முத்துவுக்கு மகிழ்ச்சியில் தலைகாலே புரியவில்லை. ஒரு வாரம் வேலைக்குக்கூடப் போகவில்லை.

சம்பளம் கொடுக்கப்படாததுகூட அவனுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. ஒரு வாரத்திற்குப்பின் வேலைக்குச் சென்றான். ஒரு வாரமாக வேலை செய்யாததாலோ என்னவோ அவனால் அன்று வேலை செய்யவே முடியவில்லை. உடம்பெல்லாம் ஒரே அசதியாயிருந்தது. ஒரு மாதிரியாக அன்றைய வேலையை முடித்துவிட்டு வீடு திரும்பினான்.

இரவு முழுவதும் ஒரே ஜுரம். ஒரு வாரம் வேலை செய்ய முடியவேயில்லை.........

அன்று சமைப்பதற்கோ வீட்டில் ஒன்றுமேயில்லை. மண்வெட்டியை எடுத்துத் தோளில் போட்டான் முத்து. வயலை நோக்கி நடந்தான்.

இருவாரமாகத் தண்ணீர் கிடைக்காததால் பயிர்கள் எல்லாம் தலையைத் தரையை நோக்கித் தொங்கப்போட்டபடி படுத்திருந்தன. பச்சைப் பசேல் என்றிருந்த பயிர்கள் வாடி, வதங்கி சோர்ந்திருப்பதைப் பார்த்ததும் அவன் மனமும் வாடிவிட்டது.

சிறு தூற்றலாகத் தூற்றியது மழை! மழையை நம்ப முடியாது என்ற எண்ணத்துடன் தண்ணீர் இறைக்கத் தொடங்கினான் முத்து. இந்த நேரத்தில் தான், மகனை அழைத்துவரப் புறப்பட்டாள் தாய் சின்னச்சி.

* * *

**வீ**ட்டில் அவன் அன்புச் செல்வன் பசியின் கொடுமையில் மயங்கித் தூங்கிப்போயிருந்தான். குழந்தையின் பசித் தோற்றம் அவன் மனக்கண்முன் தோன்றி அவன் மனதை வேதனை செய்தது. குழந்தைக்குப் பால் தேவை! தாயோ இரண்டுநாளாகப் பட்டினி; தாய் சிறிதளவாவது உணவு உண்டால் தான் குழந்தைக்குப் பால் கிடைக்கும். பயிர்களோ வாடி வதங்கி விட்டன. இந்த எல்லா எண்ணங்களுமாகச் சேர்ந்து அவன் மனதில் ஒரு ஆவேசத்தை உண்டுபண்ணின. ஆவேசத்தில் தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்த அவனுக்கு, தாய் கிட்ட நெருங்கியதுகூடத் தெரியவில்லை.

"முத்தா........" கிழவி கூப்பிட்டாள்.

முத்து திரும்பிப் பார்க்காமல் வேலை செய்துகொண்டிருந்தான்.

"தம்பீ......... என்னடாமோனை மழை பெய்யிறதுகூடத் தெரியாமல்

நிக்கிருய்? ஒரு கிழமையாய்க் காய்ச்சலாயிருந்த உடம்பு மழையில நனைஞ்சா என்னத்துக்கடா தம்பி ஆகும்?'' வயது சென்றதால் நடுங்கிய குரலில் சொன்னுள் சின்னுச்சி. அப்பொழுதும் முத்து தாயைத் திரும்பிப் பார்க்கவில்லை.

''.........தம்......பீ.........'' வயது சென்ற நேரத்தில், பேசத் திராணியற்று கோபத்தில், எழும்பாத குரலில் கத்தினுள். திரும்பிப் பார்த்த முத்துவுக்குத் தாய்மேல் ஒரே கோபம்!

''ஒரு மாதம்கூட நிரம்பாத குழந்தை பசியில துடிக்குது. அதுக்குள்ளே உனக்கு.........''

''குழந்தை பசியில துடிக்குது என்கிறியே. காய்ச்சலாய்க் கிடந்த தேகத்தில மழைத்தண்ணி பட்டா அது உனக்கு நல்லதாடா? போடா முத்து வீட்டுக்கு.........'' திரும்பவும் கெஞ்சலாகக் கேட்டாள்.

''இந்தத் தேகம் என்ன தேகம்? அதில மழை பட்டா என்ன செய்யப் போகுது? நான் வரமாட்டன் நீ போ.''

கிழவிக்குத் தெரிந்துவிட்டது மகன் தண்ணீர் முழுவதையும் இறைத்துப் பயிர்களுக்குப் பாத்தி கட்டாமல் வர மாட்டான் என்று.

கணவன் இறந்த காலந்தொட்டு வாயை, வயிற்றைக் கட்டி முத்துவை வளர்த்தவள் சின்னுச்சி. அவன் கண் கலங்கினுல் அவள் கண்களில் இரு நதிகளே ஊற்றெடுத்து ஓடும். அவனுக்குத் துன்பம் வந்தால் அது அவளுக்கு வந்ததுபோல! அவ்வளவு பாசமும் அன்பும் வைத்திருந்தாள் மகன்மேல். இன்று அவள் சுமார் ஐம்பத்தைந்து வயது நிறைந்த கிழவி. முத்துவுக்கு நாற்பது வயதிற்கு இரண்டு மூன்று குறைவாக இருக்கும்.

நாற்பதென்ன? நூறு வயதென்ருலும் தாய்க்கு மகன் மகன்தானே? முத்து சின்னுச்சிக்கு ஒரு சிறு குழந்தை போலத்தான். இதை அவளே அடிக்கடி சொல்வாள்.

வயதானுலும் கிழவிக்கு மகன்மேலிருந்த பாசம், காய்ச்சலாக ஒருவாரம் படுத்திருந்த மகனின் தோற்றம், இப்பொழுது அவன் மழையில் நனைவது, அவனின் பிடிவாதம் எல்லாமாகச் சேர்ந்து அவளை நிலைகுலைத்தன. கண்கள் நீரைக் கொட்டின. என்ன செய்வதென்றே தெரியவில்லை. வீடு நோக்கி ஓடினுள்.

பசிக்களையில் ஒரு மூலையில் படுத்துறங்கிய குழந்தை அவள் கண்ணில் பட்டது. திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவள்போலக் குழந்தையைத் தூக்கினுள். அங்கு கிடந்த சேலைகளால் அதை மூடிக்கொண்டு மகன் வேலை செய்யும் இடத்தை அடைந்தாள்.

தண்ணீர் இறைத்த குறையில் வாய்க்கால் வெட்டிப் பாத்திகட்டிக் கொண்டிருந்தான் முத்து. திடீரென்று குழந்தையைக் கொட்டும் மழையில் அவன் கண்படக் கிடத்திவிட்டாள் தாய். இதைக் கண்டதுதான் தாமதம், முத்து பாய்ந்தோடி வந்தான். குழந்தையை வாரித்தூக்கினுன். மரத்துப்போயிருந்த அவன் கைபட்ட குழந்தை 'வீல்' என்று கத்தியது. அதைப் பொருட்படுத்தவில்லை அவன். வீட்டை நோக்கி ஓடினுன். தாயும் பின் தொடர்ந்தாள்.

''கிழட்டுச் சனியன்......... புத்தி கித்தி இருக்கா? பச்சிளம் குழந்தையை மழையில கிடத்துது......'' என்னதான் பாசமிருந்தாலும் அவனுக்கு வந்த கோபத்தில் என்றுமில்லாமல் தாயைப் பேசிவிட்டான். தன்னை வீட்டிற்கு அனுப்புவதற்கு இதுதான் ஒருவழி என்பதற்காகத்தான் தாய் அவ்விதம் செய்தாள் என்பது அவனுக்கு எங்கே தெரியப்போகிறது!

அன்றும் எல்லோரும் பட்டினி! பாசம் கண்ணைமட்டுமன்றி அறிவையும் மறைத்ததால் குழந்தைக்கு அன்று மாலை கடுமையான காய்ச்சல்.

* * *

மறுநாள் காலை —

கிராமத்திலுள்ள அத்தனை வைத்தியர்களாலேகூடத் தடுக்கமுடியாதபடி குடிசையில் அழுகுரல் கேட்டது.

''பாசம் அளவுக்கு மீறினுல் முடிவு நாசத்தில்'' என்று யாரோ சொன்னது பாசத்தளையில் கட்டுண்டு அதனுல் கண்ணீர் சிந்தும் முத்துவுக்கும், அவன் தாய் சின்னுச்சிக்கும் இப்பொழுதாவது தெரிகிறதோ என்னவோ? ஆனுல், கிராமத்து மக்கள் அந்தக் கிழவியை 'ஒரு மாதிரி' என்று சொல்லிக்கொள்கிருர்கள். ❃

# உலகியலில் தமிழன்

இப் பரந்த உலகில் எங்கு மக்கள் முதன் முதலில் தோன்றினார்கள் என்ற வினாவிற்கு நில நூல் வல்லார் பலர் பரந்த உள்ளத்துடன் பதிலளித் திருக்கிறார்கள். ஆம், அவர்கள் தமிழ்நாட்டுப் பாறைகளும் கற்களும் மிகப்பழமை வாய்ந்தவை. ஆதலின் அந்நிலத்தில் தான் மனிதஇனம் முதன் முதல் தோன்றியிருக்கக்கூடும் எனக் கூறுகிறார்கள். இதனால் தான் ''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி'' எனத் தமிழ் இனம் பாராட்டப்படுகின்றது. இதெல்லாம் பழம் பெருமைஎனப் பலர் எண்ணக்கூடும். ஆனால், பழமை பேசுவதால் ஊக்கம் பிறக்கும் சோம்பல் ஒழியும், வீரம் விளங்கும் என்பது பலருக்குத் தெரியாது. இதனால் பழமையைப் போற்றி புதுமையை வெறுக்கச்சொல்லவில்லை. இரண்டிலும் உள்ள நல்லதை நாடி அல்லதை அகற்றவேண்டும்.

தமிழன் உலகிற்கு அளித்த செல்வங்கள் அறிவுச் செல்வங்கள். அறச் செல்வங்கள், அன்புச் செல்வங்கள் இப்டியாகப் பல திறப்பட்டவையாகும். இவற்றை எல்லாம் அறியவேண்டுமாயின் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இனம் எப்படி வாழ்ந்தது, எவ்வாறு வாழ்ந்தது, அவர்கள் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டி இன்றைய உலகிற்கும் பயன்படத் தக்கவகையில் விட்டுச் சென்ற, நிலைநாட்டிய இலட்சியங்களும் உறுதிகளும் யாவை? என்பன போன்றவற்றை யெல்லாம் தெள்ளத்தெளிய ஆராய வேண்டும்.

பழந்தமிழன் தன் வாழ்வில் கடமையையும் கலையையும் ஒன்றாகப் போற்றி வளர்த்தான். இல்லாவிடில் மனிதன் வாழ்வு முழுத் தன்மையடையாது என்பதைப் பழந்தமிழன் நன்கு உணர்ந்திருந்தான். முழுவதும் கடமையாகவே அமைந்து விட்டால் அது இயந்திர வாழ்வாகிவிடும்; முழுவதும் கலை வாழ்வாகிவிட்டால் அது பயனற்றதாகிவிடும். எனவே இரண்டும்—கடமையும் கலையும்—அளவுடன் சரிசமமாகக் கலந்தே காணப்பட்டன எனப்பழந் தமிழ் நூல்கள் கூறுகின்றன. இது அவனிடம் காணப்பட்ட பல்வேறு சிறப்பியல்புகளில் ஒன்றாகும்.

இது மாத்திரமன்றிப் பழந் தமிழன் அறிவோடு உணர்வையும் சேர்த்து வளர்த்தான். அறிவிலும் பார்க்க உணர்விற்கு முதலிடம் அளித்தான் தமிழன். தன்வாழ்விலும் அதையே போற்றி வளர்த்தான். அதனால்தான் இன்று மற்றவர்கள் பார்த்து வியக்கும்படியான அளவிற்கு பாரி, பேகன், குமணன் போன்ற வள்ளல்கள் இறந்தும் இறவாமல் காட்சி தருகிறார்கள். இன்று செய்யப்படும் அணுக்குண்டுகள் அறிவின் துணை கொண்டு மட்டும் செய்யப்படுகின்றன. பழந்தமிழன் காட்டியபடி உணர்வும் அதோடு சேர்ந்திருந்தால் அது இன்று மனிதர்கள் மண்டையில் விழாமல் வேறு ஏதாவது ஒன்றுக்குப் பயன்பட்டிருக்கும். உணர்விற்கு முதலிடம் அளிக்கும் தன்மை தமிழன் காட்டிய, உலகிற்கு ஈந்த ஒரு மாபெரும் தத்துவமாகும். கடந்த சில நூற்றாண்டுகளில் உலகப்பெரியார்கள் பலர் போதித்த தத்துவமும் இதுதான். இதைத்தமிழன் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே உலகிற்குப் போதித்தானென்றால் அவனின் ஆற்றலை என்னென்பது.

பழந்தமிழன் உலகின் இயல்பை நன்கு அறிந்திருந்தான். இன்று பலர் 'உலகம் நிலையில்லாதது'' என்று சொலக் கேட்கிறோம். பழந்தமிழனும் இதை நன்கு அறிந்திருந்தான் உலகம் நிலையில்லாதது என்பதனால் தானும் இதோடு சேர்ந்து நிலையில்லாமல் அழிவதை அவன் விரும்பவில்லை. நிலையில்லாத இவ்வுலகிடையே வாழ்ந்து நிலைபெறும் வழியை அவன் தேடினான். தேடிக்கண்டறியவும் அறிந்தான். அவன் கண்ட முடிவு:

''... மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நிறீஇத்தாம் மாய்ந்தனரே''

எனவே நிலையற்ற உலகில் நிலைபெற வேண்டுமாயின் தம்புகழை நிலை நிறுத்துவதாகும். இதுதான் இவ்விரண்டு அடிகளின் கருத்து. நிலைமையாயின் நடுவே நிலைவேற்றுக்குரிய வழிகண்டவன் தமிழன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இவ்வழிதான் இன்று பலரால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. என்னே தமிழர் தம் ஆற்றல்!

இவை எல்லாவற்றையும் விட இவர்களது அரசியல் வாழ்வுதான் சிறப்போடும், பெருமையோடும் விளங்கியது. மற்றவர்கள் குறிஞ்சி நாகரிகத்தில் இருக்கும் போதே தமிழர் நாடாளும் நாகரிகம் பெற்று வாழ்ந்தனர். அவர்கள் அன்று அரசியலில் கொண்டகொள்கைகள், குறிக்கோள்கள் எல்லாம் இன்று புது உருப்பெற்றுத் திகழ்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழர் வகுத்த பொருளாதாரக் கொள்கைகள் எல்லாம் இன்றும் ஒளிவிட்டுப்பிரகாசிக்கின்றன. அசைக்கமுடியாத மாசு மறுவற்ற, உலகம் உள்ளளவும் போற்றக்கூடிய பின்பற்றி நடக்கவேண்டிய மாபெரும் தத்துவங்கள் அவர்களது பொருளாதாரக் கொள்கைகள்.

அ. நரேந்திரன்

இதோ ஒரு சில: ஒரு நாட்டின் ஆட்சி சிறப்புடன் நடை பெற வேண்டுமாயின் ஆட்சியாளர் சீர்திருந்தியவர்களாக இருக்க வேண்டும். அவர்களை மற்றவர்கள் கட்டளை யிட்டு சீர்திருத்த முடியாது. அவர்களாகவே திருந்த வேண்டும். எப்படி? இதோ இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட புலவர் வழி கூறுகிருர்

"தென்கடல் வளகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி; உடுப்பன இரண்டே
பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே."

இதன் கருத்தைச் சுருக்கமாகக் கூறினுல் "அரசன் முதல் ஆண்டி வரை யாவருக்கும் தேவையானது தேவைப்படுவது உண்பதற்கு ஒரு நாழி அரிசியும்; உடுப்பதற்கு இரண்டு துணிகளும் தான்"

புதிய வரிகளை விதித்தலில் எந்த அரசியல் அறிஞனும் முடிந்த முடிபாக ஒன்றும் கூறவில்லை. ஆனுல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பிசிராந்தையார் என்ற தமிழ்ப்புலவர் கூறுகிருர்: "யானை பெருந்தீனி தின்னும் மிருகம். ஆனுல் சிறிய நிலத்தில் விளையும் நெல்லை அறுத்து அரிசியாக்கித்தந்தால், பெருந்தீனி தின்னுகின்ற யானைக்குக் கூட அது பல நாட்களுக்குப் போதும். அவ்வாறு செய்யாமல் யானை தானே சென்று தின்னட்டும் என்று விட்டு விட்டால் நூறு ஏக்கர் நிலமாயினும் வாயில் புகுவதைக்காட்டிலும் அதன் காலில் பட்டு அழிவது மிகுதி." ஆகவே இதிலிருந்து என்ன அறிய முடிகிறது? கொடுப்போருடைய வன்மை தான் வரி விதிப்போருக்கு அளவாக அமைதல் வேண்டுமே தவிர, அரசியலாருக்கு ஏற்படும் செலவு அளவாக அமைதல் கூடாது என்பதாகும். எந்த அரசியலறிஞனும், எந்தப் பொருளாதார நிபுணனும் மறுக்க முடியாத ஒப்புயர்வற்ற கருத்தாகும் இது.

அனைவரும் சமம், உலகமக்கள் யாவரும் ஒரே இனம் என்ற இக்கொள்கை ஏனைய நாடுகளைப் பொறுத்தவரை மிகப் பிற்காலத்தில் தோன்றியதாகும். ஆனுல் தமிழனிடம் கிறிஸ்து பிறப்பதற்கு முனனரே தோன்றி விட்டது. மிக மிகப் பழங்காலத்திலேயே தோன்றிவிடடது. ஆம்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தரவாரா..."

என்ற இப்பாடல் உலகம் உள்ள அளவும் மறக்காமல் போற்ற வேண்டிய பாடலாகும்.

இது மாத்திரமா? உலகத்திற்கே அறிவுச் சுரங்கத்தை கொடுத்துச் சென்ற தமிழன் வள்ளுவன்;

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்" என்றும்

"ஓர்ந்து கண்ணோடாது இறை புரிந்து, யார் [மாட்டும்
தேர்ந்து செய்வஃதேமுறை"

என்றும் கூறுகிருர் அறிவின் பெருமன்னர், உலகத்தின் அறிவுத்தந்தை வள்ளுவன்.

இன்றைய அரசியல் உலகில் பொதுவுடமை, சமதர்மம், சோஷலிசம் என்றெல்லாம் பேசுகிருர்களே. அவ்வளவும் மேலே கூறப்பட்ட பாடல்களில், கருத்துக்களில் பிரகாசிக்கின்றனவே! இரண்டு அடிகள் கூட இல்லை, ஒன்றேமுக்கால் அடிகளிலே பொதிந்திருக்கின்றதே பொதுவுடமை அப்படியே. இன்று மாத்திரமின்றி இனி வரப்போகும் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கும் புத்துயிரும் புது உணர்ச்சியும் அளிக்கப் போகும் தத்துவங்கள் இவை. என்னே தமிழர் தம் ஆற்றல், அறிவு, விவேகம், திறன்! இவற்றையெல்லாம் நினைத்து வியப்படையாமல் இருக்கமுடியாது எவனும்.

இல் வாழ்க்கையில் தமிழர்களைப் போல் செம்மையான வாழ்வு நடாத்தியவர்கள் உலகில் வேறு எவருமே இலர், வாழ்க்கையின் அடிப்படைத்தத்துவத்தை நன்கு உணர்ந்திருந்தனர் தமிழர். அமெரிக்க நாட்டிலே மூன்று திருமணங்களில் இரண்டு வீதம் திருமணரத்துப் பெறுகிறது. ஆம், நாகரிகத்தின் உச்சியை எட்டிப்பிடித்துக் கொண்டிருப்பவர்கள் என எண்ணும் மக்கள் வாழும் அமெரிக்காவிலேதான். காரணம் என்ன? வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தை உணராதது தான். இதோ தமிழன் கண்ட வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவம்

இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந் [தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

இந்த வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவத்தோடு பொருளாதாரத் தத்துவமும் சேர்ந்து விளங்குகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தத்துவம். ஆனுல் என்றுமே எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மாபெரும் தத்துவம்.

அடுத்து தமிழன் வாழ்வை இரண்டாகப் பிரித்தான் "அகம்" என்றும் "புறம்" என்றும் பெயரிட்டான். புறத்திலும் பார்க்க அகத்திற்கே தமிழன் பெரு மதிப்பைக் கொடுத்தான். வாழ்விலும் அதனையே புறத்தைக் காட்டிலும் உயர்ந்ததாக கருதி வாழ்ந்தான். அவன் வகுத்த கொள்கைகள், கலைகள், இலக்கியங்கள் எல்லாம் அகத்தையே அடிப்படையாகக் கொண்டுதான் வகுத்தான். இலக்கியம் கூட தன்னிற் பெரும் பகுதியை அகத்திற்கே தந்துவிட்டது. மற்றவர்கள் இன்று தான் அகத்தின் மகத்துவத்தை உணர்ந்தனர். ஆனுல் தமிழன் இரண்டா

# உன்னை நீ காதலிக்கின்றாயா?

பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் எம். ஏ, பி. ஓ. எல்.

( தலைவர், தமிழ்மறைக் கழகம். )

'இஃது என்ன கேள்வி? தன்னைத் தான் காதலிக்காத ஒருவன் உலகில் உண்டா?' என்று பலர் கேட்கலாம். இஃது என்னுடைய வினா அன்று. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுப்பப்பட்ட வினா. உலகமக்களுக்கு வாழும் நெறியை வகுத்துக் காட்டிய வள்ளுவர் பெருமான் கேட்ட வினா.

இன்பத்தை நாடுவது உயிரியல்பு. துன்பத்தை நீக்கி இன்பமாக வாழுதற்கு முயலும் மக்கள் பலர் துன்பத்திலேயே அழுந்தி வருந்துகின்றார்கள். தமக்காகத்-தம் நல்வாழ்வுக்காகப் பின்விளைவு நோக்காமல் எதையுஞ் செய்ய இவர்கள் முயல்கிறார்கள். தாம் இன்பமடைந்தாற் போதும் என்ற எண்ணம் இவர்களிடம் இருக்கிறது. எனினும், இவர்கள் தங்களைத்தாங்களே காதலிக்காதவர்கள் போல் நடந்து துன்பக் கடலில் மூழ்கிறார்கள். இவர்கள் உள்ளத்தில் படத்தக்க முறையிலே பேசி உண்மையை எவ்வாறு உணர்த்துகிறார் வள்ளுவர் என்று பாருங்கள்.

இவர்கள் தம்மைப்பற்றிய கவலைதான் உடையவர்கள். பிறரைப் பற்றிச் சிறிதுங் கருதாதவர்கள். இவர்களிடத்திலே "பிறருக்குத் தீங்கு செய்யாதே, பிறரிடத்து அன்புகாட்டு, பிறருக்கு உதவி செய்" என்று எடுத்த எடுப்பிலே கூறிவிட்டால் அவற்றுக்கு இவர்கள் சிறிதுஞ் செவிசாய்க்க மாட்டார்கள். கள்ளுப் போதையில் மயங்கி

---

யிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டான் இந்த உண்மையை இன்னும் எவ்வளவோ எடுத்தியம்ப முடியும் சான்றுகளுடனும் வரலாறுகளுடனும் ஆனால் ஒரு புது மொழி "தமிழர் தம் பெருமையைத் தரணிக்கெடுத்தியம்பவும் முடியுமோ? இதன்படி தமிழர் வரலாறு, தமிழர் தம் வாழ்க்கை, அவர்களின் தத்துவங்கள் யாவும் எழுத எழுத ஊறிக் கொண்டேயிருக்கும் நீரூற்றுக்கள்.

எனவே, இவர்களுடைய வாழ்வும், பண்பாடும், எண்ணமும், மிகப்பழமையானவை. அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம் முதலிய பயன்கலைகளிலும், நுண்கலைகள் அனைத்திலும் இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன்னரே ஏனைய நாட்டு மக்களிலும் பார்க்க இவர்கள் சிறப்புற்றிருந்தனர். இவர்கள் கொண்ட கருத்துக்கள், எல்லாம் தமிழன் கொண்ட கருத்துக்கள், அறிவுச்செல்வங்கள் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. ❋

---

## 'கதைகதையாம் காரணமாம்...'

[18ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடதாசி வாங்கினார். ஒரே உற்சாகம்! ஈழத்து எழுத்தாளர்களின் சிருட்டிகளைத் துணிந்து வெளியிடுவது மட்டுமல்ல, 'கலாதேவி' பணமும் தரத் தொடங்கி விட்டது என்று எண்ணியபோது அவர் பெருமூச்சு விட்டார்!

புத்தகங்களோடு வீட்டுக்கு வந்ததும், மனைவிக்கும் அவருக்குமிடையில் ஒரு துவந்த யுத்தமே நடைபெற்றது. மனைவி அந்தப் பதினைந்து ரூபாவிற்கும் ஒரு நூற் சேலை வாங்கலாம் என்று எண்ணியிருந்தாள்!

முடிவாக அன்று இரவு நவரத்தினம் சாப்பிடவில்லை. மனதிலே எத்தனையோ சிந்தனைகள்!

வெறுப்புஞ் சலிப்புமடைந்திருந்த மனத்திரையில், அன்று சொக்கலிங்கம் சொன்ன கதை ஞாபகத்திற்கு வந்தது!

மௌனமான இரவின் பிற்பகுதி வரையும் கண் விழித்து அந்தக் கதையை எழுதினார். ஆம், பதினைந்து ரூபாய்க் காசு திரும்பவும் வரும் என்ற நம்பிக்கையோடு.

கதையின் காரணமே அதுதான்! அதனால் தான், அவர் கதையின் சிறப்பான நோக்காகிய அழுத்தமான மூலக் கருத்து சிக்கிக் கொள்ளாமல் தப்பி விட்டதோ!

❋ ❋ ❋

கூட்டம் முடிந்து விட்டது. எல்லோரும் வெளியே வந்தார்கள். கைலாயநாதனிடம் 'பதினைந்து ரூபாவுக்காகத்தான் கதையை எழுதினேன்' என்ற காரணத்தைச் சொல்லி விடுவோமா என்று ஒரு கணம் வெறுப்போடு எண்ணினார் எழுத்தாளர்.

ஆனால் ஆசிரியரைக்கண்டபோது அவர் அப்படிச் சொல்லவில்லை. "பிரசுரிக்க முடியாவிட்டால் கதையைத் திருப்பியனுப்பி விடுங்கள்" என்று தான் சொன்னார். அவர் லட்சியவாதியல்லவா? கதை திரும்பி வந்தால் இன்னோர் பத்திரிகைக்குத் 'தானஞ்' செய்வார்! ❋

இருப்பவனுக்குக் கட்குடியின் தீமைகளை விளக்குவதாற் பயனுண்டா? இதைப் போலவே இவர்களுக்கும் பிறருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப்பற்றிக் கூறுவதாற் பயன் உண்டாகாது. இவர்கள் தம்மை மாத்திரமே பற்றிய கவலைதான் உடைய வர்கள். தம்மைத்தாம் காதலிப்பதாக எண்ணிக்கொண்டு செயற்படுபவர்கள்.

எனவே, வள்ளுவர் இவர்கள் உள்ளத்தில் ஒரு திடுக்காடு ஏற்படத்தக்கதாக "உங்களை நீங்கள் காதலிக்கிறீர்களா?" என்று ஒரு போடு போடுகிறார்.

"என்ன இவர் பொல்லாதவராக இருக்கிறாரே! எங்களை நாங்கள் காதலிக்காமலா இந்த நாய்படாப்பாடு படுகிறோம்." என்று அவர்கள் சிறிது சிந்திக்கிறார்கள். "ஏன் இப்படி எங்களை மடக்குகிறீர்? நாங்கள் அப்படி என்ன செய்து விட்டோம். எங்களுக்கு நாங்களே பகைவர் என்று சொல்லப்பார்க்கிறீரே! என்ன ஐயா! உங்கள் நெஞ்சழுத்தம்," என்று கேட்கிறார்கள். உடனே வள்ளுவர்,

"ஒருவன் தன்னைத் தான் காதலிப்பானுயின் எவ்வித தீய காரியங்களையும் செய்யமாட்டான்; (தீயகாரியங்களைச் செய்கிறவன் தன்னைத்தான் காதலிப்பதில்லை)" என்கிறார்.

"தன்னைத்தான் காதலனுயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்"—தமிழ்மறை—209.

கேட்டவர்களும் சிந்திக்கிறார்கள், சிந்திக்கிறார்கள். உண்மை உள்ளத்திலே இடையிடையே தோன்றுகிறது. எனினும், தம் செயல்களுக்குத் தம் நூலறிவின்மையே காரணம் என்று சாட்டுக்கூற முயல்கிறார்கள்.

"அறநூல்களில் விதித்தனவற்றையும் விலக்கினவற்றையும் நாம் அறியோம். அவற்றை நாம் படிக்கவும் இல்லையே" என்கின்றனர். வள்ளுவர் சொல்கிறார்;" நெருப்பைத் தொட்டால் சுடும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒருவன் உங்களைப் பழித்தால் நீங்கள் துன்பம் அடைகிறீர்கள். எனவே நீங்கள் பிறரை நெருப்பாற் சுட்டால் அஃது அவர்களைச் சுட்டுவருத்தும். என்பதையும், நீங்கள் பிறரை பழித்துரைத்தால் அஃது அவர்களைத் துன்புறுத்தும் என்பதையும் உங்கள் அனுபவத்தால் அறியலாம். இவ்வாறு உங்களுக்குத் துன்பந் தருபவற்றை நீங்கள் பிறருக்குச் செய்யாமல் விட்டாற் போதும்."

"இன்னு எனத்தான் உணர்ந்தவை துன்னுமை
வேண்டும் பிறன்கட் செயல்"

அவர்களும் உண்மையை முழுதும் உணர்ந்து கொள்கிறார்கள்.

* * * * *

உன்னை நீ காதலிக்கின்றாயா என்று வினவுதல் போன்ற பாணியில் வள்ளுவர் வேறும்பல உண்மைகளை உரைத்துளர்.

"உன்னை நீ காத்துக்கொள்ள விரும்புகிறாயா? உன்னைக் கொல்லாமற் பாதுகாத்துக்கொள்ள எண்ணுகிறாயா? அப்படியானால், கோபம் உன்னிடத்து உண்டாகாமற் பார்த்துக்கொள்" என்கிறார் வள்ளுவர்.

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க
காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்"—தமிழ்மறை

நோயில்லாமல், துன்பமில்லாமல், கேடில்லாமல் வாழவிரும்புகின்றாயா? அப்படி விரும்பினால், பிறருக்குத் தீமைகளை-கொடுமைகளைச் செய்யாதே என்பதைப் பின்வரும் மூன்று குறள்களிலும் அவர் அழகுறக் கூறுகிறார்.

"தீப்பால தான் பிறர்கட் செய்யற்க நோய்ப் பால
தன்னை அடல் வேண்டா தான்"

"நோய் எல்லாம் நோய் செய்தார் மேலலாம்
நோய் செய்யார்
நோயின்மை வேண்டுபவர்"

"அருங்கேடன் என்பதறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்"

*

சிங்கத்தைப் போல் தைரியமாயிரு; என்ன கஷ்டம் கவலை வந்தாலும் அவற்றைப் பொறுத்துக்கொள்; நல்லது வந்தபோதும், கெட்டது வந்தபோதும் கடவுளை நோக்கு; அப்படிச் செய்தால் மனதுக்கு ஆறுதலும், உதவியும் கிடைக்கும்.

— சுவாமி விவேகானந்தர்.

தங்கள் வேலையை மற்றவர்கள் மெச்சவில்லையே என்ற காரணத்துக்காக அவர்கள் தங்கள் முயற்சியைக் குறைத்துக் கொள்ளவோ அல்லது யோக்கிய முறைகளினின்றும் நழுவிவிடவோ கூடாது.

— மகாத்மா காந்தி.

### யாழ்-மத்திய கல்லூரியும், எழுத்துலகும்—3



"எனது வாழ்க்கையை உருவாக்கியது மத்திய கல்லூரியே. மத்திய கல்லூரியில் நான் பெற்ற வசதிகளும், மத்திய கல்லூரியில் பணிபுரிந்த சில பெரியார்களின் தொடர்புமே என்வாழ்வை வளம் பெறச் செய்தன.'' எனக் கலைப்புலவர் அவர்களே, சமீபத்தில் அவர் பாடசாலையிலிருந்து 38 வருட சேவையின்பின் இளைப்பாறியபோது, கல்லூரியில் நடைபெற்ற பிரிவுபசாரக் கூட்டத்தில் குறிப்பிட்டார். அவர்களைப் பற்றிய கட்டுரையை, எமது தொடரின் 3 வது கட்டுரையாகப் பிரசுரிக்கிறோம். மத்திய தீபமும், இப்பெரியார் தமது ஓய்வுக் காலத்தை அமைதியாகவும் பயனுள்ளதாகவும் கழிக்கத் தன் ஆசியைத் தெரிவிக்கிறது.

# கலைப்புலவர்
# க. நவரத்தினம்

"தமிழில் அல்லவா தமிழ் நாட்டுச் சிற்பங்களின் வரலாறுகளும் அதிசயங்களும் எழுதப்படவேண்டும்! இக்குறையைத் தீர்க்க வந்தவர் ஸ்ரீ நவரத்தினம் என்ற யாழ்ப்பாண தேசத்தவரே '' கலைப்புலவர் நவரத்தினமவர்கள் எழுதி வெளியிட்ட தென் இந்திய சிற்பவடிவங்கள் என்னும் நூலைக் கண்ணுற்ற தமிழ் நாட்டின் கலை விமர்சகராகிய கி. சந்திரசேகரன் அவர்கள் இவ்வாறு அறுதியிட்டுச் சொன்னார். பதினைந்து ஆண்டுகளுக்குப்பின் புலவரின் "இலங்கையிற் கலை வளர்ச்சி" யென்னும் நூலிற்கு மதிப்புரை எழுதுகையில் "கலைமகள் கடாட்சம் பூரணமாய் நண்பர் க. நவரத்தினம் அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதைக் காண என்போன்ற சிற்றறிவு படைத்தவர்களுக்குத் தாங்காத பொருமை ஏற்படுகிறது'' என்று மனந் திறந்து சொன்னார். தமிழ் நாட்டாரும் ஈழத்தமிழர்களும் கலைப்புலவரின் திறமையைப் பாராட்டும் பொழுது, அவரை ஆசிரியராகப் பெற்ற யாழ். மத்திய கல்லூரியினர் பெருமையும் பூரிப்பும் கொள்ளாதிருக்க முடியாது.

கலைப்புலவர் க. நவரத்தினமவர்கள் நமது கல்லூரியின் தனிப்பெருஞ் சொத்து. இவர் பிறந்தது 15-9-1898 ஆம் ஆண்டில். உவெஸ்லியன் மிஷனால் நடாத்தப்பட்ட தமிழ்ப் பாடசாலையில் தனது ஆரம்ப கல்வியை முடித்துக் கொண்டு யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் சேர்ந்தார். அப்பொழுது அதிபராக இருந்தவர் வண. மீக் அவர்கள். இவர் சிரேஷ்ட வகுப்புகளிற் படித்துக் கொண்டிருந்த காலத்தில் உயர்தர வர்த்தகப் பாடங்களைக் கற்பிக்க விரும்பிய இவர் தந்தையார், கொழும்பிலுள்ள வர்த்தகக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தார். இரண்டாண்டுகளுக்குப் பின் வர்த்தகக் கல்வியில் பயிற்றப்பட்ட பட்டங்களுடன் திரும்பிய நவரத்தினமவர்களை மத்திய கல்லூரி, ஆசிரியராக வரவேற்றது.

வாணிபப் பாடங்களைக் கற்பிப்பதற்குத் தகுந்த ஆசிரியர் கிடைத்து விட்டதால் வண. வில்க்ஸ் அவர்கள் விரும்பியவாறு 1920ஆம் ஆண்டில் ஓர் வாணிப வகுப்பை ஆரம்பித்து நவரத்தினமவர்களை அதன் பொறுப்பாசிரியராக்கினார், வண. புள்ளோ அவர்கள். அன்றிலிருந்து கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாகவிருந்து அதிபருடனும் நிர்வாகக் குழுவுடனும் ஒத்துழைத்து சகல துறைகளிலும் சேவை புரிந்தார். இவரது ஆலோசனைகள் பலவகைகளில் பயனளித்தது. நவரத்தினமவர்கள் கல்லூரியை வளர்த்தார். கல்லூரி நவரத்தினமவர்களின் திறமைகளை வளர்த்து கலைப்புலவராக்கியது.

வர்த்தகக் கல்வியில் பயிற்சி பெற்றிருந்த போதிலும், அதைக்கொண்டு மட்டுமே பெருந்தொகையான பணம் சம்பாதிக்கக் கூடிய வாய்ப்பு இருந்த போதிலும் சமயம், கலை, கலாச்சாரம் இவைகளே அவரைக் கவர்ந்தன. கறுத்தக்கட்டை மீசையுடன் நீண்ட அங்கியணிந்து ஒரு துறவி போல் வாழ்ந்தார். இந்தத் துறவுக் கோலம் நீண்டகாலம் நிலைத்திருக்க வில்லை,

**கா. மாணிக்கவாசகர்**

பலவாற்றாலும் பெருமை வாய்ந்த ஓர்கலைக் குடும்பத்தில் தோன்றிய கலைச் செல்வி யொருவர் வங்காளத்தில் சாந்திநிகேதனில் பயின்ற நாட்டியக்கலையை, ஈழத்தின் கலாரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும் பணியை மேற்கொண்டார்கள், கலையுள்ளங்கள் ஒன்றுபட்டு, அது காதலாகி, கல்யாணத்தில் நிறைவேறியது. இந்த மங்கள நிகழ்ச்சியை ஆசீர்வதித்த அன்பர்கள் கலையுடன் கலை சேர்ந்தது என வாழ்த்தினார்கள். நவரத்தினமவர்களின் வெற்றியில் பெரும் பங்கு கொண்டவர் அவரது வாழ்க்கைத் துணைவியாகிய திருமதி. மகேஸ்வரிதேவியவர்கள். யாழ்ப்பாணத்தில் இசைக்கலைக்கென ஒரு கழகம் நிறுவிய பெருமை இவர்களுடையது. இக்காலத்தில் ஒருவீணையையோ, வயலினையோ, மீட்கத் தெரிந்துவிட்டால் அல்லது பாடத்தெரிந்து விட்டால் அப்பெண்மணிகளின் நடை, உடை, பாவனை எல்லாம் அதிசயமாகவிருக்கும். நாட்டியத்திலும், வீணை, சித்தார், கோட்டு வாத்தியம், ஜலதரங்கம் முதலான இசைக்கருவிகளில் இன்னிசை மீட்கும் திறமையும் வாய்ந்த மகேஸ்வரிதேவியவர்களின் வாழ்க்கை முறை மிகமிக எளிமையானது. இக்காலப் பெண்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

கலைப்புலவர் காலத்திற் கேற்ற பணி புரிந்தார். நமது நாடு அந்நியரிடம் அடிமைப்பட்டு தமிழருடைய கலை, சமயம், பண்பாடு இவைகள் குன்றியிருந்த காலத்தில் ஈழத்தறிஞர்களை ஒன்று சேர்த்து "கலா நிலையம்" என்றதோர் ஸ்தாபனத்தை நிறுவி தமிழ் நாட்டாரின் பண்புகளை நிலைநாட்டினார். யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ சமயம் பரவி இந்து சமய உண்மைகளை மறுத்தும் மறைத்தும் கிறிஸ்தவர்கள் பிரசாரஞ் செய்தபொழுது அவர்களுக்கு சைவ, சித்தாந்த, வேதாந்த தத்துவங்களை எடுத்துச் சொன்னார். யாழ்ப்பாண உளவியற் கழகத்தில் அநுபூதி நெறி (Mysticism) என்னும், பொருளிலும், கிறிஸ்தவ சேவா ஆசிரமத்தில், இந்து சமய தத்துவங்கள், சமயத்தின் தத்துவம் என்னும் பொருள்களில் விரிவுரைகளாற்றியது குறிப்பிடத்தக்கது இந்து ஆலயச் சீர்திருத்தத்திற்கும், தீண்டாமையை ஒளிப்பதற்கும் பணிகள் பல புரிந்தார். சுதந்திரமடைந்த இலங்கையில்தன்மொழிகளில் பாடங்களைக் கற்பிக்கத்தொடங்கிய பொழுது பலபாடங்களுக்கு புத்தகங்கள் இல்லாதிருந்தது. இவர் எழுதிய கணக்குப் பதிவு நூல்களால் இக்குறை ஓரளவுக்குத் தீர்ந்தது .

இன்று அரசினரும், சரித்திராசிரியர்களும் இலங்கையைச் சிங்கள நாடென்றும், தமிழர் இந்நாட்டில் வாழ்ந்ததில்லை யென்றும் கூறி சரித்திரத்தை மாற்றக் கங்கணங் கட்டிக் கொண்டிருக்கின்றனர். ஆகவே நாம் போதிய நடவடிக்கை எடுக்காவிட்டால் ஈழநாட்டில் தமிழருக்குள்ள உரிமை பறிபோய்விடும் என்ற கருத்தை வற்புறுத்தினார். சரித்திரத்தில் ஆர்வமுடையவர்களைக் கூட்டி "யாழ்ப்பாணச் சரித்திர ஆராய்ச்சிக் கழகம்" என்னும் இயக்கத்தைத் தொடங்கியவர் நம் ஆசிரியரவர்கள். அத்துடன் Tamil Elements in Ceylon Culture என்றதோர் நூலையும் எழுதி வெளியிட்டார்.

கலைப்புலவர் நவரத்தினமவர்களின் இல்ல அமைப்பும் அவரது முயற்சிகளுக்கு ஒரு காரணமாகும். பொஸ்ரன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கார்ல் பியூறிங்டன் சொன்னார் "இந்த இல்லம் இந்துசமயப்பண்புகளின் இருப்பிடமாக விளங்குகிறது. பேராசிரியர் நவரத்தினமவர்களது நூலகத்தைப் போன்றதோர் நூலகத்தை நான் வைத்திருக்க விரும்புகிறேன்."

ஆசிரியர் கல்லூரியில் கடமையாற்றிய காலத்தில் வண. புள்ளோ முதல் வண. நயில்ஸ் வரை பதவியேற்ற ஒன்பது அதிபர்களின் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றார். நமது கல்லூரியின் சரித்திரத்தை முறையாகச் சொல்லக்கூடியவர் திருவாளர் நவரத்தினம் ஒருவரே.

"அன்பர் திரு. நவரத்தினம் இதுவரை இரண்டு இரத்தினங்களை வெளியிட்டுள்ளார்கள். இன்னும் ஏழு இரத்தினங்களை வெளியிட்டு நவரத்தின ஆசிரியராக விளங்கவேண்டும்" என்ற 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜகந்நாதனின் விருப்பம் நிறைவேற இறையருள்புரிக.

*

நீ எண்ணியதை எல்லாம் வெளியிடாதே ; நீ நன்றாய் ஆலோசியாத எதையும் செய்யத் துணியாதே; யாவரிடமும் நேசமாயிரு; ஆனால் அற்பத்தனம் உடையவனாக இராதே. — ஷேக்ஸ்பியர்.

மனிதன் முன்னோக்கிச் செல்கிறான் என்றால் அவனுடைய கஷ்டங்கள் இன்னும் அதிகமாகின்றன என்றே அர்த்தம். இதை அவன் வரவேற்க வேண்டும்.

— மகாத்மா காந்தி

ஒன்றுந் தெரியாது என்று எண்ணுபவனுக்குக் கொஞ்சமாவது புத்தியுண்டு; தனக்கு எல்லாம் தெரியும் என்று இருப்பவன்தான் சுத்த முட்டாள். — புத்தர்

பிரபஞ்ச வாழ்வில் சோதனைகள் அனந்தம். ஒவ்வொரு சோதனையும் உன்னைப் பாதாளத்தில் அமிழ்த்திக் கொல்வதாக இருக்கும். ஆழ்ந்த பள்ளத்தாக்குகளிலே உன்னைத் தள்ளிவிடும். ஆயினும் நீ சித்தம் சலித்து விட்டுவிடாதே. அடிக்க அடிக்கப் பந்து விசைகொண்டு எழுவது போல தவறிப்போன ஒவ்வொரு தடவையிலும் புதிய ஊக்கத்தைக் கைக்கொள்.

* குத்தலும் கிண்டலும் நிறைந்த கவிதைகளை, புதுமையுடன் எழுதிப் புகழுடைந்த இவர், 'தினகர'னில் தலைவர்கள் வாழ்க மாதோ! என்ற தொடரில், இலங்கையின் அரசியற் பிரமுகர்களைப்பற்றித் தொடர்ந்து பாடிவருவதை வாசகர்கள் அறிவார்கள். இவரின் கற்பனைத் திறனுக்கும், சொல்லாட்சிக்கும் உயர்ந்த எடுத்துக்காட்டாக உள்ளது —

# ஓயாத ஊடல்!

... தான்தோன்றிக் கவிராயர் ...

ரோகிணி:

வானத் திரை நீவி,
வண்ண முகிற் சாளரத்தில்
மோனத் தவமிருக்கும்
முத்து நிலவழகி!
ஏனிங்கிருந் தேங்கி,
ஏகாந்தமாய், வதனம்
கூன, பொலிவிழந்த
கோலத்தில் வாடுகிருய்?

சந்திரிகை:

ஆழி மகள் கூத்தாட,
ஆதவன் என் காதலன், அப்
பாழ் பட்டாள் பாசவலைப்
பட்டு, வசமிழந்து,
மேலைத் திசை சென்ருன்;
மீள வரக் காணேனே!
நாழிக் கணக்காச்சு;
நம்பி வரக் காணேனே!

ரோகிணி:

அங்கே பார், உன்னிதய
அன்பன், உனைச் சூழும்
கங்குல் கிழிக்க,
கதிர் வீசும் தேரோட்டி,
இங்குன் மனை நாடி
எட்டி வரும் காட்சி தனை!
எங்கேடி, ஏதுக்கு,
எழுந்தோடிப் போகின்ருய்?

சந்திரிகை:

வந்தென்னைத் தேடி, அவன்
வாடட்டும்; இந்நாழி,
நொந்து வெதும்பி
நுடங்க எனை விட்டு,
எந்த மடவாளோ
டிணங்கி யிருந்தானே,
அந்த மடவாளோ
டனுபவிக்கப் போகட்டும்!

ரோகிணி:

போய் விட்டான், பேதாய்! நீ
பொன்றி, உடல் மென்பசலை
நோயில் நலிய, மனம்
நோவதினுல் யாது பயன்?
ஏய் பெண்ணே! உன்னைத் தான்!
எதற்கு, மறுபடியும்
மேய்கின்ற துன் கண்கள்
மேற்குத் திசையினையே!

சந்திரிகை:

என்ன தான் தேறுதல்கள்
இயம்பிடினும், பாழ்மனந்தான்
சொன்னபடி கேட்கிறதா?
சொக்கத் தக தகக்கும்
மன்னவன், என் காதலன், தன்
மனை நாடி வாரானோ?
என்னுடலிற் தோய் பசலை
எடுத் தெறிய வாரானோ?

ரோகிணி:

மீண்டும், அதோ, உன் மனதின்
மீளாத் துயர் போக்க
வேண்டி, கதிரழகன்
விரைந்து வருகின்ருன்!
ஏன்டி மறுமடியும்
எழுந் தெங்கோ ஓடுகிருய்?
மூண்ட வினை யாதுனக்கு?
முட்டாளே! போகாதே!

சந்திரிகை:

போடி! அவன் வந்து வந்து
போகுமிடம் நானறிவேன்!
மோடிக் கடல் மகளாம்
மூதியினை, மீளவுமே
நாடிப் போய், தன் தினவை
நல்லபடி தீர்க்க, வழி
தேடியவன், ஏன் என்னைத்
தேடுகிருன்? போகட்டும்! ❋

‘மத்திய தீப’த்தின் வளர்ச்சிக்கே பேருதவியளித்து வரும் ‘வரதர்’ அவர்கள், பல சிறுகதைகள் எழுதிப் புகழடைந்தவர்; ‘மறுமலர்ச்சி’, ‘ஆனந்தன்’ ஆகிய இரு பத்திரிகைகளை நடாத்தி, பத்திரிகைத் துறையில் அனுபவம் பெற்றவர்; ஈழ நாட்டின் இளம் எழுத்தாளர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக உள்ளவர்.

# கற்பு

— ‘வரதர்’ —

மாலை நாலரை மணி. பிள்ளையார்கோயில் கணபதி ஐயர் விட்டின் முன் விருந்தையிலே மூர்த்தி மாஸ்டரும் ஐயரும் கதைத்துக்கொண்டிருக்கிறார்கள். எங்கெங்கெல்லாமோ சுற்றி வந்து கடைசியில் இலக்கிய உலகத்திலே புகுந்தார்கள்.

‘‘மாஸ்டர், நீங்கள் ‘கலைச்செல்வி’யைத் தொடர்ந்து படித்து வருகிறீர்களா?’’ என்று கேட்டார் ஐயர்.

‘‘ஓமோம், ஆரம்பத்திலிருந்தே ‘பார்த்து’ வருகிறேன். ஆனால் எல்லா விஷயங்களையும் படித்திருக்கிறேனென்று சொல்ல முடியாது ஏன், என்ன விசேஷம்?’’

‘‘கலைச்செல்வி’ பழைய பிரதி ஒன்றை இன்றுதான் தற்செயலாகப் படித்துப் பார்த்தேன். அதிலே ஒரு சிறுகதை....’’

‘‘யார் எழுதினது?’’

‘‘எழுதினவர் பெயரைக் கவனிக்கவில்லை. அந்தச் சம்பவந்தான் மனத்தை உறுத்திக் கொண்டே யிருக்கிறது.’’

‘‘சொல்லுங்கள், நினைவு வருகிறதா பார்க்கலாம்?’’

‘‘மூன்றாம் வருஷம் இலங்கையில் பெரு வெள்ளம் ஏற்பட்டதல்லவா, அந்தச் சூழ்நிலையை வைத்துக் கதை எழுதப்பட்டிருக்கிறது. குளக்கட்டை உடைத்துக்கொண்டு ஒரு கிராமத்துக்குள் வெள்ளம் பெருகி வருகின்றது, சனங்கள் உயரமான இடத்தைத் தேடி ஓடுகிறார்கள். அந்த ஊரில் ஒரு பணக்காரனின் விட்டுக்கு மேல்விடும் இருக்கின்றது. அங்கே அவன் தனியாக இருக்கிறான். வெள்ளத்துக்கு அஞ்சி ஒரு ஏழைப்பெண் – இளம்பெண் அந்த மேல் விட்டுக்குச் செல்கிறாள், பணக்காரன் அவளைப் பதம்பார்க்க முயல்கிறான். அவள் இசையவில்லை. அவன் பலாத்காரம் செய்தேனும் அவளை அடைந்துவிடத் துணிந்துவிட்டான். அவள் உயிரைவிடக் கற்பையே பெரிதாக மதிப்பவள். மேல் விட்டில் இருந்து கீழே குதித்து உயிரைத் துறந்தாள். கற்பைக் காப்பாற்றிக்கொண்டாள்.........இந்தக் கதையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் மாஸ்டர்?’’

‘‘என்ன நினைக்கிறது? புராண காலத்தில் இருந்து திருப்பித் திருப்பிப் படித்த ‘கருத்து’த்தான். கதையை அமைத்த முறையிலும் வசன நடையின் துடிப்பிலுந்தான் இந்தக் கதைக்கு வாழ்வு கிடைக்கும். நான் படிக்கவில்லை. படித்தால்தான் அதைப்பற்றிச் சொல்லலாம்.’’

‘‘நான் கதைக்கு விமர்சனம் கேட்கவில்லை மாஸ்டர். புராண காலத்தில் இருந்து படித்ததாகச் சொன்னீர்களே, அந்தக் ‘கருத்தை’ப்பற்றித்தான் உங்கள் அபிப்பிராயம் என்ன என்று கேட்கிறேன்.’’

‘‘எதைக் கேட்கிறீர்கள் ஐயா? தனது கற்பைக் காப்பாற்ற உயிரைத் துறந்தாளே, அதைப்பற்றியா?’’

‘‘ஓமோம், அதையேதான்.’’

‘‘ஒரு பெண்ணின்—முக்கியமாகத் தமிழ்ப் பெண்ணின் சிறப்பே அதில்தானே இருக்கின்றது. மானம் அழிந்தபின் வாழாமை இனிதென்பதல்லவா தமிழன் கொள்கை?’’

ஐயர் பெருமூச்சு விட்டார். பிறகு; ‘‘நீங்களும் இப்படிச் சொல்கிறீர்களா?’’ என்று கேட்டார்.

மூர்த்தி மாஸ்டர் திகைத்தார். தான் என்ன தவறுதலாகச் சொல்லி விட்டாரா? இந்த ஐயர் என்ன இப்படிக் கேட்கிறார்.

ஒரு நிமிஷ நேரம் மௌனம் நிலவிற்று. ஏதோ எண்ணித் துணிந்துவிட்டவர்போல கணபதி ஐயரே மீண்டும் மௌனத்தைக் கலைத்தார்.

‘‘மாஸ்டர் எனக்கும் என் மனைவிக்கும் மட்டும் தெரிந்த ஒரு இரகசியத்தை உங்களுக்குச் சொல்லப்போகிறேன் — உங்களுக்குச் சொல்லலாம். சொல்வதால் ஒரு தீமையும் ஏற்படாது. இதைக் கேட்டபிறகு ‘கற்பு’ பிரச்சனையைப்பற்றிப் பேசுவோம்.

போனவருஷம் பெலியந்தலை முருகமூர்த்தி கோயிலில் நான் பூசை செய்து கொண்டிருந்தது உங்களுக்குத் தெரியும். அங்கே தமிழர்கள் தொகை ஐம்பதுபேர்கூட இருக்காது. விசேட தினங்களுக்கு மட்டும் பிற இடங்களிலிருந்தெல்லாம் வந்து கூடுவார்கள். சிங்களவர் கூடப் பலர் கோயிலுக்கு வந்து அருச்சனை செய்விப்பது வழக்கம்.

‘‘சிங்களவர் – தமிழர் கலகம் துவங்கினவுடனே அங்கே இருந்த தமிழர்களில் முக்கால் வாசிப் பேரும் யாழ்ப்பாணத்துக்கு ஓடிவந்து விட்டார்கள். நான் பூசையை விட்டுவிட்டு எப்படிப் போக முடியும்? என் மனைவியைப் போகும்படி சொன்னேன். எனக்கு வருவது

தனக்கும் வரட்டுமென்று அவள் மறுத்து விட்டாள். சிங்களவரும் அக் கோயிலிலே கும்பிட வரும்வழக்கம் இருந்ததால் கோயில் விஷயத்தில் தலையிடமாட்டார்கள். எங்களுக்கும் ஆபத்து நேராது என்ற துணிவில், அவளை மேலும் வற்புறுத்தாமல் விட்டுவிட்டேன்.

''ஒரு புதன்கிழமை. அன்று மத்தியானம் பேபிநோனு என்ற சிங்களக் கிழவி — அவள் எங்களோடு நன்கு பழகியவள். கோயிலுக்கும் நாள் தவருமல் வருகிறவள் — அவள் சொன்னுள். ''நீங்கள் இனி இங்கே இருப்பது புத்தியல்லை ஐயா. காலியிலிருந்து சில முரடர்கள் மூன்று லொறிகளில் வருகிருர்களாம். வருகிற வழியெல்லாம் தமிழர்களை இல்லாத கொடுமை செய்கிருர்களாம். இன்றிரவோ நாளையோ இந்தப்பக்கம் வரக்கூடுமென்று கதைக்கிருர்கள். நீங்கள் இப்போதே புறப்பட்டு பொலிஸ் ஸ்டேசனுக்குப் போய்விடுங்கள். பிறகு பொலிஸ் துணையோடு கொழும்புக்குச் செல்லலாம்'' என்ருள்.

''அவள் சொன்னதைக் கேட்டபிறகு 'அப்பனே முருகா! என்னை மன்னித்துக் கொள்' என்று மனதுக்குள் வேண்டிக்கொண்டு கையோடு கொண்டு போகக்கூடிய பொருட்களை இரண்டு பெட்டிகளுள் சேகரித்தோம். என் மனைவியின் நகைகளையும் - நூல்ல் கட்டிய தாலியொன்றைத் தவிர - எல்லாவற்றையும் கழற்றிப் பெட்டியில் பூட்டினேம். இந்த ஆயத்தங்கள் செய்வதற்குள் மாலை ஐந்து மணியாகிவிட்டது. நாங்களும் புறப்பட ஆயத்தமானபோது பேபிநோனு அவசரம் அவசரமாக ஓடிவந்தாள். 'ஐயா, ஐயா, சில்வாவும் வேறு இரண்டு பேருமாக வாருன்கள். அம்மாவை அவன்கள் கண்ணில் படாமல் எங்கேயாவது ஒளித்திருக்கச் சொல்லுங்கோ? கேட்டால் 'நேற்றே ஊருக்குப் போய்விட்டா' என்று சொல்லுங்கோ. நான் இங்கே நின்ருல் எனக்கும் ஆபத்து; உங்களுக்கும் ஆபத்து, கவனம் ஐயா!'' என்று சொல்லிவிட்டு பேபிநோனு ஓடி மறைந்துவிட்டாள்.

''சில்வாவை எனக்குத் தெரியும், ஆள் ஒரு மாதிரி, 'ஐயா, ஐயா' என்று நாய்மாதிரிக் குழைந்து ஐம்பது சதம், ஒருரூபா என்று இடைக்கிடை என்னிடம் வாங்கியிருக்கிருன். ஆள் காடைத் தரவளியாதலால் நானும் பட்டும் படாமலும் நடந்து வந்திருக்கிறேன். இரண்டொரு நாள் என் மனைவியை ரேட்டில் தனியாகக் கண்டபோது அவனுடைய பார்வையும் சிரிப்பும் நன்ருக இருக்கவில்லை யென்று அவள் சொல்லியதுண்டு.

''இப்போது அவன் வருகிருனென்ருல்....

''எனக்கு ஒருகணம் ஒன்றும் தோன்றவில்லை. யோசிக்கவும் நேரமில்லை. வீட்டுக்குள் உயரத்திலே பரண்மாதிரி மூன்று மரங்களைப் போட்டு அதன்மேல் சில பழைய பெட்டிகளைப் போட்டிருந்தது. என் மனைவியை நான் தூக்கி அந்த மரங்களின்மேல் விட்டு மெதுவாக அந்தப் பெட்டிகளின் பின்னுல் மறைந்திருக்கும்படி விட்டேன். பிறகு எங்கள் பயணப் பெட்டிகளை எடுத்துச் சற்று மறைவாக ஒரு மூலையில் வைத்துவிட்டேன். பிறகு, முன் விருந்தைப் பக்கம் வந்தேன். நானும் வர அந்தக் காடையர்களும் வாயிலில் நுழைந்தார்கள். எனக்கு உள் மனது நடுங்க ஆரம்பித்துவிட்டது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, ''என்ன சில்வா, இந்தப்பக்கம்?'' என்று சிரிக்க முயன்றேன்.

''சும்மாதான், நீங்கள் இருக்கிறீர்களா, இல்லாவிட்டால் யாழ்ப்பாணத்துக்குக் கம்பி நீட்டிவிட்டீர்களா என்று பார்க்கத்தான் வந்தேன'' என்ருன்.

''முருகனை விட்டு நான் எங்கேதான் போக முடியும்?'' என்று சொன்ன என் குரலே தெளிவாக இல்லை.

''எங்களுக்குக் கொஞ்சம் தண்ணீர் குடிக்க வேண்டும்.'' என்ருன் சில்வா. நான் சரியென்று குசினிப்பக்கம் போனேன். எனக்குப் பின்னுல் அவர்கள் தொடர்ந்து வருவதை உணர்ந்தேன். ஆனுலும் திரும்பிப் பார்க்கவில்லை. ஒரு செம்பில் தண்ணீரை வார்த்துக் கொண்டு நிமிர்ந்தேன். எனக்கு முன்னுல் அந்த மூன்று காடையர்களும் நின்ருர்கள். செம்பைப் பிடித்த எனது கையில் நிதானமில்லை.

''அதுசரி ஐயா, எங்கே அம்மாவைக் காணவில்லை?''

நான் திருப்பித் திருப்பி மனத்துக்குள் ஒத்திகை பார்த்து வைத்திருந்த வசனங்களை ஒப்புவித்தேன்: ''அவ நேற்றே ஊருக்குப்போய் விட்டாவே.''

'பளீர்' என்று என் கன்னத்தில் ஒரு அறை விழுந்தது! செம்பும் தண்ணீரும் உருண்டு சிதறிற்று. என் கண்களுக்குப் பார்வை வருமுன்பே என் மடியில் கையைப் போட்டு ஒருவன் இழுத்தான், மற்றக் கையினுல் வயிற்றில் ஒரு குத்து விட்டான.

''தமிழ்ப் பண்டி'' பொய்யா சொல்லுகிருய்? இன்று காலையிற்கூட உன் பெண்டாட்டியைப பாாத்தேனே.'

மற்றவன் கேட்டான்: ''சொல்லடா! அவளை யார் வீட்டில் கொண்டுபோய் ஒழித்து வைத்திருக்கிருய்?'' எனக்கு நெஞ்சிலே கொஞ்சம் தண்ணீா வந்தது. இநத முரடர்கள் நான அவளை வேறு யார் வீட்டிலோ ஒழித்து வைத்திருப்பதாக நினைத்து விட்டார்கள். ஆகையால இந்த வீட்டில் அதிகம் தேடமாட்டார்கள். என் உயிர் போனுலும்சரி; அவள் மானம் நிலைக்கட்டும் என்று நினைத்துக்கொண்டேன்.

''என்னடா பேசாமல் நிற்கிருய்?''

குத்து! அடி! உதை!

குத்து! அடி! உதை!

குத்து! அடி! உதை!.........

நான் இயக்கமின்றிக் கீழே விழுந்து விட்டேன். அம் மட்டிலும் அவர்கள் விடவில்லை. இரண்டுபேர் என்னைப் பிடித்துத் தூக்கினார்கள்.

“அவள் இருக்கிற இடத்தை நீ சொல்ல மாட்டாய் ? …… கடைத் தெருப்பக்கம் காலியிலிருந்து லொறியில் வந்திருக்கிறார்கள். அவர்களிடம் உன்னைக் கொண்டுபோய்க் கொடுத்தால், உன்னைத் தலை கீழாகக் கட்டித் தூக்கித் தோலை உரித்த பிறகு கீழே நெருப்பைக் கொழுத்தி சுடுவான்கள், உனக்கு அதுதான் சரி ! …… வாடா ! ” என்று சொல்லி இழுத்தார்கள். என்னால் நடக்கவும் முடியவில்லை. அவ்வளவு அடி அகோரம். அவர்கள் என்னை இழுத்துக் கொண்டு நடு விட்டுக்கு வந்து விட்டார்கள். மேலே என மனைவி …… அந்த அறையையும் கடந்து வெளியே காலை வைத்து விட்டார்கள்.

“நில்லுங்கள் ! நில்லுங்கள் ! ” என்ற கூச்சலோடு என் மனைவி பரணிலிருந்து குதித்தாள்;

“அவரை விட்டு விடுங்கள் ! ” என்று அலறிக் கொண்டே என்னிடம் ஓடி வந்தாள்.

அவர்கள் என்னை விட்டு விட்டார்கள். ஆறு முரட்டுக் கரங்கள் அவளை மறித்துப் பிடித்தன.

“பிறகு …………

என்னை ஒரு மேசையின் காலோடு பின் கட்டாகக் கட்டினார்கள். அவளை — என் மனைவியைக் - குசினிப்பக்கம் இழுத்துக் கொண்டு போனார்கள். இரண்டொரு நிமிஷங்களில் அவளுடைய அலறல் கேட்டது. பிறகு அவள் அலறவில்லையோ அல்லது நான் தான் இரத்தம் கொதித்து, மூளை கலங்கி வெறிபிடித்து மயங்கி விட்டேனோ !

‘மறுபடி எனக்கு நினைவு வரும்பொழுது அதே மேசையடியில் யாரோ ஒருவருடைய மடியில் படுத்திருப்பதை உணர்ந்தேன். என்னை அவ்விதம் ஆதரவாகத் தூக்கி மடிமீது வைத்திருப்பது யாரென்று அறிய ஒரு ஆவல். கண்களைத் திறந்து பார்த்தேன்.

என் மனைவி !

மானம் அழிந்த என் மனைவி ………
எத்தனையோ நூற்றாண்டுகளாக ஊறிப்போன ‘கருத்து’ என்னைச் சித்திரவதை செய்தது. மானத்தை இழந்த என் மனைவியின் மடிமீது தலைவைத்துப் படுத்திருக்கிறேனே ; ………… என் உடம்பு கூனிக் குறுகியது. எழுந்து வெளியே நிலத்தில் விழுந்து விட வேண்டுமென்று மனம் உன்னிற்று.

என் முகத்திலே ஒரு சொட்டுக் கண்ணீர். இன்னொன்று, இன்னொன்று, என் முகமும் அவள் கண்ணீரால் நனைந்து மனம் சிந்திக்கத் தொடங்கியது.

“மூன்று விஷப் பாம்புகள் அவளைக் கடித்து இன்பத்தை உறிஞ்சின. அவள் உடலும் உள்ளமும் வேதனையால் துடித்தன. எரிந்து போகிற உடலை யாரோ என்னவோ செய்தார்கள். மனம் சிறிதும் சம்பந்தப் படாதபோது அவளுடைய மானம் போய்விடுமா ? செய்யாத குற்றத்துக்கு அவள் தண்டனை அடைய வேண்டுமா ? மனம் சம்பந்தப் படாதபோது வெறும் உடலுக்கு நேர்ந்த தீங்கினால் மானம் அழிந்து விடுமென்றால் பிரசவத்துக்காக டாக்டரிடம் போகும் பெண்களெல்லாம்—

என் மனத்தில் எழுந்த அருவருப்பை வெளியே இழுத்தெடுத்துத் தூர விசினேன். பரிதாபப்படவேண்டிய, பாராட்டப்படவேண்டிய என் மனைவியின் பெருமை என் நெஞ்செல்லாம் நிறைந்தது. மெதுவாக அவள் கைகளைப் பற்றி என் மார்போடு அணைத்துக் கொண்டேன்.

‘பிறகு பொலீஸ் வந்தது. பேபி நோனாதான் அந்த உதவியைச் செய்தாளென்று பின்னால் தெரிந்து கொண்டேன். என்னவோ கஷ்டங்களெல்லாம் பட்டு, அகதி முகாமில் கிடந்துழன்று எப்படியோ இங்கே வந்து சேர்ந்தோம்…………

“இப்பொழுது சொல்லுங்கள் மாஸ்டர். பலாத்காரத்தினால் ஒரு பெண்ணின் உடல் ஊறு செய்யப்பட்டால் அவள் மானம் அழிந்து விடுமா ? அதற்காக அவள் உயிரையும் அழித்து விட வேண்டுமா ?………… அப்படி உயிரை விட்டவளைப் பத்தினித்தெய்வமென்று கும்பிட வேண்டுமா ? மற்றவளை மானமிழந்தவள் என்று தள்ள வேண்டுமா ? கணவன் இறந்தவுடன் உடன் கட்டை ஏறியவள் அப்படிச் செய்வதே கற்புடை மகளிர் கடமை என்ற சமூகக் கருத்தினால் உந்தப்பட்டு ஏற்றப்பட்டவள் பத்தினித் தெய்வமா, அல்லது பகுத்தறிவற்ற சமுதாயத்துக்குப் பலியான பேதையா ?……சொல்லுங்கள் மாஸ்டர் ! …”

கணபதி ஐயர் உணர்ச்சி மேலீட்டால் பொருமினார்.

“என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். ஐயா ! இப்படித்தான் பரம்பரை பரம்பரையாக இரத்தத்தில் ஊறிப்போன பல விஷயங்களைப் பற்றிச் சிந்திக்காமலே அபிப்பிராயம் கொண்டு விடுகிறோம். நான் கூட எவ்வளவு முட்டாள்தனமாக அபிப்பிராயம் சொல்லி விட்டேன்……… ஐயா, பகுத்தறிவு, பகுத்தறிவு என்று சொல்லிக் கொண்டு தேவையில்லாத விஷயங்களிலெல்லாம் வாய்வீச்சு விசுகிற பலரை எனக்குத் தெரியும். ஆனால் உண்மையான ஒரு பகுத்தறிவுவாதியை இன்றைக்குக் கண்டு பிடித்துவிட்டேன் ” என்று சொன்னார் மூர்த்தி மாஸ்டர். ஐயர் விட்டுச் சுவரிலே இருந்த மகாத்மா காந்தியின் படம் அதிலே ஐயரின் சாடை தெரிவது போலத் தோன்றிற்று மூர்த்தி மாஸ்டருக்கு. ❋

**தாய்மொழியைத் திறமையாகப் பயன்படுத்தத் தெரியாதவன் எவனும் வேறு மொழியைத் திறமையாகப் பயன்படுத்தக் கற்றுக் கொள்ளமுடியாது.**

**—பெர்னட் ஷா.**

# அறி(ந்த)முகம்

'வானம்பாடி'





சீ. அரியராஜா :- இவரை எழுதியா தெரியவேண்டும்? என்று பலர் கேட்கலாம். மகாத்மா காந்தி அடிகள் இருந்தார்கள். ஆனால் அவரைத் தெரியாதவர்கள் இருக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். ஆனால் அவரைப்பற்றி எழுதாமல் விட்டுவிட்டார்களா என்று சிந்திக்க வேண்டும். அதேபோலத்தான் திரு. அரியராஜாவும்.

'மாணவன்' என்ற சொல்லின் இலக்கணத்துக்கு இலக்கியமாக வாழ்ந்தவர் என்று கூறுமளவுக்கு அவரிடம் முழு ஆள்மையிருந்தது. கடவுட்சிந்தனையிற்கூட இவர், குறைந்தவரல்ல. கல்வியைக் கலையெனக்கொண்டவர் இவர். எமது 'தீப'த்தில் இவர் எழுதிய கட்டுரைகளும் விபரித்த சம்பவங்களும் இதற்குச் சான்று பகர்வன.

'அகரன்' என்ற புனைபெயரில் இவர் புனைந்த விடயங்களை மத்திய கல்லூரி மாணவர்கள் என்றும் மறப்பதற்கில்லை. ஹாஸ்ய, விஞ்ஞான, கலாச்சார விஷயங்களில் எங்களுக்கு அவ்வப்போது வேண்டிய உதவி புரிந்து, எமது பத்திரிகையின் விஞ்ஞானப்பகுதிஆசிரியர் பதவியைத் திறம்பட வகித்த இவர் தமது மேற்படிப்புக்காக இந்தியா சென்றிருக்கின்றார். 'குணக் குன்று' என்று சொல்லுமளவுக்கு இவர் அருகதை உடையவர் என்றுதான் சொல்லவேண்டும். மத்திய கல்லூரியில் எட்டு ஆண்டுகள் பயின்றிருக்கின்றார். இவர் தமது கல்வியில் சித்திபெற்றுத் திரும்பவேண்டுமென்று ஆசி கூறுகிறோம்.

சரவணமுத்து யோகநாதன்:-எமது கல்லூரியைச் சேர்ந்த எல்லோருக்கும், யாழ்ப்பாண கலாரசிகர்களுக்கும் நன்கு அறிமுகமான எமது இளம் கலைஞரான இவர், இலங்கையின் ஏனைய தமிழ்ப் பகுதிகளுக்கும் சமீபத்தில் வெற்றி விஜயம் செய்து வந்திருக்கிறார்.

திருகோணமலையில் மேமாதம் நடைபெற்ற இசைவிழாவின் போது, அதில் கலந்து கொண்டு அங்குள்ள ரசிகர்களின் பாராட்டைப் பெற்றுள்ளார். அங்குள்ள பல பிரமுகர்கள் அவருக்குத் தமது ஆசியைத் தெரிவித்திருந்தனர். சென்ற மாதம், வவுனியாவில் மாகாண அதிகாரி திரு. ஸ்பெல்ட்வின்டின் பாராட்டைப் பெற்றதோடு, ஒரு தங்கப்பதக்கத்தையும் அன்பளிப்பாகப் பெற்றார். இவ்வாறு, கீழ்மாகாணம் வரை வெற்றி விஜயம் செய்து வந்துள்ள எமது இளம் கலைஞர் யோகநாதனை, நாமும் பாராட்டி, அவர் கலைத்திறன் மேலும் மிளிர்வதற்கு எமது ஆசிகளைத் தெரிவிக்கிறோம். [சமீபத்தில், யாழ்-வினோத காணிவல் ரசிகர்களையும் களிப்படையச் செய்யும் வகையில் சில நடனங்களை அளித்தார் என அறிகிறோம்.]

ச' சிவகுமாரன் :- வடமாகாண ஆசிரியர் சங்கத்தால் நடாத்தப்பட்ட எட்டாம் வகுப்புப் பரீட்சையில் முதலாவதாகத் தேறியதற்காக இவருக்கு இம்மாதம் 4ந் திகதி ஷெ சங்க வருடாந்தக் கூட்டத்தில் பரிசுகள் வழங்கப்பட்டன.



சென்ற வருடமும் செல்வன் சிவலிங்கம் முதலாவதாகத் தேறிய போது அவரைப் பாராட்டும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்தது. இவர் பரீட்சையில் முதலாவதாகத் தேறியது மட்டுமல்ல எண்கணிதம், குடியியல் ஆகியபாடங்களில் முதல் ஸ்தானத்தைப் பெற்று எமது கல்லூரிக்குப் புகழீட்டித் தந்துள்ளார். ஆனால் இவரை வெறும் 'புத்தகப்பூச்சி' என்று சொல்லமுடியாது. மத்தியதீப நேயர்கள் இவரை ஒரு சிறந்த எழுத்தாளனாக அறிவார்கள். நாவல்கள் சிறுகதைகள் போன்றவற்றை நிறைய வாசிப்பதில் இவருக்கு அலாதியான விருப்பம். யாழ்ப்பாண நூல் நிலையத்திலுள்ள அநேக புத்தகங்களை இவருடைய வீட்டில் காணலாம். பேராசிரியர் கல்கியே இவருடைய அபிமான எழுத்தாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நாடகங்கள் பல எழுதித் தயார் செய்தும் வருகிறார். ஹாஸ்யத்துடன் பேசியும், எழுதியும் மற்றவர்களை மகிழ்வித்தும் வருபவர். விளையாட்டுப் போட்டியில் இவர் ஓட்டங்களில் பங்குபெறுவதைக் காணவும் எமக்கு ஆச்சரியம் வருவதற்கில்லை. இவர் வடமாகாணத்தில் முதலாவதாக வந்ததையிட்டு நாம் அவரைப் பாராட்டுவதோடு, எமது மத்திய தீபத்திலும் சிறுவர் பகுதி ஆசிரியராக இவர் உள்ளார் என்பதால் நாம் மட்டற்ற பெருமையடைகிறோம்.

**P. பெஞ்சமின் :-** சாந்தமும் சற்குணமும் நிதானமும் ஒருங்கே கொண்ட ஓர் சிருஷ்டியாக இவர் விளங்கினார். சிறு வயதிலிருந்தே விடுதிச்சாலையிலிருந்து கல்வி பயின்ற இவருடைய நடத்தையில் குறைகூறிய ஆசிரியர்கள் எவருமில்லை. இவர் மிகுந்த கடவுள் பக்தி உடையவர். கல்லூரியின் 125 வது வருட விழாப் பொருட்காட்சியில் இவருடைய சிருஷ்டியான இராட்சதக்குள மாதிரி (Model) வைக்கப்பட்ட எல்லாக் காட்சிப் பொருள்களிலுமே முதற் பரிசைப் பெற்றது. இக்காட்சிப்பொருளை இவர் உருவாக்கியது இறுதி வரைக்கும் எவருக்கும் தெரியாது. அவ்வளவு அமைதியாக இதை உருவாக்கினார். கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டியிலும் இவர் ஒரு திறமைமிக்க அங்கத்தவராகத் திகழ்ந்தார். இவர் எந்த விஷயத்திலீடுபட்டாலும் வெகு அமைதியாகத்தான் சகலதையும் செய்வார். கல்லூரிக் கிறீஸ்தவ சங்கத்தின் தலைவராகவும், விடுதிச்சாலையில் மாணவத் தலைவனாகவும் பதவி வகித்து தனது கடமைகளைத் திறம்பட நிர்வகித்தார். கிறீஸ்தவ கீதங்கள் பாடுவதில் முதன்மை வாய்ந்தவர். முருங்கன் வாசியான இவர் தனது மேற்படிப்புக்காக இந்தியா சென்றிருக்கிறார். இவருக்கு எமது ஆசிகள்.

**T. தர்மராஜா :-** அண்மையில் முடிவடைந்த இரண்டாம் பிரிவுக் கிரிக்கெட் பருவத்தில் எமது கல்லூரிக் கோஷ்டியின் தலைசிறந்த பந்துவீச்சுக்காரராகவும் அதிகமான ஓட்டங்களைப் பெற்றவராகவும் விளங்கி எமது கல்லூரியின் வெற்றிகட்கு அஸ்திவாரமாகவும் விளங்கினார். பந்தை வீசும் பொழுது அவரது வேகம் பல ஆட்டக்காரர்களைத் திணறடித்தும், துடுப்பெடுத்தாடும் பொழுது பிரமிக்கத் தக்க வேகத்தில் ஓட்டங்களைப் பெற்றும் கல்லூரி மாணவர்களின் இருதயங்களைக் கவர்ந்துள்ளார். சமீபத்தில் முடிவடைந்த விளையாட்டுப் போட்டியிலும் திறமையுடன் பல புள்ளிகளைத் தமது இல்லத்துக்கு ஈட்டிக் கொடுத்துள்ளதுமன்றி, சிரேஷ்ட பிரிவிலும் சாம்பியன் ஆனார். முக்கியமாகக் கோலூன்றிப் பாயும் பொழுது அநாயாசமாகப் பாய்ந்து முதல் ஸ்தானத்தைப் பெற்றார். இரண்டாவது உதைபந்தாட்டக் கோஷ்டியில் இவர் ஒரு அங்கத்தவராக விளங்கினாரென்பதும் குறிப்பிடத்தக்கது. 'டாண்டி' என்று செல்லமாக அழைக்கப்படும் இவர் முறுவலிக்கும் இன்முகத்தால் மாணவ மத்தியில் பேரன்பைப் பெற்றுள்ளார். சிரேஷ்ட (கலை) வகுப்பில் பயின்று வருகிறார்.


உங்கள் திருப்தியே எங்கள் நோக்கம்!

உயர்ந்த ரகம்! நிதான விலை!

- கண்கவர் பட்டு, பருத்திப் புடவைகள்
- நவநாகரிக அலங்கார ஆடைகள்
- சேட், பெனியன் வகைகள்
- தையற்கலைக்கான சில்க் நூல், கழி நூல் தையல் நூல்

எல்லாவற்றுக்கும் நம்பிக்கையான இடம்

அம்பிகா பதி ஸ்ரோர்ஸ்

66, பெரியகடை, : யாழ்ப்பாணம்.

நாவல்கள் — சிறுகதைகள் — கட்டுரைகள் ஆகிய எல்லாத்துறைகளிலும் தம் எழுத்து வன்மையைப் பிரதிபலிக்கச் செய்து வரும் இவரின் நடையில் ஒரு வேகம் இருப்பதை இக்கட்டுரையை வாசித்தே அறிந்து கொள்ளலாம்.

# "சுடுகுது-மடியைப்பிடி"

தேவன் — யாழ்ப்பாணம்.

**தெ**ருவிலே கார்கள் 'விர்'என்று பிய்த்துக் கொண்டு போவதைப் பார்க்கும் நெஞ்சு 'பகீர்' என்கிறது. "என்னஅவசரம்? எங்கையோ வச்சதைஎடுக்கப் போகிறானே?" என்று எத்தனையோ தடவை சொல்லியிருக்கிறோம். ஆனால் நாங்கள் காரில் ஏறி உட்கார்ந்து விட்டால் எங்கள் காரும் காற்றில் பறக்க ஆரம்பித்து விடுகிறது ஆம்! மனிதன் அவசரகாரன் தான். அதனால் தான் எதற்கும் ஆலாய்ப் பறக்கிறான். 'குடு குடு' வென்ற ஓட்டம் எதற்கு? இன்னதுக்கு என்ற நியதி கிடையாது. ஒரே பரபரப்பு — எதுக்கும் ஒரே குதிப்பு மயம். முதிர்ச்சியடைந்த நாகரிக யந்திரயுகம் தேடித்தந்த வியாதி இந்தப் படபடப்பு.

'பொறுத்தார் பூமியாள்வார்' என்ற பழமொழி உண்மையிலேயே பழங்கதையாய் விட்டது. அதை யார் மதிக்கிறார்கள்; 'பதறாத காரியம் சிதறாது' என்று சொன்னால், அது யாருடைய காதிலாவது ஏறினால் தானே!

பிள்ளை வளர்ப்பிலும் இந்த 'றேஸ்' மனப்பான்மைதான். பள்ளிக்கூடத்தில் ஒரு 'டபிள்' வகுப்பேற்றத்துக்கு பல்லைக் காட்டுகிற பெற்றோரை நீங்கள் கண்டதில்லையா? அப்படிப் பையனைத்தூக்கி விட்டால் அவன் படித்துக் 'கிழித்து' விடுவான் என்று நம்புகிறார்கள். குறுக்கு வழியில் வேகமாய்ச் செல்ல இடமிருக்காதா என்று ஏங்குகிறார்கள். ஆனால் அது விரும்பத்தக்கதா?

புல்லும் வளருகிறது. மரமும் வளர்கிறது. ஆனால் புல் முதுமையடைய சில தினங்களே போதும். மரத்துக்கோ இளமை பெயரவே பல்லாண்டுகளாகும். புல்லைப்படைக்க குறுகிய காலம். மரத்தைச் சிருஷ்டிக்க நீண்ட காலம். இறைவனுக்கே அப்படி. ஆதலால் பையன் பூண்டாக வளர்வது சம்மதமானால் அவதிப்படலாம். ஆனால் மரம்போல உரம்பெற வேண்டுமென்றால் காத்திருக்க வேண்டியதுதான்.

இந்த மனித அவசரத்துக்கு மேலதிகாரி இருக்கிறானே, அவனுக்கு யாரும் சாவி கொடுக்க முடியாது. அவனுக்கு துறட்டி போட்டு பிரயோசனமில்லை. தன்னிஷ்டம் போல் சாவதானமாகவே அவன் எதையும் செய்வான். அவனுடைய நியதியின் கீழ் உலகம் இயங்குகிறது. அவனுடைய திட்டத்தில் வேகத்துக்கு இடமில்லை. அதற்குள் அடங்கிய மனிதன் வீணாகத் திணறி அவலப் படுகிறான்.

'வேதனை தரும் இரவு நீங்காதா'? என்று புலம்பும் காதலிக்காக கதிரவன் முந்தி உதிப்பதில்லை. பொழுதும் வேளையும் பொருந்தி வராமல், நேரமும் காலமும் கைகூடி வராமல் நடப்பது நடவாது. மலைகளைப் பாருங்கள். அசையாத அமைதியின் சின்னங்கள். சலனமற்ற தன்மையின் வடிவங்கள். ஊழிக்காற்றிலும் உறுதியாக நிற்கும் அவை, நிறை குடம்போல் தளம்பமாட்டா.

நிதானத்துக்கு வக்காலத்து வாங்கி நீட்டி முழக்கினால் "அண்ணன் தம்பி வருமளவும் அமவாசை காத்திருக்குமா?" என்று கேட்கப் போகிறார்கள். பொறுமை என்றால் தூங்கு மூஞ்சித்தனம் என்று அர்த்தமில்லை. 'பொங்காதே, பொறு' என்றால் கைகட்டி 'நடப்பது நடக்கட்டும்' என்று பேசாமலிரு என்பதல்ல.

'எல்லாம் அவன் செயல்' அவனுடைய பிரியம்போல் கருமம் நிறைவேறும். ஆகு நாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா. ஆனால் நடப்பது செப்பமுற நாமே செயலாற்ற வேண்டும். அழகும் அருமையும் நம் முயற்சியின் விளைவு. கடவுளும் மனிதனும் கூடிச் செய்பவை தான் எழில் மிகும். 'ரயிலுக்குப் போகிற அவசரத்தில்' எதுவும் சோபிக்காது.

வானத்தில் பறக்க மனிதன் கனவு கண்டது இன்று நேற்றல்ல. ஆனால் நிறைவேறும் என்ற நம்பிக்கை முளைக்கவே இத்தனை ஆண்டுகளாகி விட்டன. இதைப்போலத்தான் மனிதக் கனவுகள் எல்லாம்: முண்டியடிப்பதினால் லாபமில்லை. ரோமாபுரி ஒரு நாளில் கட்டி முடிக்கப் படவில்லையே!

சுற்றி வளைத்துக் கொண்டு, பள்ளிக் கூடத்துக்குள் மீண்டும் வருவோம். படிப்பு—அவசர அவசரமாக, தேவையானது, தேவையில்லாதது என்று பாராமல் எல்லாவற்றையும் படித்துத் தீர்ப்பதுதான் படிப்பா? அறிவென்றால் அகப்பட்டது எல்லாவற்றையும் மூளைக்குள் திணிப்பதல்ல. எங்கள் மூளையும் 'புட்பால்' அல்ல. காற்றடிப்பது போல் அறிவை நிறைத்து விட. எல்லாம் குப்பையும் கூழமும் மாயமாய் மறந்து போகும் சரக்காய் மறைந்து விடும். எதிலும் நிதானம் வேண்டும். உகந்தது எது என்ற தேர்வு வேண்டும்.

ஆதலால் தான் — படிப்பில் மட்டுமல்ல எதிலும் 'சுடுகுது — மடியைப் பிடி' என்று கொண்டு நிற்காதே. காதல் பண்ண கரணம் போடும் வாலிபனே! காத்திரு. காலம் மாறும். சாவு எங்கே என்று துடிக்கும் பாட்டி! பொறுத்திடு. அழைப்பு வரும். வளரத்துள்ளும் பச்சிளம் குழந்தையே! பதறாதே. மூப்பு வரும், மெதுவாக.

❋

# எழுத்தாளனும் இன்றைய தமிழ்ச் சமுதாயமும்

— வை. இரங்கன் —

மனித சமுதாயத்தைத் திருத்தும் பணியில் ஈடுபட்டிருக்கும் பல ரக மனிதர்களை நாம் நமது வாழ்க்கைப் பாதையில் தினந்தோறும் சந்திக்கிறோம். சமுதாயத்தின் புரையோடிப்போன கறைகளை, மக்களின் அன்றாட வாழ்க்கையிலே வேரூன்றி விட்ட குறைகளைக் களைந் தெறிய அரசியல்வாதி அரசியலைச் சாதனமாகக் கொண்டும், மதவாதி மதத்தைத் துணையாகக் கொண்டும், பகுத்தறிவுவாதி சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டும் முயற்சி செய்வதை நாம் கண் கூடாகக் காண்கின்றோம். மக்களுக்குத் தொண்டு செய்யும் இத்தகையோரில் எழுத்தாளனும் ஒருவன். மக்கள் வாழ்க்கையின் குறைகளையும், நிறைகளையும் தன் எழுதுகோல் மூலம் எடுத்துக் கூறிச் சமுதாயத்தைத் திருத்துகிறான். தம் உள்ளத்து எழும் உணர்ச்சிகளைப் பிறர் படித்து, ரசித்து இன்பமுறும் வண்ணம் எழுத்திலே வடித்துக் கொடுக்கிறான் எழுத்தாளன். ஒரு சமுதாயத்தையே ஆக்கும் வன்மை எழுத்தாளனுக்குண்டு. எந்நாட்டிலும் உணர்ச்சியின்றிக் கிடக்கும் மக்களுக்கு உணர்ச்சியை ஊட்டித் தட்டி எழுப்புபவன் எழுத்தாளன். எந் நாட்டு வரலாற்றை எடுத்து நோக்கினும் அந் நாட்டின் வளர்ச்சியில் எழுத்தாளன் ஒரு முக்கிய பங்கு கொண்டிருப்பதை நாம் காணலாம். தனி மனித சுதந்திரத்தின் ஒரு மைல் கல்லென விளங்கும் பிரான்சிய அரசியற்புரட்சிக்குத் தன் 'சமுதாய ஒப்பந்தம்' என்னும் நூலால் வித்திட்டான் பேரறிஞன் 'ரூசோ.' இவ்வாறு எழுதுகோலின் சக்தியினால் உலகையே ஆண்டிடலாம் என்பதை வரலாறு கற்றுத்தரும் பாடங்களிலிருந்து அறிகிறோம்.

நம் தமிழ்ச் சமுதாயம் மேல் நாட்டாருடன் ஒப்பு நோக்குமிடத்து எழுத்துக் கலையில் தத்தித் தடுமாறித் தவழும் குழந்தையென்றுதான் கூறவேண்டும். எழுத்துக் கலை தமிழகத்திற்குப் புதியதுதான் என்றாலும் சிறந்த எழுத்தாளர் பலர் நம்மிடையே இருக்கிறார்கள். எனினும் சமீபத்தில் மிகச் சிறந்த சிருஷ்டி என்று ஒன்று கூட வெளியாக வில்லை. தமிழ் இனத்திற்கும், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தொண்டு செய்ய வேண்டுமென்ற லட்சியத்துடன் எழுதுபவர்கள் தமிழ் நாட்டில் மிகக் குறைவு. இந்நிலை ஏற்பட நம் சமுதாயமே காரணமென்று கூறவேண்டும். நம் சமுதாயத்தில் எழுத்துக் கலைஞர்களை ஊக்குவிக்க இதுவரை யாரும் முன் வராமையாலேயே இந் நிலை ஏற்பட்டது.

எழுத்தாளர் என்ற வர்க்கம் தோன்று முன்பே பாரதியார் தோன்றித் தமிழ் நாட்டிற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். தன் எழுதுகோலின் துணைகொண்டு ஆங்கில மோகமெனும் அடிமை இருளிலே மூழ்கிக் கிடந்த தமிழகத்தைத் தட்டி யெழுப்பினார் பாரதியார். இவரது எழுத்துக்கள் மக்கள் மனதிலே சுதந்திர உணர்ச்சியைக் கொழுந்து விட்டெரியச் செய்தன. தமிழ் நாட்டில் தன் எழுத்துக்களால் முதன் முதலில் ஒரு புரட்சியை உண்டு பண்ணியவர் பாரதியார். இவருக்குப் பின்னர் எழுத்தின் மூலம் தமிழக மக்களின் சுதந்திர ஆர்வத்தையும் தமிழுணர்ச்சியையும் தூண்டினார் தமிழ்க்கடல் திரு வி. கலியாண சுந்தரனார். மக்களின் அறிவுணர்ச்சியையும் கலை உணர்ச்சியையும் பெருகச் செய்தவர் இவர். இதுவரையில் செல்வச் சீமான்களின் வாழ்வினில் நிகழும் காதல் நிகழ்ச்சிகளையும் கேளிக்கைகளையும் பற்றி எழுதி வந்த முறையை மாற்றி வறிய மக்களின் அன்றாட வாழ்க்கையையும் அவர்களின் மனக்கிளர்ச்சிகளையும் தன் எழுதுகோலால் பிழிந்தெடுத்து எழுதி எழுத்துலகிலே ஒரு புதுமையை உண்டாக்கியவர் 'புதுமைப்பித்தன்'. கடும் பதங்களைத் தேடிச் செல்லாது எளிய இனிய சொற்களைக் கொண்டு கனிந்த தமிழ் நடையிலே பல பக்கங்கள் கொண்ட நவீனங்களைச் சிருட்டி செய்தவர் கதை மன்னன் கல்கி. மேற்கூறிய இவ்வெழுத்தாளர்களே தமிழ் நாட்டில் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை எழுத்துக் கலைக்கு உயிரூட்டி வந்துள்ளனர். இவர்கள் செய்த பணியே எழுத்துக்கலை வளர உதவி புரிந்தது. இவர்களின் அடிச்சுவடே தமிழ்ச் சமுதாய எழுத்தாளருக்கு வழிகாட்டியாக உள்ளது. தமிழகம் தமிழ் வளர்ச்சியில் முன்னிலைக்கு வர எழுத்துக் கலைஞர்களின் தொண்டே காரணமெனலாம்.

இன்றைய எழுத்தாளர் நம் சமுதாயத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகள் எவ்வளவோ உள. தனக்குப் புகழும் செல்வமும் வரவேண்டுமென்று எழுதாது தமிழிலக்கிய உலகில் எழுத்துக்கலை உன்னத நிலையை அடைய எழுத வேண்டும். சமூகத்தின் குறை நிறைகளை அஞ்சாது எடுத்துக் கூறல் வேண்டும். தமிழ்நாட்டில் உலவும் கோஷ்டிகளிலே சேராது நடு நிலைமையில் நின்று செயல்பட வேண்டும். ஆங்கிலத்திலுள்ள சிறந்த இலக்கியங்களைக் கற்றுத் தமிழிலே அவை போன்ற படைப்புகளைப் படைக்கவேண்டும். நம் எழுத்தாளர்களில் சிலர் சினிமா உலகில் புகுந்து தங்களின் எழுத்துத் திறமையை இழந்துவிடுகிறார்கள். வறுமையின் கொடுமையே அவர்களை இந்நிலைக்கு கொண்டுவருகிறது. தற்போதைய எழுத்தாளர்களில் மு. வரதராசனார், அகிலன் போன்றவர்கள் மக்களுக்குத் தொண்டு செய்யும் வகையில் எழுதி வருகிறார்கள். இன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் கீழான இழிநிலை மாறவேண்டுமென்று அல்லும் பகலும் சிந்தித்து எழுத்து மூலம் தூண்டி வருகிறார் மு. வரதராசனார். நமது சமுதாய மக்களின் வாழ்க்கையை அலசிப் பார்த்து அதன் சிக்கல்களையும் ஏற்படும் துன்பங்களையும் எடுத்துக் காட்டி வாழ வழி வகுப்பவர்களில் தலைசிறந்தவர் இவர். தற்போதைய தமிழ்ச் சமுதாயத்திற்குத் தொண்டு செய்வன இவரது நூல்கள். அகிலன் சிறந்த சிறு கதைகள் மூலமாகவும் பெருநாவல்கள் மூலமாகவும் தமிழ் மக்களின் நெஞ்சத்தில் அழியா இடம் பெற்றிருக்கிறார். தமிழகத்தில் எழுதுவதிலே ஒரு புதுமையை உண்டாக்கி எல்லோர் மனத்தையும் கவர்ந்தவர்கள் அறிஞர் அண்ணாத்துரையும் அவரது தோழர்களுமாவர். இவர்கள் தங்கள் கருத்துக்களை அழகிய தமிழிலே மக்கள் படித்தமாத்திரத்தே உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கச் செய்யும் படியான நடையிலே எடுத்துக் கூறுகிறார்கள். இவர்களது தமிழ்நடை தமிழ்நாட்டிலே ஒரு பெரும் புரட்சியை உண்டுபண்ணிவருகிறது. இவர்களின் கொள்கை பலருக்கு கசப்பை ஏற்படுத்திய போதிலும் 'தி. மு. க' வினர் தமிழ் எழுத்திலே ஏற்படுத்திய புரட்சியை ஏற்றுக் கொள்ளத்தான் செய்வர். தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்தட்டு வரும் இந்த எழுத்து மறுமலர்ச்சி தமிழிலக்கிய வளர்ச்சிக்கு ஏற்ற துணை புரியும்.

எழுத்தாளனை அவன் வாழும் போது கவனியாது விட்டு அவனிறந்த பின்னர் மணி மண்டபம் கட்டி அவன் புகழைப் பாடும் நிலையிலிருந்த தமிழ்ச் சமுதாயம் இப்பொழுதுதான் சிறிது விழிப்படையத் தொடங்கியுள்ளது. இது வரையில் எந்த எழுத்தாளரும் எழுத்தையே தன் தொழிலாக நம்பி வாழ்ந்ததில்லை. வாழமுடியாத நிலை தமிழ் நாட்டிலிருந்தது. எழுத்தை நம்பி வாழ்பவன் வாழுவதே பெரும் பிரச்சனையாக இருந்தது. மேல் நாட்டார் எழுத்தாளர்களைப் போற்றி அவர்களுக்கு உற்சாகமூட்டியதைப் போல் தமிழ் நாட்டில் யாரும் உற்சாகமூட்டவில்லை. இதனால் ஏழை எழுத்தாளர்கள் பணம் பெறவேண்டி பத்திரிகை ஆசிரியர் விரும்பியபடி எழுதும் முறை நிலவியது. மேல் நாட்டுச் சமூகத்தில் எழுத்தாளருக்கு இருக்கும் வசதிகள் ஏராளம். இதனால் அவர்கள் வாழ்க்கை பற்றிய எண்ணங்களை மறந்து கலை உலகிலே சஞ்சரித்து அற்புதமான படைப்புக்களைப் படைக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் 'நோபல்' பரிசையும் பெறுகிறார்கள். எம் சமுதாயத்திலும் சிறந்தவர்களிருந்தும் சிறந்த பரிசுகளைப் பெறாததன் காரணம் தமிழகம் அவர்களை ஆதரிக்காமையே. ஆதலின் தங்கள் மனம் விரும்பியவாறு கலைச் செல்வங்களைப் படைக்க எழுத்தாளருக்கு வசதி செய்து தர வேண்டியது தமிழ்ச் சமுதாயத்தின் தலையாய கடமைகளில் ஒன்று. இந்நிலை சிறிது சிறிதாக இப்பொழுது தமிழகத்தில் உருவாகி வருகிறது.

தமிழ் எழுத்தாளரின் வளர்ச்சிக்குத் தடை போடக் கூடிய பல குறைகள் நம்மிடையே மலிந்து கிடக்கின்றன. எழுத்தாளர்களைப் பாகுபாடின்றித் தமிழகம் ஆதரிப்பதில்லை. பல பல கோஷ்டிகளாகப் பிரிந்து தங்கள் கோஷ்டியைச் சேர்ந்த கலைஞருக்கே ஆதரவளிக்கிறார்கள். வேறு கோஷ்டியைச் சேர்ந்தவராக இருப்பின் அவர் எத்தகைய திறமையுடையவர்களாக இருந்தாலும் அவரை மற்ற கோஷ்டியினர் ஆதரிப்பதில்லை. எக் கோஷ்டியிலும் சேராது நடுநிலைமை வகித்தாலும் அவரைத் தமிழகம் ஆதரிப்பதில்லை. கதாப்பிரசங்கங்களையும், சொற்பொழிவுகளையும் மணிக் கணக்காகப் பொறுமையுடனிருந்து கேட்கும் நம் தமிழ் மக்கள் நல்ல அறிவு நூலையோ, ஆராய்ச்சி நூலையோ, சிறந்த இலக்கியப் படைப்புக்களையோ படிப்பதற்கு ஒரு மணி நேரமும் செலவிடத் தயங்குகிறார்கள். ஆபாசம் நிறைந்த சினிமா விளம்பரப் படங்களைப் பார்த்து ரசிப்பவர்கள், கலை நுணுக்கம் நிறைந்த ஓவியங்களைப் பார்த்து ரசிக்காமையைப் போல் சாதாரண கருத் தற்ற, கீழ்த்தர இலக்கியங்களை வாசிக்கும் நேரத்தை நல்ல சிருஷ்டிகளுக்குச் செலவிடாத மன

நிலை நம்மிடையேயுண்டு. சிறந்த ரசிகத் தன்மை யில்லாமையால்தான் 'சக்கரவர்த்தி திருமகன்' போன்ற சாதாரண நூல்களுக்கு மிகச் சிறந்த இலக்கிய சிருஷ்டியென்று பரிசு வழங்கும் நிலை நம்மிடையே ஏற்பட்டது. ராஜாஜி தலைசிறந்த ராசதந்திரி என்பதை நாம் மனமார ஒப்புக் கொள்கிறோம். ஆனால் அதற்காக அவரை விடச் சிறந்த எழுத்தாளர் தமிழ் நாட்டில் இல்லையென்று முடிவு கட்டுதல் விவேகமான செயலல்ல. இன்னுமொரு பெருங்குறை தமிழ் நாட்டில் வளர்ந்து வருகிறது. அறிவு, ஆராய்ச்சி நூல்களின் வாசகர்களை விடப் பொழுது போக்கு நூல்கள் படிக்கும் கூட்டமும் ஒன்றுண்டு. பொழுது தானாகவே போகிறது. இதன் வாசகர்கள் இப் 'பொழுதை'க் கதைகள் படிப்பதன்மூலம் தாங்கள் தான் போக்குவதாக எண்ணிக் கொள்ளுகிறார்கள். இப்பொழுதைப் போக்கும் துப்பறியும் நூல்களின் ஆசிரியர்கள் பணமொன்றையே குறிக்கோளாகக் கொண்டு தாங்கள் நினைத்ததையெல்லாம் எழுதி துப்பறியும் நூல்கள் என்று வெளியிடுகிறார்கள். நினைத்த மாத்திரத்தே நம்பஇயலாத மாயாஜாலமந்திரஜாலக் கதைகளைச் சிருஷ்டி செய்யும் வல்லமை பெற்றவர்கள் இவர்கள். இக்கதைகள் தமிழுக்கும், தமிழிலக்கிய வளர்ச்சிக்கும் என்ன வகையில் சேவை புரிகின்றன என்பது பதில் கிடைக்காத ஒரு கேள்வியாகும். இந்நூல்களும் இவற்றின் எழுத்தாளர்களும், புகைவண்டிப் பிரயாணத்தில் நாம் சந்திக்கும் மனிதர்கள் நம் மனக்கண்ணிலிருந்து இலகுவில் மறைந்து விடுவது போல படித்து முடிந்தவுடன் மறைந்து விடுகின்றனர். தமிழ்நாட்டு வாசகர்கள் பொழுது போக்குவதற்காகப் படிப்பதை விட்டு அறிவு வளர்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் ஏற்ற நூல்களைப் படித்தால் சிறந்த எழுத்தாளர்களின் உற்சாகத்தைத் தூண்டிவிட்டவர்களாவர். வாசகர்கள் தாங்கள் வாங்கும் நூல்களைப்பலருக்கு இரவல் கொடுப்பதனால் எழுத்தாளர்களின் வருமானத்தைக் குறைப்பவர்களாகின்றார்கள். இப்பழக்கம் ஒழிந்தால் தான் எழுத்தாளர்களுக்கு வருமானம் பெருக அவர்களுக்கு உற்சாகம் உண்டாகிச் சிறந்த கருத்துக் கருவூலங்களைப் படைப்பர். நம் நாட்டில் விமரிசனம் நன்முறையில் வளர்ச்சியடையாமையும் எழுத்தாளர் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. யாருக்கும் அஞ்சாது சிறந்த விமரிசனம் செய்யும் விமர்சகர்கள் போதிய அளவுக்கு தமிழ் நாட்டிலில்லாதது பெருங்குறையாக உள்ளது.

இக்குறைகளை யெல்லாம் அழித்தொழிப்பதை போல் நல்ல அறிகுறிகள் தமிழ் சமுதாயத்தில் இப்பொழுது தோன்றியுள்ளன. எழுத்தாளர்களை ஆதரித்து அவர்களுக்கு வசதிகள் செய்துகொடுத்து ஊக்கமளிக்கும் முயற்சியில் பல பத்திரிகைகள் முன்னோடிகளாக விளங்குகின்றன. சிறந்த சிறுகதை, பெருநாவல் எழுதுவோர்க்குப் பரிசாகப் பெரும் பணம் கொடுத்து அவர்களைப் பத்திரிகைகள் ஊக்கப்படுத்துகின்றன. இளம் எழுத்தாளர்களை எழுதத் தூண்டிப் பத்திரிகைகள் பரிசளிக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் சிறந்த நூல்களை எழுதுவோர்க்குப் பரிசளிக்கும் வழக்கமும் தமிழ் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ளது. ஏழ்மையிலேயுள்ள எழுத்தாளர்களுக்கு நிதிதிரட்டி வாழவசதி செய்து கொடுப்பதும் தொடங்கியுள்ளது. இவ்வறிகுறிகள் தமிழ்ச்சமுதாயத்தில் இன்றைய எழுத்தாளர்க்கு நல்ல காலம் பிறந்து விட்டதென்பதையே காட்டுகின்றன. வளர்ந்து வரும் எழுத்தாளர் தொகையும், மக்களின் இலக்கிய அறிவும், ஆராய்ச்சி வன்மையும் தமிழ்ச்சமுதாயத்திற்கு ஏற்றம் கொடுக்கத்தான் போகின்றன.


உயர்ந்த ரகம்! நிதான விலை!!

**ஆ. அப்பையா அன் கோ.**

பாட்னர்ஸ்: ஆ. அப்பையா, செ. காசிப்பிள்ளை

82, கே கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 506 தந்தி: 'வணக்கம்'

சகல விதமான

- பனாறிஸ், மணிப்புரி கூறைத் தினிசுகள்;
- சேலம், மைசூர், பெங்களூர், காஞ்சீபுரம் பட்டு வகைகள்;
- கோவில் பட்டுக்குடைகள்;
- கம்பளிச் சாமான்கள்;
- சுத்தக் கதர்த்துணிகள்;
- D.M.M. பாரிஜாத ஊதுபத்தி வகைகள்

எல்லாவற்றையும்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.



# செல்லம்ஸ்

**கவர்ச்சியான படங்கள் பிடிக்க ஏற்ற ஸ்டூடியோ**

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.



Dr. U.V.SWAMINATHAIYER LIBRARY Besant Nagar Chennai-90

அதிகாலை வனப்பும்....



....அந்திப்பொழுது எழிலும்.



படங்கள்: A. பாலசிங்கம்

# எனது அபிமானத் தமிழ்ச் சஞ்சிகை

— கு. இராதாரமணன் —

"நூறு பிராயத்துக்கு மேல் ஒருவர் வாழ்வது அதிசயமல்ல; இப் பாரதபூமியிலே நல்ல முறையில் ஓர் பத்திரிகை நடப்பது தான் அதிசயம்'' என்று ஒரு சமயம் பொதிகைமலைத் தென்றலைப் பேச்சாகக் கொண்ட பொன்னுன கலைஞர் கருணாநிதி கூறினுர். கவிஞர் கருணாநிதியே இரு சஞ்சிகைகட்கு ஆசிரியரானபடியால் இவ் வாக்கு எவ்வளவு தூரம் உண்மை என்பதை இங்கு விளக்கிக் கூற வேண்டிய அவசியம் ஏதுமில்லை.

நிலைமை மேற்படி இருந்தும் எண்ணற்ற ஏடுகள் இன்று தமிழில் வெளிவருகின்றன. இவ் ஏடுகள் எல்லாம் பலவித கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுஎழுந்தன. ஆனுலும் அவற்றின் கொள்கைகளை நோக்காமல் அவற்றினுல் என்ன நன்மைகள் உண்டாகின்றன என்பதை அறிய வேண்டும். அதனுல்தான் குறள் ஈந்த வள்ளுவனும் தன் சிறந்த கருத்து நிறைந்த இரு வரிப் பாவில்.

'எப்பொருள் யார் யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப தறிவு'

என்று கூறியுள்ளார். எனவே நாமும் பத்திரிகையின் கொள்கையை நோக்குவதை விட்டு பத்திரிகையின் உண்மைத் தன்மையை அறிய வேண்டும்.

என் அபிமானத் தமிழ்ச் சஞ்சிகையான ''தென்றல்'' ஓர் இயக்கத்தின் ஏடானுலும் அம் பத்திரிகையினுல் அநேக நன்மை உண்டு என்பதனுல் அதை என் அபிமானத் தமிழ்ச் சஞ்சிகையாகப் போற்றுகின்றேன்.

தென்றல் —

வாரப் பத்திரிகையான இத் தென்றலின் ஆசிரியர் கவிஞர் கண்ணதாசன். கண்ணதாசனை அறிமுகப்படுத்துவது குருடன் ஒருவன் பார்வை உள்ளவனுக்குப் பாதை காட்டுவது போலாகும். என்ருலும் இதோ அவரைப்பற்றி நான் அறிந்தவற்றுள் சிலவற்றைத் தருகிறேன்.

கவிஞர் கண்ணதாசன் முப்பது வயது நிரம்பிய ஓர் இளைஞன் என்ருல் வியப்பாகத்தான் இருக்கும். நான் அறிந்தமட்டில் இத்தனை வயதுள்ள ஓர் இளைஞர் சிறப்பாக நடக்கும் ஒரு ஏட்டுக்கு, அதுவும் வார வெளியீட்டுக்கு ஆசிரியராக, இருந்ததில்லை. இளமையில் பட்டினியினுல் வாடிய இவர் தற்பொழுது பசியினுல் வாடும் எத்தனையோ மாந்தர்கட்கு பால் வார்க்கின்ருர்! பசி தீர்க்கிருர்!! துன்பம் துடைக்கிருர்!!!

அறிஞரும், பன்மொழிப் புலவரும் ஆன கா. அப்பாத்துரையிடம் தான் இலக்கியங்களைக் கற்றுத்தேறினுர். வறுமையின் கொடுமையால் பாடசாலைக் கல்வி கற்காத கண்ணதாசன் தன் சொந்த முயற்சியில் இன்று ஓர் சிறந்த, புகழ்பெற்ற கவிஞனுக திகழ்கின்ருர். கவிஞர் கண்ணதாசன் தென்றல் தவிர, 'முல்லை' என்ற பத்திரிகைக்கும் ஆசிரியராய் உள்ளது குறிப்பிடத்தக்கது.

தென்றலின் ஆசிரியர் கவிஞர் கண்ணதாசனைப் பற்றிய சில குறிப்புகளை மேலே பார்த்தோம். இனித் தென்றல் பத்திரிகையைப் பற்றி ஆராய்வோம்.

தமிழரின் வீரத்தை வடித்தெடுத்த கவிதைகளும், தமிழ் நாட்டின் வீரத்தைக் குறிக்கும் பாக்களையும், தமிழரின் புரட்சிக் கீதங்களையும் தாங்கி வருகின்றது இத் தென்றல் சஞ்சிகை.

அறிஞர் அண்ணு, டாக்டர் வரதராஜன், நாவலர் நெடுஞ் செழியன், கலைஞர் கருணாநிதி முதலியோரின் போற்றத்தக்க படைப்புகளை எமக்கு அளிக்கும் தென்றல் பத்திரிகையை எவ்வாறு புகழ்ந்தாலும் மிகையாகாது. இவ் வார ஏட்டில் வரும் 'ஊமையன் கோட்டை' என்ற கண்ணதாசரின் தொடர் நவீனம் படிப்போரை பரவசமூட்டுவதாக அமைந்துள்ளது.

இனிய கவிதைகளைத் தந்து எம்மை இன்பத்துள் ஆழ்த்தும் இத்தென்றல் சஞ்சிகையில் வந்த ஓர் பாவை இதோ தருகிறேன்.

'காநகருள் மறைகின்ற கதிரோன் அங்கே
காலமெலாம் இருப்பதில்லை அதுபோல்—இந்தப்
பாநகருள் புகுந்திட்ட வேற்றுமைகள்
பல காலம் நிலைக்காமல் ஒழிந்து போகும்'

தொடர்ச்சி 43 -ம் பக்கம்

சிறுவர் கதைப் போட்டி: முதற் பரிசுபெற்ற கதை

# பணப் போர்வை

சி. சிவநாதன்

சங்கர் அன்று சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு சிகரட்புகை விட்டுக்கொண்டிருந்தார். "சுந்தரி நடராஜுக்கு வாழ்க்கைப்படுவதா?" நடராஜோ பிறர் பணத்தை போர்வையாகப் போர்த்திருக்கிறான். இப்பணத்தைக் கண்டு அப்பா ஏமாந்து விட்டார். நடராஜ் திருடன் என்பது சுந்தரிக்குத் தெரியும். தெரிந்தும் அவள் சம்மதித்திருப்பாளா? இல்லை ஒருகாலமும் சம்மதித்திருக்க மாட்டாள். அப்படியானால் அப்பா சுந்தரியின் இஷ்டமில்லாமலே, இத் திருமணத்திற்குச் சம்மதித்திருகிறார். இன்று வியாழக்கிழமை வருகிற புதன்கிழமை சுந்தரிக்கும் நடராஜிற்கும் திருமணம். ஒருவேளை சுந்தரி பணத்தைக் கண்டு இத்திருமணத்திற்குச் சம்மதித்திருக்கலாம் ஆம் எப்படியும் சுந்தரியை விசாரிப்பதே மேல்" இப்படிச் சங்கரின் சிந்தனைச் சுழல் சிகரட்டோடு கலந்து வெளி வந்து கொண்டிருந்தது.

சொற்ப நேரத்தில் சங்கர் சுந்தரியின் அறைக்கு வந்தார். அங்கு தலைவிரி கோலத்துடன் சுந்தரியைக் கண்டவுடன் திகைத்து விட்டார். தமையனைக் கண்ட சுந்தரி "அண்ணா" என அவர் காலில் விழுந்தாள். உடனே சங்கர் "புரிந்தது சுந்தரி புரிந்தது பணத்தைக் கண்ட பிணமும் வாய் திறக்கும் எனக் கூறினார்கள் நம்முதியோர். அக்கூற்று நம் விஷயத்திலும் உண்மையாகி விட்டது. சுந்தரி! அழாதே வருகிற புதன்கிழமைக்கு முதல் நடராஜ் திருடன் என்பதை அப்பாவிடம் மட்டுமல்ல கோட்டிலும் தெரிவிக்காவிடில் நீ என்னை இப்பிறப்பில் காண மாட்டாய்" எனத் தன்னையும் அறியாமல் கூறிவிட்டு உடனே அவ்வறையை விட்டுச் சென்று விட்டார்.

மறுநாள் சங்கரையும் இராமனையும் வீட்டிலே காணவில்லை. ராமனின் தந்தை சங்கரின் தந்தையிடம் விசாரித்தபோது சங்கரின் தந்தை "நீங்கள் பயப்பட வேண்டாம். என் மகன் பலதடவை இப்படித் தொலைந்திருக்கிறான். இம்முறை உங்கள் மகனையும் சேர்த்துக் கொண்டுகிளம்பியிருக்கிறான். எப்படியும் இன்னும் இரண்டுமூன்று நாட்களில் திரும்பி வருவான்" எனக் கூறினார். அதைக் கேட்ட ராமனின் தந்தை கவலையின்றி வீடு சென்றார்.

இந்நேரத்தில் நடராஜனின் பச்சைமலை மாளிகையில் இருவர் வேலையாட்களாக அமர்த்தப்பட்டார்கள். அவர்களை நடராஜ் விசாரித்தபோது அவர்களின் பெயர் சுப்பனென்றும் முனியாண்டி யென்றும் அறிந்தான். அவர்களின் போக்கை மறைமுகமாக நடராஜ் கண்காணித்து வந்தான். இருநாட்களுக்குப் பிறகு அவர்கள் தன் கொள்கையை ஆதரித்து நடப்பார்கள் என அறிந்ததும் அவர்களை அழைத்து தன் கொள்கையைக் கூறினான். அவர்களும் அதை ஆதரித்தார்கள். உடனே அவன் தான் பச்சைமலை மாளிகையை விட வேறொரு மாளிகை வைத்திருப்பதாயும் பச்சைமலை மாளிகைக்கும் அம்மாளிகைக்கும் சுரங்கத்தொடர்பு வைத்திருப்பதாயும் கூறினான். சொற்பநேரத்தில் ஒருவனை அழைத்து இவனே எனது அந்தரங்கக் காரியதரிசி. இம்மாளிகை விஷயம் இவனுக்கும் எனக்கும் உங்களுக்குமே தெரியும்" எனக் கூறினான். பின் அம்மனிதனும் நடராஜும் காதோடு காதாய் ஏதோ கூறினார்கள். பின் சுப்பனையும் முனியாண்டியையும் அவனைப் பின்தொடர்ந்து செல்லும்படி கூறினான். சொற்ப நேரத்தில் அவர்கள் ஓர் அறைக்குள் சென்றனர். அவ்வறையில் ஒரு பக்கம் திரும்பியதும் இருவரும் திடுக்கிட்டனர். ஏனென்றால் அப்பக்கத்தில் உள்ள சுவரில் பல விசைகள் இருந்தன. அவ்விசைகளின் மேல் பல ஆங்கில எழுத்துகள் குறிக்கப்பட்டிருந்தன. அவ்விசைகளின் உபயோகத்தை அம் மனிதன் குறிப்பிட்டுவிட்டுப் பின் ஒரு விசையை சுரங்கப் பாதையின் விசை எனக் கூறிக்கொண்டே அமுக்கினான். உடனே நிலம் கதவு போல் திறந்து கொண்டது. உடனே மூவரும் உள்ளே இறங்கினர். அங்கு இருந்த விசை ஒன்றை அம்மனிதன் அமுக்கினான் அப்போது சுரங்கத்தின் மேற்பகுதி மூடப்பட்டது.

சொற்ப நேரத்தில் மூவரும் வேறொரு மாளிகைக்குவந்துசேர்ந்தனர். அம்மாளிகையைச் சுற்றிப்பார்த்தபின் ஒரு அறைக்குச் சென்றனர். அங்கு பல பொருட்கள் காணப்பட்டன. அவைகளே திருடப்பட்ட பொருட்கள் என அறிந்தனர் சுப்பனும் முனியாண்டியும். மறுநாள் சுப்பனையும் முனியாண்டியையும் பச்சைமலை மாளிகையிலே காணவில்லை மற்ற மாளிகையில் தேடியும் காண

வில்லை. அதற்குப் பதிலாக ஒரு பொலிஸ் லாரி முழுவதும் ஜவான்களும் சங்கரும் ராமனும் இன்ஸ்பெக்டரும் லாரியை விட்டு இறங்குவதைக் கண்டனர். உடனே எல்லோரும் விழுந்தடித்துக் கொண்டு ஒவ்வொரு மூலையிலும் ஒளித்துக் கொண்டனர். அவர்களையெல்லாம் ஜவான்கள் கைதுசெய்தனர். ஆனால் நடராஜையும் அவன் அந்தரங்கக் காரியதரிசியையும் காணவில்லை; சங்கர் மற்ற மாளிகைக்கு ஜவான்களை அழைத்துச் சென்று தேடியபோது அங்கு இருவரும் அகப்பட்டனர். சங்கரைக் கண்ட நடராஜ் நீ சுப்பனல்லவா? என்று கேட்டான். உடனே "சுப்பனும் முனியாண்டியும் சங்கரும் ராமனுமாக வந்திருக்கிறோம்" எனக்கூறி இருவரும் சிரித்தனர்.

மறுநாள் ராமனுக்கும் சுந்தரிக்கும் திருமணம் விமரிசையாக நடைபெற்றது. அந்நேரத்தில் சங்கரின் தந்தை சங்கரை அணைத்து "வஞ்சகம் நிறைந்த நடராஜன் பணப்போர்வையினால் தன்னைப் போர்த்துக் கொண்டு நடமாடியதால் பணத்தைக் கண்ட நான் அவன் உண்மைச்சொரூபத்தை அறியவில்லை சங்கர்! அதனால் தான் நான் அவனை உன் தங்கைக்கு மணம் முடித்து வைக்க உத்தேசித்தேன். என்னை மன்னித்துவிடு" என்றார் கண்ணீர் மல்க! ✻

## பிணமும் பிழைக்குமா?

ரஷ்ய விஞ்ஞானிகள் இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் ஆராய்ச்சியில் அண்மையில் வெற்றி பெற்றிருப்பதாகத் தெரிகிறது. பேராசிரியர் வல்டிமிர் நெகோவ்ஸ்கி என்பவரின் தலைமையின் கீழ் இவ்வரிய சாதனை நடைபெற்றதாம். சக்தியற்ற இருதயத்தின் தசைகளுக்கு புத்துணர்ச்சி அளிப்பதையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இம்முறை ஒருவனின் சுவாசமும் இருதயத் துடிப்பும் நின்றவுடன் அவன் இறந்து விட்டதாக நாம் கருதுகிறோம் (CLINICAL DEATH). இது நடைபெற்ற ஐந்து நிமிடங்களின் பின்னரே, அவனது உடலியக்கங்கள் ஸ்தம்பிக்கின்றன. (Biological-Death) இந்த நெருங்கிய இடைவேளையிலேதான் அவனைக் காப்பாற்ற முடியும். 5,000 வோல்ட் மின்சாரத்தை நின்றுபோன இருதயத்தினூடே செலுத்துவதன் மூலம் அதற்கு புத்துணர்ச்சி அளிக்கும் முறையையே ரஷ்ய விஞ்ஞானிகள் கையாளுகின்றனராம். ரஷ்ய ஆராய்ச்சிச் சாலையிலே, பிரசவத்தின்போது இறந்த மரியா எனப்படும் ஒரு பெண்ணை மேற் கூறப்பட்டமுறையிலே உயிர் மீட்டனராம்.

—சி - ச

# அறிவு விருந்து

1. தமிழில் முதன்முதல் அகராதி ஒன்றைத் தொகுத்தவரின் பெயர் என்ன?
2. சென்னையிலிருந்து வெளிவரும் 'ஹிந்து'ப் பத்திரிகையின் முன்னேற்றத்துக்குக் காரணமாயிருந்த அதன் ஆசிரியர் அண்மையில் காலமானார். இவர் பெயர் என்ன?
3. மார்க்கோனிக்கு முன்னரே ரேடியோக் கருவியைக் கண்டு பிடித்ததாகக் கூறப்படும் இந்திய விஞ்ஞானியின் பெயர் என்ன?
4. சூரியனிலிருந்து ஒளி பூமியை வந்து சேர எவ்வளவு நேரம் பிடிக்கும்?
5. கிழக்கு ஜெர்மனி எந்த வல்லரசுக்கு உரியது?
6. இரவில் சூரியன் தெரியும் நாடு எது?
7. இலங்கையில் 1961 இல் பாராளுமன்றம் (பிரதிநிதிகள் சபை) எத்தனை அங்கத்தவர்களைக் கொண்டதாக இருக்கும்?
8. கேரளத்தில் சமீபத்தில் நடைபெற்ற கிளர்ச்சி எந்தச் சட்டத்திற்கு எதிராக நடைபெற்றது?
9. ஸ்பெயினிலுள்ள மாட்றிட் நகரிலே நடக்கவிருக்கும் சர்வதேசப் பட விழாவுக் கனுப்பத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள இந்தியப் படத்தின் பெயர் என்ன?
10. சமீபத்தில் விம்பிள்டனில் நடைபெற்ற டெனிஸ் பந்தயத்தில் விம்பிள்டனின் சரித்திரத்திலேயே முதன் முறையாகச் சாம்பியனாகத் திகழ்ந்த தென் அமரிக்க வீரரின் பெயர் என்ன? [விடைகள் - 51 - ம்பக்கம்]

## எனது அபிமானத் தமிழ்ச் சஞ்சிகை

41-ம் பக்கத் தொடர்ச்சி

இக் கவிதைதான் எவ்வளவு இனிமை. கருத்தோ எளிமை படிப்பதற்கோ இனிமை. உவமானமோ அருமை. தென்றலுக்கோ பெருமை.

தென்றல் தமிழ் இலக்கிய உலகுக்குச் செய்து வரும் தொண்டு மறக்க முடியாத ஒன்றாகும். வெண்பாப் போட்டி ஒன்றை முதலில் தொடக்கி அதனால் எண்ணற்ற கவிதைகளை எமக்குத் தந்து, இப்போது அறுசீர் விருத்தம், எழுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம் போன்ற விருத்தப் போட்டிகளை நடாத்தி தமிழ்க் கவிதா உலகில் ஓர் ஒப்பற்ற தொண்டைச் செய்து வருகின்றது.

முடிவாக எனது அபிமானத் தமிழ் சஞ்சிகையான தென்றலைப் பற்றிக் கூறுவது-தென்றல் ஒளி சிந்தும் முழு நிலவு, வழி காட்டும் கைவிளக்கு. தமிழரின் உரிமைக் குரல். கவிதைச் சக்கரவர்த்தி கண்ணதாசன் அளிக்கும் கருத்தோவியம்.

சிறுவர் தொடர்கதை:

# மாயப் பங்களா மந்திரவாதி

— ச. சிவகுமாரன் —

## பூர்வ கதை

பாடசாலை மாணவனான சந்திரராஜன் எஸ். எஸ். ஸி. பரீட்சையில் பெயிலாகின்ருன். அதனுல் அவன், அவன் தந்தை பொன்னுரங்கத்தினுல் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டுக் காட்டையடைகிருன். அக் காட்டில் அவன் ஓர் கள்வர் கூட்டத்தில் சேர்ந்தான். அவன் கள்வர் கூட்டத்தை அடைந்த அதே இரவு கள்வர் கூட்டத்தில் இருவர் ஓர் முகமூடி மனிதனினுல் கொலை செய்யப்படுகின்றனர். கொலை செய்த முகமூடி மனிதனை கள்வர் கூட்டத் தலைவன் கருப்பாண்டி துரத்திச் செல்கிருன். ஆனுல் அதற்குள்...

### 4. கானகத்தில் நடந்த கள்வர் கூட்டம்.

கள்வர் கூட்டத் தலைவன் தன்னை வெகு விரைவில் பிடித்து விடுவான் என்று அறிந்த அம் முகமூடி மனிதன் அருகில் இருந்த பெரும் புதருள் பாய்ந்தான். புதருக்குள் முகமூடி மனிதன் பாய்ந்ததினுல் கருப்பாண்டியினுல் அம் முகமூடி மனிதனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. பாவம்! அவன் தனியே எவ்வாறு தேடுவான். எனவே கருப்பாண்டி துக்கத்துடன் வந்த வழியே திரும்பினுன்.

அக் காட்டினுள்ள பயங்கர இருளில் இருபிணங்கட்கு அருகே நிற்பதென்ருல் யாருக்குத்தான் பயமாயிராது? கிழவன் கருப்பண்ணன் முகமூடி மனிதனைத் துரத்திச் சென்ற கருப்பாண்டிக்காக அதிக நேரம் காத்திருக்கவில்லை. அவன் தன் அருகே நின்ற கள்வர்களின் உதவியுடன் இரு பிணங்களையும் தூக்கிக் கொண்டு அக் கள்வர் கூட்டத்தின் குகையை அடைந்தான். அப்பொழுது குகைக் கடிகாரம் மூன்று தரம் அடித்து ஓய்ந்தது!

பகல் நேரம் கதிரவன் வானில் அக்கினிப் பந்தாகத் தோற்றமளித்துக் கொண்டிருந்தான். வெயில் 'தகதக' என்று எறித்துக் கொண்டிருக்கிறது. வீதியில் கால் வைத்தால் கைலாசம்தான் அவ்வளவு கொடூரமான சூடு!'

இப்படிப்பட்ட இச் சமயத்தில் நேயர்களைக் காட்டுக்கு அழைத்துப் போவதற்காக முன்னேயே மன்னிப்புக் கோருகிருேம். காட்டிலுள்ள கள்வர் கூட்டத்தவரின் குகையை நெருங்கி விட்டால் பின் வெய்யிலின் தொல்லை இருக்காதல்லவா? எனவே விரைவாய் எம்மைப் பின் தொடர்ந்து வாருங்கள்.

இதோ நாம் கள்வர் கூட்டத்தவரின் குகையை அடைந்து விட்டோம் அதோ ஏதோ சதியாலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது போலும் எல்லாக் கள்வர்களும் கூட்டமாயிருக்கிருர்கள். ஆம்! அவர்கள் பேச்சிலிருந்து முகமூடி மனிதனைக் கொல்லச் சூழ்ச்சி செய்யக் கூடிய கூட்டம் என்று தெரிய வருகிறது.

"எஜமான், நம் கூட்டத்திலிருந்து ஒருவன் முகமூடி மனிதனைக் கொல்லச் சென்ருலென்ன?"

"பின் அம் முகமூடி எம்கூட்டத்திலிருந்து தான் தன்னைக் கொலை செய்ய வந்தார்களென்று அறிந்தா ஆபத்தா மொடியுமே"

"அப்ப வேற்று மனிதனுய் யாரை அக் கொலையைச் செய்ய ஏவலாம்"

"தம்பி, அவன் சந்திரராசனை ஏவினுல் என்ன" என்ருன் கருப்பண்ணன் "சரி தாத்தா, வாருங்கள் அவனைக் கேட்டுப் பார்க்கலாம்" என்று கருப்பாண்டி கூறி விட்டு கருப்பண்ணனையும் கூட்டிக் கொண்டு சந்திரராஜனிடம் சென்ருன்.

சில சமயங்களில் மனிதன் தான் என்ன காரியம் செய்கிருேம் என்ற நினைவில்லாமல் செய்கிருர்கள். அதுபோல் தான் சந்திரராஜனும் முகமூடி மனிதனுன மகாலிங்கப் பண்ணையாரைக் கொல்லச் சம்மதித்து விட்டான்.

## 5. காரிருளில் ஓர் காரிகை.

அமாவாசை இருள்—

அப்படிப்பட்ட அப் பயங்கர இருளிலே மகாலிங்கப் பண்ணையாரைக் கொல்ல அக் காட்டு வழியால் மல்லிகைத் தோட்டத்துக்குச் சென்று கொண்டிருந்தான் நமது கதாநாயகன் சந்திரராஜன்!

சந்திரராஜனுக்கு இப்பொழுது சுமார் பதினைந்து வயதிருக்கும். இவ்வுலகத்தில் அவன் வாழ்ந்து வந்த பதினைந்து வருடங்களில் ஒருநாளாவது ஒரு கொலையைக் கண்டதோ கேள்விப்பட்டதோ கிடையாது. எனவே அவன் எவ்வாறு கொலை செய்யத் துணிந்தான் என்று உங்கட்கு ஆச்சர்யமாய்த்தானிருக்கும். முன்பு கூறிய போன்று அவன் மனோநிலைதான் அவனைக் கொலை செய்ய ஒப்புக் கொள்ளச் செய்ததென்றாலும், அவன் மல்லிகைத் தோட்டத்து மகாலிங்கப் பண்ணையாரின் துர் நடத்தையைப் பற்றித் தன் தந்தையிடமிருந்து தெரிந்து கொண்டான், அத்துடன் அவன் மகாலிங்கப் பண்ணையாரைக் கொலை செய்யச் சம்மதித்ததற்கு மூல காரணம் அவன் தாயை மகாலிங்கப் பண்ணையார் கொலை செய்ததே!

மெதுவாக நடந்து நடந்து காட்டின் எல்லையை அடைந்த சந்திரராஜன், அவ் இடத்தில் பிரிந்து இரு பாதைகள் செல்வதைக் கண்டான். ஒரு பாதை 'திருமலை'யில் வாழும் சொக்கலிங்கச் செட்டியாரின் ஊரான சிவனூருக்குச் செல்லும் பாதை மற்றது சந்திரராஜனும், மகாலிங்கப் பண்ணையாரும் வாழும் மல்லிகைத் தோட்டத்துக்குச் செல்லும் பாதை சந்திரராஜன் தன் கையில் 'ரிவால்வரை'ப் பிடித்தபடி சிறிது விரைவாக மல்லிகைத் தோட்டத்துக்குச் செல்லும் பாதையில் நடந்து கொண்டிருந்தான், அவன் மனம், 'எம்பெருமானே என்னைக் காப்பாற்று. போலிஸிடம் நான் அகப்படக் கூடாது' என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தது. சந்திரராஜன் அப்பொழுது தீர்மானித்தவற்றை இங்கு நேயர்கட்கு சுருக்கமாய்த் தருவது அவசியமாகின்றது.

அதாவது தான் மகாலிங்கப் பண்ணையாரைக் கொல்லாமல் சும்மா அவரை மிரட்டிவிட்டு வரத் தீர்மானித்தான். இத் தீர்மானத்தின் பின் அவன் விரைவாக மகாலிங்கப் பண்ணையாரின் பங்களாவான 'லிங்க வாச'த்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

பச்சைவர்ண நிறமடித்த உயர்ந்த சுவர்கள் அழகான இருசோடி இரும்புக் கேட்டுகள். அவற்றிற்கருகே ஒவ்வொன்றுக்கும் ஒரு கூர்க்கா முன் சுவரில் 'லிங்க வாசம்' 'மகாலிங்கம்' என்று பளிங்குக் கல்லில் பொறிக்கப்பட்டிருந்தது. பங்களாவுக்கு முன்புறத்தில் நறுமணங்கமழும் பூங் கன்றுகள் நாட்டப்பட்டிருந்தன. பங்களாவின் ஒரு புறத்தில் ஒரு சிறு பாதை சென்றது. அதன் வழியே போனால் பங்களாவின் பின் கட்டை அடையலாம். இவற்றையெலாம் ஒரு கணம் பார்த்து ரசித்த சந்திரராஜன் முன் கேட்டுகளை நோக்கினான். கேட்டின் அருகே ஒரு பெஞ்சியில் இரு 'கூர்க்கா'க்களும் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார்கள். அதைக்கண்ட சந்திரராஜன் சிறிது புன்னகை பூத்தவண்ணம் முன் மதிலைத் தாண்டிக் குதித்தான். அப்பொழுது எங்கேயோ கதவின் தாழ்ப்பாள் திறக்கும் ஓசைகேட்டது.

இவ்விடத்தில் நேயர்கட்கு உயர் திரு மல்லிகைத் தோட்டத்து மகாலிங்கப் பண்ணையாரை அறிமுகமாக்குவது அவசியமாகிறது. இதோ மல்லிகைத் தோட்டத்து ஜனங்கள் அவரைப்பற்றி எமக்குக் கூறிய செய்திகளைத் தருகிறோம். அவை எவ்வளவு தூரம் உண்மை என்பது மட்டும் நமக்கும் தெரியாது.

காலம் செய்த கோலத்தினால் வற்றாத ஆறும் வளம் பொருந்திய நிலமும் உள்ள, பொன் கொழிக்கும் நாடு எனப் புகழ் பெற்ற 'வளநாடு' என்னும் நாட்டில் பிறந்த மகாலிங்கப் பண்ணையார்வாள் மல்லிகைத் தோட்டத்திற்கு வந்து வாழ நேரிட்டது.

மகாலிங்கப் பண்ணையார் குடும்பத்தார் பரம்பரையாகச் செல்வந்தர்களாய்த் திகழ்ந்தார்கள். அதுபோன்று மகாலிங்கப் பண்ணையாரும் மிகவும் செல்வந்தராயிருந்தார். இதற்கு அவருடைய 'லிங்க விலாசம்' என்னும் பங்களாவே எடுத்துக் காட்டாகும். மகாலிங்கப் பண்ணையார் மற்றைய செல்வந்தர்களைப் போல் 'கருமி' அல்ல; புண்ணியவான். இரப்பவர்க்கு இல்லை என்பது கிடையாது. வேலையில்லாதவர்க்கு வேலை கொடுக்கிறார். பல நிலையங்களை பொது ஜன நன்மைக்காக தன் பெயரால் நிறுவி வருகின்றார். எனவே அவ்வூர் மக்கள் சில சமயம் அவரை 'வள்ளல் பண்ணையார்' என்று அழைப்பதுமுண்டு.

மல்லிகைத் தோட்டத்தில் மதம் என்னும் மகா அரக்கனையும் சாதி என்னும் கொடுங்கோலனையும் வறுமை எனும் அசுர

# கலைத் தெய்வம்

— வித்துவான் க. வேந்தனார் —

தென்றலின் இன்பப் பேறுய்த்
தீஞ்சுவைக் கனியின் சாறுய்க்
குன்றினில் சுரந்து பாயும்
குளிர்புனல் அருவி ஊற்றாய்
இன்றமிழ்ப் பயனாய் யாழின்
எழுதரும் இசையாய்த் தோன்றி
நினறெமைப் புரக்குந் தெய்வம்
நிறைகலைத் தெய்வம் ஒன்றே.

வள்ளுவர் உளத்தில் நின்று
வையகம் வாழும் வண்ணம்
தெள்ளிய குறளைத் தந்து
செந்தமிழ் வளர்த்த தெய்வம்
உள்ளொளி பெருக்கிக் கற்பின்
உயர்ச்சியால் அறிஞர் நெஞ்சை
அள்ளிடும் சிலம்பைத் தந்தே
அறநெறி வளர்த்த தெய்வம்.

கல்லினை உளியால் வெட்டிக்
கவின்வளர் உருவம் ஆக்கி
நல்லுயர்ச் சாயல் வீச
நல்கிடும் கலைஞன் கையும்
வில்லினை வளைத்துப் பாணம்
விடுத்திடும் வீரன் கையும்
மெல்லிதழ்க் கமலப் போதும்
வீற்றிருந் துவக்குந் தெய்வம்.

கொஞ்சிடும் குழந்தை கூறும்
கொழுஞ்சுவை மழலை இன்பம்
விஞ்சிடும் பொருளை இல்லார்
விருந்துணக் கொடுக்கும் இன்பம்
நெஞ்சினில் வேலைத் தாங்கி
நின்றுயர் விடுக்கும் இன்பும்
எஞ்சலில் தனது பண்பாய்
இலங்கிடும் கலைமாத் தெய்வம்.

---

லையும் அழிக்க மல்லிகைத் தோட்டத்து மகாலிங்கப் பண்ணையார் அரும்பாடுபட்டு வருகிறார். நாடோறும் சிவன் கோவிலுக்குச் சென்று சிவபெருமானை வணங்குவார். அவருடைய வாழ்க்கையில் அவர் ஓர் உயிருக்குக் கூட இன்னல் விளைவித்தது கிடையாது. மாமிசம் புசிப்பதும், மதுபானம் அருந்துவதும் மிகவும் பாபமானதும், கெட்ட செயல்களும் என்று எண்ணுகிறார். மாமிசம் முதலியவற்றை உண்பவர்களை அன்பாகக் கடிந்து புத்தி புகட்டுகிறாராம்) ஊரில் வாசிகசாலைக்கு அநேக புஸ்தகங்களை உதவியுள்ளார். மேலும் பற்பல நன்மைகளை அவர் மல்லிகைத் தோட்டத்து ஜனங்கட்கு செய்து வருகின்றார். கொலை செய்பவர்களிடம் கூட அச்சமின்றிச் சென்று அவர்கட்குப் புத்தி புகட்டி மேலும் கொலை செய்யாமல் தடுப்பார். களவு செய்பவர்க்கு பணம் கொடுத்து அவர்கட்கு வேலையும் அளித்து அவர்களை அன்றுதொட்டு களவு செய்யாமல் தடுக்கிறார். அதனால் மல்லிகைத் தோட்டத்தில் கொலை களவுகள் நடப்பதே இல்லை.

இவ்வாறு தங்கட்கு அநேக நன்மைகளைச் செய்யும் மகாலிங்கப் பண்ணையாரை மல்லிகைத் தோட்டத்து ஜனங்கள் மகான்-மகாலிங்கம் என்று புகழ்கின்றனர்.

மல்லிகைத் தோட்டத்து ஜனங்களோ மகாலிங்கப் பண்ணையாரை மகான் என்கின்றனர். ஆனால் சந்திரராஜன் தன் தாயைக் கொன்ற பாதகன் மகாலிங்கப் பண்ணையார் தான் என்கிறான். கள்வர் கூட்டமும் முக முடி மனிதன் மகாலிங்கப் பண்ணையார் தான் என்கிறார்கள். இவர்களில் யார் கூறுவது உண்மை? மல்லிகைத் தோட்டத்து மகாலிங்கப் பண்ணையார் பசுத் தோல் போர்த்த புலியா? அல்லது மிகவும் நல்லவரா?

சந்திரராஜன் மகாலிங்கப் பண்ணையாரின் பங்களா முன் மதிலைத் தாண்டிக் குதித்தானல்லவா? அப்படிக் குதித்தவன் பங்களாவின் பின்கட்டை அடையும் பாதையில் விரைவாகச் சென்று பின் பகுதியை அடைந்தான். சந்திரராஜன் அங்கிருந்த ஒரு பெரிய கதவைத் திறக்க தன் பாக்கெட்டிலிருந்த ஒருவகையான ஆயுதத்தை எடுத்தான். அவ் ஆயுதத்தினால் அக் கதவைத் திறந்து உள்ளே பிரவேசித்தான். அப்பொழுது 'படபட' என்று ஒரு ஓசை கேட்டது. ஆம்! அது சமையல் கட்டு போலும், அவன் ஒரு பானையை மிதித்து விட்டதினால் தான் அவ் ஒலி உண்டாகியது. அச் சமயத்தில்—அவ் அறையில் அக் காரிருளில் ஒரு காரிகை தோன்றினாள். (தொடரும்)

○ 'செம்மறிக் குட்டியின் சிவலோக யாத்திரை'க்கு உங்களை அழைத்துச் சென்ற இவர், இப்பொழுது 'நரியனாரின் நப்பாசை யாத்திரை'யில் உங்களை அழைத்துச் செல்கிறார். புறப்படுங்கள்!

# நரியனாரின் செய்கை: நமக்கு வேண்டாம் தம்பி!

— கனக. செந்திநாதன் —

இரை கிடைக்காது அவஸ்தைப் பட்ட இடக்கு நரியனார் இங்கும் அங்குமாய் அலைந்து வரும் வழியில் காக்கையைக் கண்டு புகழ்ந்து வெண்ணெய் உண்ட கதை உங்களுக்குத் தெரியும். அந்த நரியின் கதை அப்பால் உங்களுக்குத் தெரியுமா?.... அதைத்தான் சொல்லப்போகிறேன்.

நரிக்குக் கர்வம் தலைக்கேறிவிட்டது. தன்னுடைய தந்திரத்திறமையிலே அதற்கு அளவில்லாத நம்பிக்கை வந்துவிட்டது. 'கள்ளக் குணமுள்ள காக்கை'யாரையே ஏமாற்றி விட்டேன் இனி எனக்கு நிகர் யார்? என்று பெருமிதத்தோடு ஊளையிட்டது.

எதிரேவந்த ஆடு ஒன்றை ஏமாற்றிக் கொன்று இறைச்சியைத் தின்றது. அதன் குடலைச்சாப்பிட்டு முடிந்ததும் நரியால் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. 'வயிறு ஊதிப் பெருத்துப்' புடைத்து விட்டது. காட்டில் உள்ள பெருமர நிழலில் நன்றாகப் படுத்துக் கொண்டே கற்பனையில் மூழ்கி விட்டார் நரியனார். "காகத்தை ஏமாற்றி வெண்ணெயைத் தின்றுபார்த்தேன்; ஆட்டை ஏமாற்றிக் கொன்று குடலைச் சுவைத்துப் புசித்தேன். இனி ஒன்றே ஒன்றுதான் மிச்சம். என் வாழ்நாளில் அதையும் சாப்பிட்டு விட்டால்...... நான் பிறந்ததின் பயனை அடைந்தவனாவேன்; மனித இறைச்சி; மனிதனின் மூளை; அதுதான் எனக்கு வேண்டும். எங்கேதான் கிடைக்கப் போகிறதோ?" ஆசை, பேராசையாய்—அடக்கமுடியாத ஆசையாய்—வளர்ந்துவிட்டது நரிக்கு.

அப்போது அந்தக் காட்டின் மத்தியில் பேரிரைச்சல் கேட்டது. மனித நடமாட்டமேயில்லாத அவ்விடத்தில் இன்று......யானை, குதிரை, தேர், மனிதசமுத்திரம். ஒரே ஆரவாரம். நரிக்கு நாவில் ஜலம் ஊறத் தொடங்கிவிட்டது. ஆமாம் அது ஊகித்தது சரி. கிட்டடியில் எங்கோ பெரிய யுத்தம் ஒன்று நடைபெறப் போகிறது. அப்புறம் கேட்பானேன், ஒரு மனிதனா?... பல மனிதர்களா?... மனிதக் கடல்களின் — செத்தபிணங்களின் — மூளையெல்லாம் என் வயிற்றுக்குள்தான். ஆஹா! ஆஹா!! ஆஹா!!! நரி நடனமாடத் தொடங்கி விட்டது.

நடனம் முடிந்ததும்தான் அதற்கு ஒரு யோசனை உதித்தது. "அதெல்லாம் சரி; என்னை இப்படியே இந்த மனிதர்கள் யுத்தம் நடக்கும் இடத்துக்குச் சமீபமாகக் கண்டுவிட்டால் சும்மா விட்டு விடுவார்களா? பாவி மனிதர்கள்; அடி அடியென்று அடித்துத்துரத்தி விடுவார்களே; கொன்றாலும் கொன்று போடுவார்களே; இதற்கென்ன செய்வது?"... யோசித்தார்... யோசித்தார்... யோசித்துக் கொண்டேயிருந்தார் நரியனார்.

கடைசியாக அவரின் மூளையில் புதிய யோசனை ஒன்று தட்டுப்பட்டது. "சண்டை நடந்து முடியும் வரைக்கும் தான் செத்த நரிபோல மூச்சை அடக்கிக் கொண்டு கிடந்தால் தன்னை யாரும் தொந்தரவு செய்யமாட்டார்கள்" என்பதுதான் அது.

தன் முன்யோசனையுடன், சண்டைக்குப் போகும் வீரர்களின் கண்ணுக்குத் தெரியாத தூரத்திலே அவர்களைப் பின் தொடர்ந்தது நரி. இரவு சமீபித்ததும் படைகள் தங்குவதற்கும்—யுத்தமுஸ்தீப்புக்குமாக—கூடாரங்கள் அமைக்கப்பட்டன. நரியும் படுத்துக்கொண்டது. விடிந்தது. படைகள் புறப்படவில்லை. அங்கேயே யுத்தம் நடக்கும் போல் நரிக்குத் தென்பட்டது. அது தன் முன்யோசனையை-செத்தநரிபோல் கிடக்கும் யோசனையை-அமுலாக்கத் தொடங்கிவிட்டது. பல சருகுகளும் சேர்ந்து குவியலாகக் கிடக்கும் ஒரு இடத்தில் அந்த நரி படுத்துச் செத்த நரியாகக் காட்சியளித்தது. பாவம்! நரி கண்களை மூடி எப்போது 'நடிக்கத்' தொடங்கியதோ அப்போதே படை ஓசைப்படாமல் புறப்பட்டு விட்டது. சண்டை ஒன்றும் அங்கே நிகழவில்லை. ஆனால் மூடியகண்களை நரி திறக்கவேயில்லை.

அப்போதுதான் அந்தப்பரிதாப சம்பவம் நிகழ்ந்தது. வழிப்போக்கன் ஒருவன் அவ்வழியாக வந்தான். வந்தவன் இறந்ததுபோல் கிடந்த இந்த நரியைக் கண்டான். 'இதன் செவியும், வாலும், தோலும் நமக்கு எதற்கேனும் உபயோகப்படலாம்' என்று தீர்மானித்தான். தீர்மானத்தைச் செயலிற் காட்டினான். மனித மூளை தின்னப் பேராசை கொண்ட நரியனார் அந்த மனிதனின் கத்திக்குப் பலியாகிக் கதறினார்; துடித்தார். அந்த மனிதன் விடவில்லை. செவியையும் வாலையும் வெட்டி, தோலையும் உரித்துக் கொண்டான். இது என் கற்பனைக் கதை என்று எண்ணியிருப்பீர்கள். அல்லவே அல்ல. சூழ்ச்சி செய்பவர் அழிவர்; பேராசை பேரிடர் தரும் என்ற இந்த நீதிகளைப் போதிக்கும் பாடலைப் பாருங்கள்.

தொடர்ச்சி 49-ம் பக்கம்

# என்னைப்பற்றி நான்......

'தேனீ'

தலையங்கத்தைப் பார்த்தவுடனேயே பலருக்கு ஏமாற்றமாக இருக்கக்கூடும். 'மாணவ மத்தியில்' என்ற தலைப்பில் நான் தொகுத்த விஷயங்கள் தேனான விஷயங்கள் மாணவத்தோழர்களுக்கு என்று பலரும் கூறிவருவதை நான் காதாரக் கேட்டிருக்கின்றேன். ஆம்! இதுகாறும் மாணவத் தோழர்கள் மத்தியிலும், ஆசிரியர்கள் மத்தியிலும் வேம்படியிலும் பறந்து திரிந்து பல விஷயங்களை நான் தொகுத்துத் தந்துள்ளேன். மாணவர்களுள் மாணவனாக ஆசிரியர்களுள் ஆசிரியனாகக் கலந்தும் கலவாமலும் கலவாமல் கலந்தும் நான் இந்த ஓராண்டு காலமாக உங்களுக்கும் ஆசிரியருக்கும் திருப்தியளிக்கும் வகையில் எனது பணியைச் செய்து வந்திருக்கிறேன் என்று நான் நினைக்கிறது மட்டுமல்ல பலர் வாயிலாகவும் கேட்டுமிருக்கிறேன். நான் தொகுத்த விஷயங்களால் சிலர் புண்பட்டிருந்தால் அதற்காக நான் வருந்துவதற்கில்லை. தேன் சேகரிப்பதுதான் என்னுடைய மூலகாரணமாயினும் சிறு குழந்தைகளுக்கு வைத்தியர் தேனிலே மருந்து குழைத்துக் கொடுப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள், அதே போல அவ்வப்போது மாணவர்களிடையே நடக்கும் விஷயங்களையும் தேனோடு கலந்து உங்களுக்கு வழங்கியுள்ளேன்.

எமது தீப ஆசிரியர் ஒரு கடுமையான பேர்வழி. இவருடைய கோபத்துக்கு நான் பலமுறை ஆளானபோது சிறிது தேன் பூசி அவரைச் சமாதானப்படுத்துவது எனது வழக்கமான சாதுர்யங்களில் ஒன்று. என்னை நினைத்தே நான் பரிதாபப்பட்டுக் கொள்வதுண்டு பல சமயங்களில். நான் கொடுத்த தகவல்களில் ஏதாவது தப்பு உண்டென்று புகார் கிடைத்து விட்டால் உடனே ஆஜராகும்படி 'ட்ரங்கோல்' போடுவார். சில சமயம் நான் பல மைல் தூரத்தில் இருந்தாலும் ஆசிரியரின் நெற்றிக் கண்ணுக்குப் பயந்து உடனேயேநேரில் காட்சி தந்தருளுவேன். ஆசிரியரின் முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடித்துக் கொண்டிருக்கும். வரவேற்பைப்பற்றித்தான் சொல்லவேண்டியதில்லையே (வேலை நீக்கப்) பத்திரம்கூட வாசித்தளிக்க முன்வருவார். அவ்வளவு குதூகலமான வரவேற்புக்கிடைக்கும். 'சார் வள்ளுவன் சொல்லியிருக்கின்றான்' என்று நான் முணுமுணுத்தால் காணும், ஆசிரியரின் அகமும் முகமும் மலர்ந்துவிடும். அவ்வளவு சக்தி வள்ளுவன் என்ற சொல்லுக்கு எமது ஆசிரியரிடத்தில்.

ஒரு சின்ன விஷயம். 'தேனீ' யார் என்று பல மாணவர்கள் துப்புத் துலக்கிக் கொண்டிருப்பதாகத் திருவாளர் இரகசியம் அறிவிக்கிறார், இந்த விஷயத்தையிட்டு மாணவர்களிடையே பல துப்பறியும் இலாக்காக்களும் வேலை செய்வதாகவும், துப்பறியும் சங்கர் போன்ற மேதாவிகள் இவ்விஷயத்தில் பணியாற்றிவருவதாகவும் செய்திகள் கிடைத்திருக்கின்றன. இந்தப் பகீரதப் பிரயத்தனங்களை உடனடியாகக் கைவிடும்படி அவர்களுடைய நேரத்தின் மதிப்பைக் கருதிக் கூறுகிறேன். நீங்கள் எவ்வளவுதான் முயற்சி எடுத்தாலும் இந்த ஒரு விஷயத்தில் நீங்கள் வெற்றி பெறுவதியலாத காரியம் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. என் பேரைக் கூறிவிடுவதில் எனக்கேன் இவ்வளவு தலைவீக்கம் என்று நீங்கள் கேட்பது என் காதில் கேட்கின்றது. அதில்தான் என்னுடைய தற்பாதுகாப்புப் படைகள் தங்கியிருக்கின்றன. இல்லாவிட்டால் ஒரு சிட்னியோ அல்லது லெனராவோ மாணவர்களிடையே தோன்றினாலும் தோன்றிவிடுவார்கள். அப்புறம் என் கதி! மாணவர்கள் முதற்கொண்டு அதிபர் வரையில் நான் சில சமயங்களில் எதிர்ப்பைப் பெற்றிருக்கின்றேன். இந்த நிலையில் என் பெயரை வெளியிட்டால் நீங்கள் சந்தோஷமடைவது ரைட்டு (right) நான் பாடசாலையிலிருப்பது டவுட்டு. (doubt.)

மாணவர்களின் மத்திய தீபத்தில் பல மலர்கள் விரிந்திருக்கின்றன. இந்த இதழும் மலராக விரிந்துவிட்டது. தேனுக்குப் பஞ்சமில்லை, எனக்குமட்டுமல்ல உங்களுக்கும்தான். ஆகவே உங்களுடைய இன்பத்தில் நான் குறுக்கிடுவது சரியல்ல எனக் கருதி மலரிலுள்ள தேன் முழுவதையும் உங்களுக்கே வழங்கி, விடை பெற்றுக்கொள்கிறேன் - வணக்கம்.

ரீங்..................ரீங்



கலங்கரை விளக்கத்தை நோக்கி



கரை சேரும் கட்டுமரம்



படங்கள்: K. V. சாமி

# சுரைக்காயோ எட்டில்?

— யாழ்ப்பாணக் கவிராயர் —

அன்றிருந்த நம்தமிழர் பெருமைஉயர் திறமை
அயலவனை நேசிக்கும் அன்பொழுகு பண்பு
நன்றிருந்த நல்வாழ்க்கை நலம்விழைக்கும் நட்பு
நம்மவர்கள் மட்டுமல்ல நாட்டவர்கள் எவரும்
ஒன்றிருந்த உயர்தன்மை உலகத்தில் கவரும்
உள்ளத்தில் களிப்பூட்டும் உன்னதக் கொடையே!
என்றிருந்த எழிலெல்லாம் எங்குமறைந் ததுவோ
ஏனிந்த இழிநிலைமை எம்மவர்க்குத் தகுமோ?

ஒன்றுகுலம் ஒருவன்தான் தேவன்நமக் கென்று
ஒருகுலமே உண்டிங்கு மறுபேதம் அன்று;
என்றுணர்ந்த எம்தமிழர் இன்றிருக்கும் நிலைமை
எண்ணிவிடில் இழவுபல எவ்வெவர்க்கும் புலமை!
நின்றொருவன் சமதரையில் பேசுகின்ற போது
நீவேறு நான்வேறு நினைப்பதுவே; வாது
சென்றொருவன் சமவுரிமை சொல்லுகின்ற துண்டு
செயலில்லை; சீர்திருத்தம் பேச்சுருவில் மண்டும்.

சிறுபுறவின் உயிருக்காய் தசைதன்னை யீந்து
சீர்த்திபெற்ற சிபிமன்னன் வாழ்ந்ததுண்டு உயர்ந்து;
மறுகிவிழும் கொடிமுல்லை வாழ்வதனிற் காக
மணிபொறித்த தேர்தன்னை மதித்தளித்த பாரி;
சிறுமழையில் நனைந்தமயில் தன்னிலைமை கண்டு
சிங்காரப் பொன்னுடை போர்த்துயர்ந்த பேகன்
வறுமையினில் வாடிநின்ற புலவரவற் காக
வாழுமுயிர் தனையீயக் குமணனெனும் வள்ளல்;

இவர்பலராய் எம்தமிழர் நாடதனில் இருந்தார்
என்றுநான் படித்ததுண்டு இலக்கியத்தில்; விருந்து!
அவர்பலரின் அரும்புகழை அங்கலாய்த்துக் கூறும்
அன்புடையார் அறத்தமிழர் அருங்கருத்து! மாறும்.
சுவரெழுதாச் சித்திரம்போல் செயலற்று காட்டும்
சுவைகூட்டும் சொல்லடுக்கு சுரைக்காயோ? எட்டில்.
தவறேதும் புரியாத தமிழர்சிலர் தாழ்வு!
தந்தவர்கள் நம்தமிழர் தானிந்த வாழ்வு.

---

## நரியனாரின் செய்கை நமக்கு ......

47ம்- பக்கத் தொடர்ச்சி

குடற்படு முடையைக் கண்டு குறுநரி
தின்று, மான் தேர்க்
கடற்படை இயக்கங் கண்டே கள்ளத்தாற்
கிடப்ப, யாருந்
திடற் பகையின்மையாலே செவி கொய்வான்
வால் கொய்வானுய்
உடற்புறம் போர்த்த புன்தோல் உரித்திட்டங்
கொருவன் சென்றுன்.

(குடற்படுமுடை-குடலில் உண்டாகிய மாமிசம்; மான்-குதிரை; படைஇயக்கங்கண்டு-சேனை செல்லும் தோற்றத்தைப்பார்த்து; திடன்-வலிமை பொருந்திய; புன்தோல்-அற்பமாகியதோல்) இந்தப் பாடல் எங்கே உள்ளது தெரியுமா? ஐம்பெருங் காப்பியங்களுள் (சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி) ஒன்ருகிய சீவகசிந்தாமணியின் ஆசிரியர் திருத்தக்கதேவர் பாடிய நரிவிருத்தத்தில் உள்ளதுதான்.

கடிதம் :

# தம்பிக்கு......(2)

... செல்வி யோகேஸ்வரி வைத்திலிங்கம் ...

அன்புத் தம்பிக்கு அருமை அக்கா எழுதிக்கொள்வது,

உங்கள் கல்லூரியில் நடைபெற்று வருகின்ற சில சம்பவங்களைக் கேட்டு வருகின்றேன். அது மட்டுமல்லாமல் அச் சம்பவங்கள் இக்காலப் பள்ளிகளில் நடைபெறும் ஒரு குறைபாடுங்கூட. இதைஅகற்ற வேண்டும் என்ற நோக்குடன் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

தம்பி! நீயோ ஒரு விளையாட்டு மாணவன். உன்னைப்போல் விளையாட்டுப் பிள்ளைகள் கூடிவிட்டாற் கூறவா வேண்டும்? "தீயாரைக் காண்பதுவும் தீதே, தீயாரோடிணங்கி யிருப்பதுவுந் தீதே" என்று பெரியோர் கூறியுள்ளனர். ஆகவே தீய சகவாசங்களைத் தீர்த்துக்கட்டி நல்லவர்களுடன் நட்புக் கொள். உன் நண்பர்களும் என் கடிதத்தைக் காத்திருப்பதால் எல்லோரும் இதை வாசித்துப் பயனடையுங்கள்.

தம்பி! மாணவர்களுக்கு எத்தனையோ கடமைகள் உள்ளன. அவற்றுள் தலைசிறந்தது உங்கள் ஆசிரியர்களை மதிப்பதே. "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்று பெரியோர் வாக்குப்படி இறைவனைப் போல் பக்தியுடன் இவர்களையும் மதிக்க வேண்டும். தம்பி! சற்றுச்சிந்தித்துப்பார்!! உன் மாணவ வாழ்க்கையிற் கூடியபாகத்தை யாருடன் செலவு செய்கின்றாயென்று. அப்பா ஆர்வத்துடன் உனக்கு வேண்டிய பணத்தைத் தருகிறார். அம்மா அன்புடன் உனக்கு ஆகாரம் தருகிறாள். ஆனால் இவர்கள் இருவராலும் உன் அகத்திலுள்ள அறியாமைஇருளை அகற்ற இயலவில்லையே. அந்த வேலை முழுவதையும் ஆசிரியர் பொறுப்பில் விட்டுவிடுகிறார்களே பெற்றோர், ஆகவே பெற்றோரிலும் பார்க்க அதிக நேரத்தையும் அன்பையும் உங்களுக்குச் செலவுசெய்து அறியாமையிருளை அகற்றி, அறிவொளியை ஏற்றி, அது அணைந்து போகாவண்ணம் தம் உழைப்பென்னும் நெய் யிட்டு, அன்பென்னுங் கருவியால் திரியைத் தூண்டிவிட்டுச் சமூகத்திற் பிரகாசிக்கும் அங்கமாக, சமூகத்தின் குறைகளைத் தட்டிக் கேட்கும் சிங்கமாக உருவாக்கின்றனரே அத்தங்கமான ஆசிரியர்கள்.

இத்தகைய அரிய சேவைசெய்யும் ஆசிரியர்களுக்கு அருமைமாணவர்கள் செய்யும் நன்றிதானென்னவோ? தம்பி! ஒன்றுனக்குத் தெரியுமா? அகன்ற அறிவு படைத்த ஆறுமுகநாவலருக்கு ஒரு மாணவரிருந்தார். அவர்பெயர் கைலாசபிள்ளை. அவர் தன் ஆசிரியரை "ஐயா" என்று தான் அழைப்பது. இறக்குந் தறுவாயிலும் அவர் கடவுளை வணங்கவில்லை-பெற்றுவளர்த்த பெற்றோரை வணங்கவில்லை, உற்றார் உறவினரை வணங்கவில்லை. பின்யாரை வணங்கினார் என்று எண்ணுகிறாய்? ஐங்குரவர்கள் செய்யும் கடமைகள் அத்தனையையும் செய்யும் ஆசிரியரையே வணங்கினார். "ஐயா அவர்களே எனக்கு உறுதுணை" என்று உயிர் பிரியுங் கடைசித் தருணத்திற்கூடக் கூறினார். பார்த்தாயா? இவரின் குருபக்தியை? இத்தகைய பெரியோரைப் பார்த்தாவது திருந்தி நடந்து கொள்ளுங்கள். ஆனால் சிலமாணவர்கள் ஆசிரியர்களுக்கு முன்னாலேயே அவர்களை அவமதிக்கின்றனர். பட்டம் சூட்டுகின்றனர். நீங்கள் பட்டம் பெறாவிட்டாலும் பட்டமளிக்கும் அரிய சேவையிலாவது ஈடுபட்டிருக்கிறீர்களே. உங்கள் அரிய சேவையை நான் பாராட்ட வேண்டாமா? என்னே! உங்கள்திறமை!! புத்திக்கூர்மை!!!

ஐயே! ஆளைப்பாரேன் ஆளை!! சிரிக்கிறாயா உன் புத்தி சாதுர்யத்தை எண்ணி? ஆம் துடிக்கும் வாலிபப்பருவமடா இப்பொழுது பிழை எதுவுந் தெரியாது; எல்லாம் சரியாகத்தான் தெரியும் இப்பொழுது. ஆசிரியர் வகுப்புக்கு வரும் பொழுது மாணவர்களாகிய நீங்கள் இருக்கைவிட்டெழுதல் வேண்டும். அவர் வணக்கம் செலுத்தாவிட்டாலும் நீங்கள் வணக்கம் செலுத்தவேண்டும். ஆசிரியர் கூறியவற்றைக் கேலிபண்ணியோ, கிண்டல் செய்தோ 'முறுக்கு' வாங்கிவிடாதீர்கள்.

நீங்கள் ஒரு வகுப்பிலிருந்து வேறு வகுப்பிலே வேறு ஆசிரியர்களிடம் படிக்க நேரும். சிலசமயம் ஒரு கல்லூரியிலிருந்து வேறு கல்லூரிக்குச் செல்ல நேரும். அப்பொழுதெல்லாம் உனக்குக் கல்வி புகட்டிய ஆசிரியர்களையோ, கல்லூரியையோ மறந்துவிடாதே. "யாங்கு நீர் செல்லும் ஆங்கு நீர் சிறக்க" வேண்டுமென்று உங்களை உருவாக்கும் ஆசிரியரை, எங்கு நீ சென்றாலும்

அங்கெல்லாம் அவர்களை அறிமுகம் செய்ய லாம். எப்படி என்று எண்ணுகிருயா? உன் கல்வித் திறமையாலும் சீரிய குணங்களா லும் அவர்களை அறிமுகப்படுத்தலாம்.

மற்ருேர் மதிக்கத்தக்க சிறந்த அறி வும், சீரிய குணமும் படைத்த மாணவனுக இருப்பதொன்றே போதுமே ஆசிரியருக்கு.

என்மாணவ வாழ்க்கையிலே ஒரு சமயம் சந்தர்ப்பம் செய்த சதியாற் தம்பி! முதுகெலும்பற்ற குணத்தால் தம்பி! தவறு சில செய்தேன். அதனுல் நான் பட்டதுன் பத்தைச் சொல்ல முடியுமா? என்ன செய் வது? தவறு செய்துவிட்டேன் ஆனுல் அதையுணர்ந்து திருந்திவிட்டேன். இதை உனக்கேன் சொல்கிறேன்? தெரியுமா? நான் செய்த பிழையை நீயும் செய்யக்கூ டாது என்பதற்காக! உன் அன்பான ஆசிரியர்களின் உள்ளத்தை வருத்தக்கூ டாதென்பதற்காக! நீ மட்டுமல்ல உன் நண்பர்களுக்கும் கூறித் திருத்துவாயாக! நன் மாணுக்கனுக, சிறந்த குணசீலனுக உயர்ந்த அறிவாளியாக நீ திகழவேண்டு மென்பதே என்விருப்பம். கடிதம் நீண்டு விட்டது இத்துடன் முடித்துக் கொள்கி றேன்.

உன் அன்புள்ள அக்கா,
யோகம்.

## அறிவு விருந்து — விடைகள்

1. பீற்றர் பெர்சிவல்.
2. ஸ்ரீநிவாஸன்.
3. J. C.போஷ்.
4. 7 செக்கன்ஸ்
5. ரஷ்யா.
6. பின்லாந்து (Finland)
7. 151 அங்கத்தவர்கள்.
8. புதிய கல்வித்திட்டத்திற்கு எதிராக.
9. "இன் ஸான் யாக் உதா"
10. அலெக்ஸ் ஒல்மீடோ.

---

அண்டைவீட்டு ஏழை,பசியால் வருந்து வதைக் கண்டும் அவனைநோக்காது பாலும், பழமும், தேனும் கொண்டுபோய் விக்கிர கத்தின் தலையில் பொழிவோனின் பூசை யைக் கடவுள் ஏற்றுக்கொள்வாரோ? ஒரு போதும் ஏற்றுக்கொள்ளார்.

— வி. கலியாணசுந்தரர்.


Use

'ASOKA CHAKRA'

TILES

for your Roofings

Single Groove or Double Groove.

உங்கள் கட்டிடங்களுக்கு
ஒற்றைப்பீலி அல்லது இரட்டைப்பீலி
"அசோக சக்கர" ஓடுகளையே
பாவியுங்கள்.

Phone: 423

SUNDARAMOORTHY & SONS

Grand Bazaar, :: JAFFNA.

# உங்களுடன் ஒரு வார்த்தை

அன்பான வாசக நேயர்களே!

**வ**ணக்கம். இந்த மலரின் பொலிவையும் வனப்பையும், இதில் வெளியாகும் பல்வேறு சுவை படைத்த அம்சங்களையும், எழில் மிகுந்த படங்களையும் பார்வையிடும் உங்களுக்கு, இவ்விதமான ஒரு சிறந்த மலரை வெளியிடுவதற்கு எங்களுக்கு இருந்த 'துணிச்சலை'யிட்டு வியப்பு ஏற்படும் என்பதில் எமக்கு ஐயமில்லை. நாம் ஒரு மலரை இந்த அளவில் வெளியிட நிச்சயமாக ஒரு அசாதாரணத் துணிச்சல் இருக்கத்தான் வேண்டும் என்பதை நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம். இவ்வித துணிச்சலை எமக்கு அளித்தவர்கள் எமது மலருக்கு விளம்பரங்களை உதவிவரும் வர்த்தக ஸ்தாபனங்களே. 'விளம்பரம் செய்தல் வியாபாரத்துக்கு அழகு' என்பதில் நம்பிக்கை கொண்ட ஸ்தாபனங்கள் எமது யாழ்ப்பாணத்தில் குறைவாகவேயுள்ளன. விளம்பரஞ் செய்வதோடு, இலட்சியப் பத்திரிகைகளை வளர்க்க வேண்டும் என்ற பெருநோக்குள்ளவை இன்னும் குறைவாகவேயுள்ளன. ஆனால், நாம் ஓர் ஆண்டு மலரை வெளியிடுவதுபற்றி யறிந்து இம் மலருக்கு விளம்பரங்கள் தந்து எம்மை ஊக்குவிக்க முன்வந்த ஸ்தாபனத்தார்கள் அனைவரும் உங்கள் அன்புக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள். இத்தனை சிறப்பான மலரை உங்கள் கரங்களில் உலவச் செய்தவர்கள் அவர்களே. அவர்களிடத்தில் எமக்குள்ள பெருமதிப்புப்புலப்படுமாறு, அவர்களுக்கு எமது ஆதரவை நிரந்தரமாக்க நாமும் ஏன்-நீங்களுந்தான் - தவறக் கூடாது.

எமது மலருக்கு ஓர் உயர்ந்த மதிப்பை ஏற்படுத்துவனவாக உள்ளவை சில 'பெரிய' எழுத்தாளர்கள் உதவியுள்ள விடயங்களாகும். எமக்குத் தெரியாமலே, எமது பத்திரிகையின் வளர்ச்சியில் அளவற்ற அக்கறை கொண்டிருக்கும் இப் பெரியார்கள், நாம் கேட்குமுன்பே, முன்வந்து வேண்டிய விடயங்களை உதவினார்கள். இதன் பயனாக, எமது மலரில் அருமையான கவிதைகள் சிறுகதைகள் கட்டுரைகள் முதலியவை பொலிந்து விளங்குகின்றன. இப் பெரு மக்கள் காட்டிவரும் அன்புக்கும், செய்துவரும் உதவிக்கும் கைமாறாக, அவர்கள் எழுத்துலகில் பெற்றுள்ள கீர்த்தி மேலோங்க வேண்டும் என வாழ்த்துவதை விட, வேறு நாம் செய்யக்கூடியது என்ன இருக்கிறது?

மேலும், இம் மலருக்கென, எமது இளம் எழுத்தாளர்களிடையே சில போட்டிகளை நடாத்தியிருந்தோம். இப் போட்டிகளுக்கு வந்த விடயங்கள் தொகையிலும் தரத்திலும் திருப்தியைத் தராதிருந்த போதும், முதல் போட்டி யென்பதாலும், அவகாசம் போதிய அளவு கொடுக்கப்படாததாலும் எமக்கு ஏமாற்றத்தை யளிக்கவில்லை. பரிசுக்குரியவற்றைத் தேர்ந்தெடுப்பதில் எமக்குப் பேருதவியாகவிருந்த எமது கல்லூரி ஆசிரியர்களான திருவாளர்கள் ஷண்முக. குமரேசன், சி. நடராசா, வே. க. நடராசா ஆகியயோர்க்கும், பிரபல எழுத்தாளர்களான 'வரதர்' 'ஜீவா' ஆகியோர்க்கும், பரிசில்களை வழங்கிய திருவாளர்கள் ஷண்முக. குமரேசன், 'வரதர்', வே. க. நடராசா ஆகியோர்க்கும் இளம் எழுத்தாள உலகமும் நாமும் பெரிதும் கடமைப் பட்டவர்களாக இருக்க வேண்டும்.

இம் மலரில் குறிப்பிடத்தக்கதாக உள்ள ஓர் அம்சம், இம் மலரை அலங்கரிக்கும் அட்டைப்படமும், மற்றும் படங்களுமாகும். அட்டைப் படத்துக்கான சித்திரத்தை உதவியவர் எமது கல்லூரியில் கடமையாற்றும் திரு. செ. பரமநாதன் அவர்கள். உள்ளே வெளியாகும் அழகிய புகைப்படங்களை உதவியவர்கள் எமது பத்திரிகைக்காகச் சலியாது உழைத்து வரும் எமது படப்பிடிப்பாளர்களான A. பாலசிங்கமும், K. V. சாமியும் ஆவர். இவர்கள் எல்லாரினதும் உதவியால்தான், மலர் எழில் பெற்று விளங்குகிறது.

விடயங்களைச் சேகரிப்பதிலும், 'புறூவ்'களைத் திருத்துவதிலும் எமக்குச் சலியாது உதவி வந்த எல்லா உதவி ஆசிரியர்களையும், விளம்பரங்கள் சேகரித்துதவிய மு. தர்மரத்தினம், சி. க. இராஜேந்திரா ஆகியோரையும், எமது பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரான ஹமீம் அவர்களையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை. அவர்கள் செய்த தொண்டாலேயே, மலர் இவ்வளவு உயர்ந்த தரத்தையடைந்துள்ளது. எனது வேலையில் பெரும் பங்கைச் செய்து முடித்த நண்பன் கா. கணபதிப்பிள்ளையையும் நாம் மறப்பதற்கில்லை. எமது மேற்பார்வையாளர் அளித்து வந்துள்ள அரிய ஆலோசனைகளே வழக்கத்திலும் மேலான அமைப்புப் பொருந்தியதாக இம் மலர் விளங்கக் காரணமாக உள்ளன. இவர்கள் எல்லோருக்கும் எமது நன்றி.

இம் மலரின் அச்சுப் பதிப்பே, 'கலைவாணி அச்சக'த்தார்க்கு ஏற்ற விளம்பரமாக உள்ளது. அங்கு பணியாற்றும் அனைவரும், வெறும் கடமைக்காக வன்றி, உண்மையான அன்புடன் அளவுகடந்த அக்கறையுடன் இம்மலர் வேலைகளைச் செய்து முடித்மைக்கு நன்றி வணக்கம். — ஆசிரியர்

# Six Records Broken!

## The Inter-House Athletic Meet – a Great Success

— 'ONLOOKER' —

The Inter-house athletic sports meet (1959) concluded on the 4th of July, was a great success by all standards. The standard reached in most items, especially in the field events, was really high and the organisation of the meet particularly on the final day was exemplary. The hard work put in by the boys and the keen enthusiasm displayed by the House Captains paid dividends and as many as **six new records** were set up in this meet.

It is not my intention to give you a detailed review of the meet but I shall make a few comments on the outstanding performances of the meet. Among the Seniors **T. W. Jeyaseelan** was really outstanding in that he broke the Putt shot and the Discus Throw records and gained also the first place in the 220. He bettered the Discus Throw by 10 ft. 7 ins. and the putt shot by 2 ft. He became the Joint Senior Champion with **T. Tharmarajah** who tied for the first place also with 15 points. The latter, although he failed to break any record, did well in his events, especially in the pole vault. With intensive training he ought to rise to greater heights in the years to come. **V. Arasaratnam** ran a good double to win the mile and the 880 but his times were not creditable, perhaps due to the fact that he was not pressed much. The performance of **N. Segarajasingham** in the High Jump (5′ 8″) in bettering his brother Ethir's record by 3/4″ was finally adjudged to be the Best Performance in the Seniors.

Among the Inters, **V. T. Mahalingham,** the youngest of the 'Lingam' brothers, put his name on the record list by breaking the High Jump and the Putt Shot records, which were earlier set up by Ethirveerasingham and Jeyaseelan respectively. With a first place in the Long Jump, he too easily won the Intermediate Championship and was awarded the Best Performance Cup in his group. **P. Sathiyamoorthy** too was good in his field events and he broke the remaining



*Record Breakers All!*

Jeyaseelan's record in the Discus. **J. Winslow** was another fine athlete among the Inters and his performances in the pole vault and the Hurdles (80 yds) were far superior to those of his rivals. The Junior Championship was won by **Yogendran Arasaratnam** who won all the three events with great ease. I offer my congratulations to all these athletes on their outstanding performances!



*Champions All!*

The fact that all the outstanding performances were in the field events is of much significance. The standard reached in the track events was not very high and it fell far short of the performances of earlier years. Competition in certain events was not very keen and consequently some of the athletes did not come off with their best. In fact, it is true to say that the whole meet was dominated by a few athletes who with minimum effort were able to gain places. It was generally felt that more competitors must have been made to participate.



*Bettered his brother's Record*

in the various events and more of them should have been trained properly. I hope in the interest of athletics in our school, our House masters and Captains will pay greater attention both to the selection and to the training of the competitors next year.

As mentioned at the outset, the competition this year was much keener and the House Championship was not decided till the very last event for the day. I congratulate the House Champions (Percival & Wilkes) and the various competitors who gained places in the events. All those responsible for the organisation of the meet, especially the Acting Principal, the Prefect of games, Messers **E. S. Thambiah** and **V. D. Jeyaratnasingam** deserve all praise for the thoroughness and efficiency with which the meet was conducted. **Mr. E. S. Thambiah** should be further congratulated for the pains he took to make the March Past so impressive as it turned out to be.

# Full Results of the Meet

* *New Ground Record.*

*JUNIORS*

**100 yards —**

A. Y. Arasaratnam (W) - 13·4 Secs.
R. Manoheran (W)
S. Jeganathan (R)

**Long Jump —**

A. Y. Arasaratnam (W) - 12′ 11½″
R. Manoheran (W)
G. S. Baskaran (B)

**High Jump —**

A. Y. Arasaratnam (W) - 4′ 3¾″
S. Arungunanayagam (P)
A. Patkunarajah (W)

**Champion:** A. Y. Arasaratnam

*INTERS*

**100 yards —**

M. Radhakrishnan (W) - 11·9 Secs.
A. Krishnakumar (P)
V. Ganesh (P)

**220 yards —**

M. Radhakrishnan (W) - 30·1 Secs.
A. Krishnakumar (P)
S. Chandrabose (B)

**80 yards Hurdles —**

J. Winslow (W) - 13·1 Secs.
S. Ramachandran (W)
A. Krishnakumar (P)

**High Jump —**

V. T. Mahalingam (P) - 5′ 3¾″ *
J. Winslow (W)
V. Sivapothinathan (R)

**Long Jump —**

V. T. Mahalingam (P) - 16′ 8¾″
G. Rajendra (B)
R. Rajamahendran (P)

**Discus Throw —**

P. Sathiamoorthy (R) - 96′ 4″ *
M. Radhakrishnan (W)
V. Balasingam (B)

**Putt Shot —**

V. T. Mahalingam (P) - 30′ 3½″ *
P. Sathiamoorthy (R)
V. Balasingam (B)

**Pole Vault —**

J. Winslow (W) - 8′ 5¼″
G. Rajendra (B)
K. C. Pushpakaran (P)

**Champion:** V. T. Mahalingam

*SENIORS*

**100 yards —**

T. Tharmarajah (P) - 11·2 Secs.
C. Sripathy (P)
M. S. Jamal (B)

**220 yards —**

T. W. Jayaseelan (B) - 27·1 Secs
S. Pushparajah (W)
M. S. Jamal (B)

**440 yards —**

S. Mylvaganam (P) - 59·6 Secs.
K. Jeyaratnam (P)
S. Pushparajah (W)

**880 yards —**

V. Arasaratnam (R) 2 mts. 20 Secs.
C. Thanapalan (B)
A. Muthucumarasamy (W)

**One Mile —**

V. Arasaratnam (R) 5 mts. 26 Secs.
A. Muthukumarasamy (W)
C. Thanapalan (B)

**120 yards Hurdles —**

K. Jeyaratnam (P) 17·2 Secs.
R. Mahendran (P)
M. Karunakaran (W)

**Long Jump —**

K. Jeyaratnam (P) 18′ 7″
G. Manoheran (B)
S. Pushparajah (W)

**High Jump —**

| | | |
|---|---|---|
| N. Segarajasingam | (P) | 5′ 8″ * |
| C. Sripathy | (P) | |
| R. Mahendran | (P) | |

**H. S. & Jump —**

| | | |
|---|---|---|
| T. Tharmarajah | (P) | 40′ 8″ |
| C. Sripathy | (P) | |
| R. Mahendran | (P) | |

**Putt Shot —**

| | | |
|---|---|---|
| T. W. Jeyaseelan | (B) | 40′·0″ * |
| N. Segarajasingam | (P) | |
| T. Kanagaratnam | (W) | |

**Javelin Throw —**

| | | |
|---|---|---|
| T. Kanagaratnam | (W) | 130′ 5″ |
| J. V. Aiyadurai | (R) | |
| R. Sriharan | (R) | |

**Discus Throw —**

| | | |
|---|---|---|
| T. W. Jeyaseelan | (B) | 102′ 7″ * |
| R. Varatharajah | (P) | |
| P. Sri Ramachandran | (R) | |

**Pole Vault —**

| | | |
|---|---|---|
| T. Tharmarajah | (P) | 9′ $3\frac{3}{4}$″ |
| G. Manoheran | (B) | |
| N. Perinpanathan | (B) | |

**Champions:** T. W. Jeyaseelan
& T. Tharmarajah

*POST - SENIORS*

**100 yards —**

| | | |
|---|---|---|
| K. Mahendran | (B) | 11 Secs. |
| V. T. Sivalingam | (W) | |
| P. Ampalavanar | (B) | |

**120 yards Hurdles —**

| | | |
|---|---|---|
| V. T. Sivalingam | (W) | 16·9 Secs. |
| S. Selvarasa | (P) | |
| K. Mahendran | (B) | |

**440 yards —**

| | | |
|---|---|---|
| R. McIntyre | (R) | 58 Secs. |
| R. S. Kandasamy | (R) | |
| N. Shanmugaratnam | (B) | |

**Long Jump —**

| | | |
|---|---|---|
| K. Kanthasamy | (W) | 18′ 9″ |
| K. Mahendran | (B) | |
| S. Selvarasa | (P) | |

**Putt Shot —**

| | | |
|---|---|---|
| S. Sundaralingam | (W) | 37′ 6″ |
| M. Thuraiaiyah | (R) | |
| N. Shanmugaratnam | (B) | |

**Champion:** K. Mahendran

*OPEN*

**Obstacle Race —**

| | |
|---|---|
| P. S. Kanaganayagam | (R) |
| K. V. Ratnasingam | (P) |
| K. Vetharaniyam | (W) |

**Cycle Race —**

| | |
|---|---|
| J. Paramananthan | (W) |
| T. Kanagaratnam | (W) |
| S. S. Kulanayagam | (W) |

**Relay Champions:** Percival

**Best Performances:**

N. Segarajasingam (Senior) H. Jump
& V. T. Mahalingam (Inter) ,,

**House Championship:**

Percival - (139 pts.)
& Wilkes - (139 pts.)


*New Arrivals!* *Latest Books!!*

A Wide Range of Magazines to Suit All Tastes.

**Latest Penguins, Pelicans, Pans, Ace, Pocket Books on Literature, History, Politics, Geography, Fiction, Etc., Etc.**

CHILDRENS' BOOKS - A GOOD STOCK EXPECTED.

*Only a visit to us will convince you of our Choicest Selections.*

**T. THAMBITHURAI**

NEWS AGENT & BOOK SELLER [Estd. 1927]

226, Hospital Road : : JAFFNA.

நீங்கள்

அழகான புகைப் படங்கள்
எடுக்க விரும்புகிறீர்களா?

அப்படியானல்

புகைப் படக் கலையில்
பிரக்கியாதி பெற்ற
"ஞானம்ஸ்"
ஸ்ருடியோவிற்கு
விஜயம் செய்யுங்கள்.

GNANAMS STUDIO

அவர்கள் தான்

தற்காலத்திற்கேற்ப—நவீனகருவிகளைக்கொண்டு
நவீன முறையில்
புகைப்படம் பிடிக்கிறார்கள்

மறவாதீர்கள்: உங்கள் கல்யாண வைபவங்களுக்கும்,
மற்றும் எல்லா கொண்டாட்டங்களுக்கும் புகைப்படம்
பிடிக்கப் புகழ் பெற்ற ஸ்தாபனம் ஞானம்ஸ் ஒன்றே.

ஞானம்ஸ் ஸ்ருடியோ

17, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.



*For*

Your requirements of
CIGARETTES, MILK FOODS,
PROVISIONS, SUNDRY GOODS,
MOTOR SPARES, RADIOS
and other
ELECTRICAL APPLIANCES.

•

*Call at*

# THE JAFFNA CO-OPERATIVE STORES LTD.

Telephone Nos:
438, 537 & 370.

— JAFFNA —

Telegrams:
"LAKSHMI" Jaffna.

# New Aerated Water & Ice Manufactory

*Prop:* V. A. DURAYAPPAH

**VANNARPONNAI, — JAFFNA.**

*Insist on*

## Durayappah's SPECIALS

**Ice Supplied.** **Round the Clock service.**

**SPECIALS**

| | |
|---|---|
| **VIMTIM** | **SOLAR LIME** |
| **PINE APPLE** | **ORANGE BARLEY** |
| **MEDITO** | **GINGER BEER** |

Delivery Free. *Dial:* **364**

For
QUALITY
in
**PICTURE-FRAMING**

*Remember*

**JEZEEMA**
# PICTURE PALACE
**232, K. K. S. Road,**
**JAFFNA.**



மிஸ்கின்

# MISKIN

EXPERT IN Tailoring

Specialist in CUTTING

TAILORS

27, Grand Bazaar :: JAFFNA



*'Grams:* 'PRINTERS' *Dial:* **517** (3 Lines)

# VIVEKANANDA PRESS & BOOK DEPOT

- FINE ART PRINTERS
- CALENDAR MANUFACTURERS
- BOOK - SELLERS
- STATIONERS

Vivekananda Buildings, — JAFFNA.

*Branch:*

No. 230, Wolfendal Street :: COLOMBO.

PHONE: 79260 P. O. BOX: 853 GRAMS: "VIVEPRESS"

35 50


**SAREE**

தந்தி :
' சாறீஸ் '

*Specialists in*

EMPORIUM

உங்களுக்குத் தேவையான
சகலவிதமான பிடவைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

# சாறி எம்போறியம்

சேலைவகைகளுக்குப் பிரதானமானவர்கள்

222, காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்.

SAREES



DIAL : 281 CABLES : 'JEWELLERS'

உத்தரவாதமுள்ள பவுண், வைர நகைகளுக்கு

# தங்க மாளிகை

31 வருட நற்சேவையில் அமோகப் புகழ்பெற்ற இலங்கை, இந்தியாவின் மிகப் பெரிய

நகை வியாபாரிகள்

# எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

யாழ்ப்பாணம்

| கிளைகள் : | கொழும்பு, | திருச்சி, | சென்னை, | காயல்பட்டணம். |
|---|---|---|---|---|
| போன் : | 5658 | 49 | 2321 | 24 |



அச்சுப்பதிவு : கலைவாணி அச்சகம், 10, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிடுபவர் : யாழ்-மத்திய கல்லூரி இ. எ. சங்கத்துக்காக மு. தர்மரத்தினம்.

Dr. U. V. Swaminatha Iyer Library, Besant Nagar, Chennai-90


WHEN YOU THINK OF A RADIO,

*Think of :*

# M/s Sulaiman Kando & Bro.

We offer you a Wide Selection of
All Popular Makes of
Main & Battery Models for Demonstration.

✡ **Repairs** to all makes of Radio undertaken by a Technician with over 25 years of experience.

✱

No. 86, K. K. S. Road,

**JAFFNA.**

PHONE: 265

GRAMS: 'JAHAANS'







Phone: 640 Estd: 1951

# MALAYA CAFE

[Prop: M. K. KATHIRAVELU]

36, 38, Grand Bazaar,

— JAFFNA. —

*The most up-to-date*

## VEGETARIAN CAFE

**with a Wonderful Range of delicious varieties of**

**COOL DRINKS, FRESH MILK, SWEETS, Etc., Etc.**

*Orders Executed at Short Notice.*

இன்றைய தலைசிறந்த

## சைவ போசனமும்

குளிர்ந்த பானங்கள், பசும்பால், சிற்றுண்டிவகை முதலியன
எந்தநேரமும் கிடைக்கும்.

ஆடர்கள் குறித்த நேரத்தில் விசேஷமாகச் செய்துகொடுக்கப்படும்.

போன்: 640 ஸ்தாபிதம்: 1951

# மலாயா கபே

[உரிமையாளர்: எம். கே. கதிரவேல்]

36, 38, பெரியகடை, : : யாழ்ப்பாணம்.